

கல்கி
KALKI ஜூலை 3, 1955
4 அணா
மணியம்



கோட்டை கழற்ற வெட்கப்படுகிறார்
உள் எவ்வளவு உஷ்ணமாய் இருக்கிறது!
ஏய்! உன் கோட்டை எடு!
முடியாது!
ஏன்?
என் சட்டை கிழிந்து இருக்கிறது... இரண்டு மாதம் தான் ஆகிறது.
தவறாக துவைக்கப் பட்டிருக்க வேண்டும்
ஏன் அடித்துத் துவைப்பது தவறா?
ஆம். அடித்துத் துவைப்பதினால் நூலிழைகள் சோர்ந்து துணிகள் கிழிந்து விடுகின்றன. அடித்துத் துவைக்காமல் துணிகளை நிறைந்த நுரையுண்டாக்கும் ஸன்லைட்டில் சுத்தம் செய்.
அடித்துத் துவைத்ததினால் ஏற்பட்டது.
மிக நல்லது.
மோகனின் மனைவி
ஸன்லைட் உண்மையிலேயே அடித்துத் துவைக்காமல் சுத்தமாக்குகிறது. இப்பொழுது எங்கள் துணிகள் நீடித்திருக்கின்றன. ஆம், ஸன்லைட் பணத்தை மிச்சப் படுத்துகிறது.
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப் துணிகளை நீடித்திருக்கச் செய்கிறது.

மலர் 14
இதழ் 49

கல்கி

பொருளடக்கம்

மன்மத ஹு
ஆனி 19

1955 ஜூலை 3

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


Dralle
TALC
Powder
Finest
Musk
Soap
MADE IN INDIA BY
Dralle
பிரபல நடிகை ஸ்ரீமதி ராஜசுலோசனாவின்
அனுபவத்தை நீங்களும் காணலாமே!
"டிராலி மஸ்க் சோப்பில் பரிமள மிகுந்த வாசனை
யும், மிருதுவான சுத்திகரிப்பு தன்மையும் காண்கிறேன்.
டிராலி டால்கம் பவுடரில் புது மணமும்
புத்துணர்ச்சியும் காண்கிறேன்."
P.R. சுலோசனா



மலர் 14 | இதழ் 49

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மன்மத ௵ ஆனி 19

நேருவின் திக்விஜயம்

புகழ் பெற்ற ருஷ்யக் கிரெம்ளின் மாளிகையில், பழைய மன்னர்களின் அழகான விருந்து அறையில், நானது ஜூன் மாதம் இருபத்திரண்டாம் தேதி நமது பாரதப் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு அவர்களும் சோவியத் பிரதமர் புல்கானினும் சந்தித்துப் பேசி ஒரு மகத்தான கூட்டறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

பஞ்ச சீலக் கொள்கையை அங்கீகரித்து, உலக நாடுகளிடையே பரஸ்பர நல்லெண்ணத்தையும் உறவையும் வளர்க்கப் பாடுபடுவதில் முழு அக்கறை தெரிவித்து, இந்தக் கூட்டு அறிக்கையிலே நேருஜியுடன் தாமும் கையெழுத்து இட்டு விட்டார் ருஷ்யப் பிரதமர்.

நேருஜியின் ருஷ்ய விஜயத்தினால் விளைந்த ஒரு மாபெரும் நற்பலன் இது.

இதைப் போலவே போலண்ட் பிரதமரும் பஞ்ச சீலக் கொள்கையை ஊர்ஜிதப் படுத்தி நேருஜியின் சமாதான முயற்சிக்கு முழு ஆதரவு தந்து, கூட்டு அறிக்கையிலே கையெழுத்து நாட்டியிருக்கிறார்.

நேருஜியின் போலண்ட் விஜயம் தந்த பெரும் பலன் இது.

ஒவ்வொரு நாட்டுக்கும் அதனதன் ஆட்சியையும் முன்னேற்றத்தையும் உருவாக்கப் பூரண உரிமை உண்டு. பிறருடைய ஆக்கிரமிப்பு இல்லாமல் ஒவ்வொரு நாடும் தன் விதியைத் தானே நிர்ணயித்துக் கொள்ள உரிமையோடு வசதியும் வேண்டும். இந்த முறையில் பிற நாடுகளுடைய நேசமும், ஒத்துழைப்பும் தேவைப் படுகின்றன. எனவே, உலக நாடுகளிடையே பரஸ்பர நல்லுறவு இருக்குமானால், நாடுகள் அனைத்துமே அமைதியான சூழ்நிலையில் ஒன்றுக்கொன்று நேச முறையிலே உதவிக் கொண்டு மனித ஜாதியின் முன்னேற்றத்துக்குப் பாடுபடலாம்.

இந்த நோக்கத்தோடேயே நேருஜியின் சலியாத முயற்சியினால் இந்தியாவும் சீனக் குடியாட்சியும் முதலில் பஞ்ச சீலக் கொள்கையை வகுத்துக் கையெழுத்திட்டன. பின்னர் பர்மாவும், யூகோஸ்லாவியாவும் இதை அங்கீகரித்தன. பாண்டுங் மகாநாட்டில் இந்தப் பஞ்ச சீலக் கொள்கையே விரிவுபடுத்தப்பட்டு உலக அமைதியையும், உலக நாடுகளின் ஒத்துழைப்பையும் முன்னிட்டு, ஒரு கூட்டறிக்கை வெளியாயிற்று. இப்பொழுது ருஷ்யாவும், போலந்தும் இதையே ஆதரித்துச் சந்தேகத்துக்கு இடம் இல்லாத வகையில் தங்கள் நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் வெளியிட்டிருக்கிறார்கள். முப்பது நாடுகளுக்கு மேல் இன்று நேருஜியின் சமாதான சீல முயற்சிக்குப் பக்க பலமாக நிற்கின்றன.

தத்தம் உள்நாட்டு விஷயங்களில் பல்வேறு விதக் கொள்கைகளைக் கையாண்டாலும், பரஸ்பர சமாதானப் பாதையிலே உலகம் இனி நிச்சயம் முன்னேறும் என்று பூரணமாக நம்பலாம். ஏனென்றால், இப்பொழுது உலக நாடுகளிடையே அமைதிக்கு எது மார்க்கம் என்ற அறிவு முன் அனுபவத்தின் மூலம் நன்றாக ஏற்பட்டிருக்கிறது.

கடந்த ஹிட்லர் யுத்தத்தில், போர் புரிந்தே உலக சமாதானத்தை நிலை நாட்டி விடலாம் என்று வெட்டிக் கனவு கண்டார்கள். அந்த யுத்தமே கடைசி யுத்தம் என்று எண்ணினார்கள். ஆனால் அந்த யுத்தம் முடியும் முன்பே, அடுத்த யுத்தம் மூண்டு விடும் என்ற சூழ்நிலையும் அச்சமும் உடனடியாக ஏற்பட்டன. அதன்பின் உலக நாடுகள் ஒவ்வொன்றும் தன் தன் ராணுவ பலத்தை அதிகரிக்கத் தொடங்கியது. ராணுவ பலத்தின் மூலம் சாந்தியை நிலை நாட்டுகிறோம் என்று வல்லரசுகள்

சொல்லி, பழைய ஆயுதங்கள் போதாவென்று புதிய புதிய ஆயுத பலத்தை நாடின. அணு குண்டுப் பிசாசு ஜனித்தது. இந்தப் பிசாசும் கூட ஒரு குறிப்பிட்ட நாட்டின் ஏகபோக உடைமையாக, ஒரு தனிச் சொத்தாக இருந்ததா! இல்லை. "உங்கள் பிசாசுக்கு எதிர்ப் பிசாசு இதோ எங்கள் பிசாசு!" என்ற கணக்கில், ஜலஜ குண்டுப் போட்டி ஏற்பட்டது. இதன் பலனாக உலகில் பரஸ்பர பயமும் அவநம்பிக்கையும் யுத்த பீதியுமே பேய்போல் வளர்ந்து அதிகரித்து வந்தன.

ஆரம்பத்தில் யுத்தத்தின் மூலம் சாந்தி பெறலாம் என்று எண்ணியதும் பயனற்றுப் போயிற்று. பிறகு ராணுவ பலத்தினால் சாந்தி பெறலாம் என்று நினைத்ததும் பயனற்றுப் போயிற்று. இப்பொழுது தான் உண்மை புலனாக ஆரம்பித்திருக்கிறது. மக்கள் பலவித ஆசாரங்களைக் கொண்டு வாழலாம். அவரவர்கள் ஆசாரம் அவரவர்களுக்கு உரியது. பரஸ்பர ஒத்துழைப்புக்கு ஆசார வித்தியாசத்தினால் ஏதொரு தடையுமில்லை. மனுஷத் தன்மை ஒன்றின் மூலந்தான் உலகில் சமாதானத்தை நிலைநாட்ட முடியும் என்று வல்லரசுகள் கண்டு தெளிய ஆரம்பித்து விட்டார்கள். நேருஜியின் சமாதானக் கொள்கையிலே உள்ள தீர்க்க தரிசனம் அவர்களுக்குப் புலனாகத் தொடங்கி விட்டது.

சமாதானம் என்றால் அணு ஆயுத ஒழிப்பு, யுத்த ஒழிப்பு என்பது மட்டுமல்ல. ஒவ்வொரு நாட்டின் மக்களும் பிறரால் கேடு வரும் என்ற பயம் இன்றி, பிற நாடுகளின் நல்லுறவினாலும், பரஸ்பர உதவியினாலும் மானிடப் பண்பை வளர்த்து முன்னேற வேண்டும் என்பது சமாதானம் என்ற இலட்சியத்தின் பொருள்.

இதற்கு ஒரே வழி, உலக நாடுகளின் சேமமே. இதைக் கண்டு தெளிகிற நாடுகள் இதையே பிடிப்பாகப் பற்றி நிற்க வேண்டும் என்றும், நேருஜி தமது கரத்திலே தாங்கி நிற்கும் சத்திய தீபம் சுடர் விளக்காக நின்று சமாதான ஒளியை உலகுக்குக் காட்டும் என்றும் முழு நம்பிக்கையோடு எதிர்பார்ப்போமாக!

நாடெங்கும் பூரண மதுவிலக்கு

பாரத நாடு வெகு காலமாக இழந்திருந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றது. பாரத நாட்டில் நீண்ட காலமாக ஆதிக்கம் செலுத்தி வந்த அன்னியர்கள் அதிகார ஸ்தானங்களினின்று போய் விட்டார்கள். எனினும் பாரத மக்கள் பெற்ற சுதந்திரத்தின் பூரண பலனை அடைய வேண்டுமாயின், இன்னும் பல மகத்தான சீர்திருத்த முறைகளைக் கைக்கொண்டாக வேண்டும்.

அத்தகைய முறைகளில் மதுவிலக்கு ஒன்று என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இது ஏழை மக்களின் கையிலிருக்கிறது. குடிக்காமலிருக்கலாம், இருக்க முடியும். இருக்க வேண்டும் என்கிற உறுதி வேண்டும்.

மக்களின் உடலையும் உள்ளத்தையும் கெடுத்து, அவர்களுடைய பொருளாதார நிலையையும் சீர்குலைத்து வந்த மது பானத்தை ஒழிப்பதில் சென்னை ராஜ்யம் அகில இந்தியாவுக்கும் வழிகாட்டியிருக்கிறது. அதை அனுசரித்து, 1957-ம் வருஷம் அக்டோபர் 2-ம் தேதிக்குள் இந்தியாவில் உள்ள எல்லா ராஜ்யங்களும் பூரண மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்து விட வேண்டும். இவ்விதம் மதுவிலக்கு விசாரணைக் கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது என அறிகிறோம். பூரண மதுவிலக்குத் திட்டத்தை ஒத்திப் போடக் கூடாது என்று எல்லா இடங்களிலும் பொது மக்கள் அபிப்பிராயப் பட்டதாகவும் தெரிகிறது. எனவே, இன்னும் சில வருஷங்களில் பாரத நாடு முழுவதும் பூரண மதுவிலக்கு அமுலுக்கு வந்து விடுமானால், அது உலகத்துக்கு வழிகாட்டும் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கை சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு

இலங்கை இந்தியர் விஷயமாக இலங்கை சர்க்கார் அனுஷ்டித்து வரும் முறைகள் புத்த பிரான் காட்டிய வழிக்கும் மனித தர்மத்துக்கும் உகந்ததாக இல்லை என்று அடிக்கடி சொல்லக் கேட்கிறோம். இலங்கை சர்க்கார் இந்தியர்களின் எதிர்ப்பை லட்சியம் செய்யாமல் நிறைவேற்றிய பிரஜா உரிமைச் சட்டத்தைக் கூட, சரிவர அமுல் நடத்துவதில்லை என்ற உண்மை இதற்கு முன் பல தடவைகளிலும் இலங்கை நீதிமன்றங்களின் தீர்ப்புகளிலிருந்து வெளியாகியிருக்கிறது. இப்போது மீண்டும் இலங்கை சுப்ரீம் கோர்ட்டார் இலங்கை அதிகாரிகளின் அநீதியைச் சுட்டிக் காட்டியிருப்பதுடன், அந்த அதிகாரிகளை வன்மையாகக் கண்டித்தும் இருக்கிறார்கள்.

இலங்கைப் பிரஜா உரிமைப் பதிவு அதிகாரி தமது மனுவை நிராகரித்ததை ஆட்சேபித்து ஸ்ரீ வி. பரமசிவன் என்பவர் சுப்ரீம் கோர்ட்டாருக்கு அப்பீல் செய்திருந்தார். இதன் சம்பந்தமான விவரங்கள் இந்த இதழில் வெளியாகியுள்ள நமது இலங்கைக் கடிதத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீ பரமசிவனின் அப்பீலை விசாரித்த நீதிபதி, இலங்கைப் பிரஜா உரிமைப் பதிவு அதிகாரிகளின் நடவடிக்கைகளை அழுத்தந் திருத்தமாகக் கண்டித்துள்ளார். அந்த மனுதாரரை இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது வரையில் இலங்கை அதிகாரிகள் 1,36,116 பிரஜா உரிமை மனுக்களை நிராகரித்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. அவர்கள் அதிகாரிகளின் முடிவை ஆட்சேபித்து சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டிருப்பார்களாயின் பெரும்பாலானவர்களுக்கு.

அதிகாரிகளால் நீதி வழங்கப்படவில்லை என்பது வெளியாகியிருக்கும். லக்ஷக்கணக்கான மக்கள் ஒவ்வொருவரும் கோர்ட்டுக்குப் போக முடியுமா? நீதி என்னவென்று காட்டுவதற்கு நீதி மன்றம். அதை ஒப்புக்கொண்டு நிர்வாகம் நடத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

இந்திய சர்க்காரோ, இலங்கை இந்தியர்களோ எடுத்துக் காட்டும் தவறுகளுக்கு இலங்கை சர்க்கார் ஏதாவது நொண்டிச் சமாதானம் கூறலாம். ஆனால், உயர்தர நீதிபதிகளின் தீர்ப்புக்கு அவர்கள் என்ன சமாதானம் சொல்லி விட முடியும்!

‘கல்கி’ தீபாவளி மலர்

ஜூலை மாதம் பிறக்கும் போதே நமது அன்பர்கள் பலரிடமிருந்தும் தீபாவளி மலரைக் குறித்துக் கடிதங்கள் வர ஆரம்பித்து விட்டன. திருச்சியிலிருந்து ஒரு நேயர் எழுதுகிறார் :—

“ ‘அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன்!’ என்று முன்னதாகவே பாடினார் ஒரு வைஷ்ணவ பக்தர். அவரைப் போலவே உங்களிடமும் நான் இப்போதே ஒரு விஷயம் சொல்லி வைக்க வேண்டியிருக்கிறது. சென்ற ஆண்டு தீபாவளி மலர் எவ்வளவோ நேர்த்தியாக இருந்தாலும், அதன் சைஸ் காரணமாக நான்கு கல்கி இதழ்களைச் சேர்த்து வைத்துப் படிப்பது போன்றிருந்ததே தவிர, ‘கல்கி’ விசேஷ மலர் படிக்கிறோம் என்ற உணர்ச்சி ஏற்படவில்லை. அதனால் பழக்கப்பட்ட பழைய பெரிய சைஸிலேயே ‘கல்கி’ தீபாவளி மலரை இந்த வருஷம் வெளியிடும்படி கேட்டுக் கொள்கிறேன். தீபாவளிக்குச் சமீபத்தில் எழுதினால், ‘மலர் வேலை பெரும் பகுதியாகி விட்டது, இனிமேல் மலர் சைஸ் மாற்ற முடியாது’ என்று சொல்லி விடுவீர்கள். அதனால்தான் அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன்.”

சென்னை நேயர் இதே கருத்தை வற்புறுத்துகிறார் :—

“மனிதன் பழக்கத்துக்கு அடிமைப்பட்டவன். ‘கல்கி’ தீபாவளி மலர் விலை மிகக் குறைவாக இருந்தது என்றாலும் சென்ற வருஷம் ஏதோ குறை இருந்து கொண்டுதான் இருந்தது. அதற்கு முந்தைய வருஷ மலர்களில் எத்தனை கட்டுரைகள், கதைகள், சித்திரங்கள் வந்தனவோ, அவற்றில் மிகவும் குறைவாக வந்தாற் போல் தோன்றிக் கொண்டிருந்தது. எல்லாம், வருஷம் தோறும் அகல அளவில் ‘கல்கி’ மலரைப் பார்த்துப் பார்த்துக் கண்கள் பழக்கப்பட்ட கோளாறுதான். விலை சற்று அதிகமாக வைக்க நேர்ந்தாலும் பரவாயில்லை. சித்திரங்களும், விசேஷ அம்சங்களும் பெரிய அளவில் இருந்தால்தான் மலர் என்ற உணர்ச்சி ஏற்படும். அதனால் பழைய பெரிய சைஸில் இந்த ஆண்டு மலரை வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.”

நமது ஓவியர்களும் தீபாவளிமலரின் அளவு முன்னைப் போல் பெரிதாக இருந்தால்தான் தங்களுடைய கற்பனைக்கு இடம் ஏற்படும் என்று கருதுகிறார்கள். இதையெல்லாம் உத்தேசித்து 1955ம் ஆண்டுத் தீபாவளி மலரை முன் ஆண்டுகளில் வெளி வந்ததுபோல் பெரிய அளவில் வெளியிடுவதாகத் தீர்மானித்திருக்கிறோம். கட்டுரைகளும் கதைகளும் உயர்ந்த க்ளேஸ் நியூஸ் பிரிண்ட் காகிதத்தில் பிரசுரமாகும். மூவர்ணப் படங்களும், காட்சிகளும், கவிதை விளக்கங்களும், சித்திர ஓவியங்களும் அழகான ஆர்ட் காகிதத்தில் சிறப்பான முறையில் வெளியாகும்.

<u>அட்டைப்பட விளக்கம்</u>

திலகமிடும் சுந்தரி

“திலகம் கிடந்த
திருநுதலாய்!”

—முத்தொள்ளாயிரம்

தமிழ் நாட்டுப் பெண்களின் நெற்றியிலே துலங்கும் திலகத்தைக் கண்ணாரக் கண்டு அதன் அழகை வியந்திருக்கிறார் முத்தொள்ளாயிர ஆசிரியர்.

அதை மிக சுவாரஸ்யமான முறையில் வெளியிடுகிறார். சேர அரசன் மீது காதல் கொண்ட ஒரு நங்கை, தனது தோழியிடம் தன் உள்ளத்தைக் கொட்ட முயல்கிறாள். கூடவே, அந்தத் தோழி தன் உள்ளப் பாங்கை உணர்ந்து அனுதாபப் படுவாளோ என்ற ஐயமும் எழுகிறது. அங்கேயில் காதலி தன் தோழியைப் பாராட்டித் தன் வயப் படுத்திக் கொள்ளப் பார்க்கிறாள். ‘ஆகா! உன் நெற்றியில் திலகம் எவ்வளவு அழகாக இருக்கிறது!’ என்று சொல்லுகிறாள். ஒரு பெண்ணின் அழகை இன்னொரு பெண் பாராட்டுவதில் தூய்மையான அழகுணர்ச்சியும் துலங்கவே செய்கிறதல்லவா!

மங்கலமும், எழிலும் நிரம்பிய திலகத்தைக் கலையழகோடு நெற்றியிலே இடும் சுந்தரியைத் தென்காசிச் சிற்பத்திலே காணலாம்.

இந்த இதழின் அட்டையில் திலகம் இடுகிற நங்கையைச் சிற்ப முறையிலே சித்திரிக்கிறார் நமது ஓவியர் ‘மணியம்’.

என்ன சேதி?

சபாஷ் ருஷ்யா!


தவறு இழைத்து விடுவது சகஜம். தெரிந்தோ தெரியாமலோ நேர்ந்து விடுகிறது. ஆனல் அந்தத் தவறை உணர்ந்து வருத்தப்படுவது, வருத்தம் தெரிவிப்பது மிக உயர்ந்த பண்பாகும். இந்த உயர்ந்த பண்பு, தவறிழைக்கப் பட்டவன் உள்ளத்திலிருந்து கசப்பையும் கோபத்தையும் நீக்கி விடுகிறது. இது தனி நபர் விஷயத்தில் எவ்வளவு உண்மையோ அவ்வளவு தேசங்களின் விஷயத்திலும் உண்மை.

அமெரிக்காவின் கடற்படையைச் சேர்ந்த விமானத்தை, ருஷ்யா தனது பிரதேசத்தில் வந்து விட்டதாகக் கருதிச் சுட்டு வீழ்த்தி விட்டது. இந்தத் தவறு, அன்று வான மண்டலம் மப்பும் மந்தாரமுமாக இருந்ததால் நேர்ந்து விட்டது என்று ருஷ்யா வருத்தம் தெரிவித்திருக்கிறது. அது மட்டுமல்ல. ஏற்பட்ட நஷ்டத்தில் சரிபாதி நஷ்ட ஈடு செய்வதாகவும் ஒப்புக் கொண்டிருக்கிறது.

இந்தச் செய்தியை ருஷ்யாவின் வெளிநாட்டிலாக்கா மந்திரி மாலடோவ், அமெரிக்காவின் வெளிநாட்டிலாக்கா மந்திரி டல்லஸிடம் தெரிவித்திருக்கிறார். அமெரிக்க வெளி நாட்டிலாக்கா மந்திரி ருஷ்யாவின் இச் செய்கையைக் கண்டு தமது திருப்தியைத் தெரிவித்திருக்கிறார்.

போர்ச்சுகலின் விபரீதப் போக்கு

போர்ச்சுகல் விடுதலை இயக்கத்தை நசுக்கப் போர்ச்சுகல் சர்க்கார் கைக்கொள்ளும் முறைகள், தீயை அணைக்க எண்ணெய் வார்ப்பதற்கு ஒப்பாக இருக்கின்றன. சமீப காலத்தில் போர்ச்சுகல் பிரதேசத்திலே சத்தியாக்கிரகம் தீவிரமான கட்டத்தை அடைந்திருப்பதற்கு முக்கிய காரணம் போர்ச்சுகல் சர்க்காரின் அடக்குமுறைகள்தான். இனி அங்கு சத்தியாக்கிரக இயக்கத்தின் வேகம் குறையும் என்று எப்படி எதிர்பார்ப்பது? சரித்திரப் படிப்பினையையும் இந்தியாவில் பிரிட்டிஷ், பிரஞ்சுக்காரர்களின் நல்லுதாரணத்தையும் கவனித்துப் போர்ச்சுகல் சர்க்கார் தங்கள் போக்கை மாற்றிக் கொள்வார்கள் என்று பாரதத் தலைவர்களும் மக்களும் எதிர்பார்த்தனர். ஆனல், அத்தகைய விவேகம் போர்ச்சுகல் சர்க்காருக்கு ஏற்படவில்லை. ஆயுத வல்லமை பொருந்திய ருஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் முதலிய வல்லரசுகள் போட்டி போட்டுக் கொண்டு இந்தியாவின் நட்பை நாடும் இச்சமயத்தில் போர்ச்சுகல் அதிகாரிகள் இந்தியாவின் மனத்தைப் புண்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது பெரும் விந்தையே!



திரு எஸ். முகர்ஜி

நற்செய்தி

ஒரு தேசத்தின் ராணுவ பலம், யுத்த தளவாட முயற்சிகள் யாவும் ரகசியமாகவே இதுகாறும் ஒவ்வொரு நாட்டிலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவ் விஷயத்தில் ரஷ்யாவின் கெடுபிடி ரொம்பவும் பெயர் போனது. ருஷ்யாவுக்குள் என்னென்ன யுத்த முயற்சிகள் நடக்கிறதோ என்று வெளிநாடுகள் பயத்தோடும் சந்தேகத்தோடும் பார்த்து வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் ருஷ்யா உலகத்தையே பிரமிக்கச் செய்யும் காரியம் செய்தது. நமது பிரதமர் நேருவைத் தங்கள் அணுசக்தி உற்பத்திச் சாலைக்கு அழைத்துப் போய்ச் சுற்றிக் காண்பித்திருக்கிறார்கள் ருஷ்யத் தலைவர்கள். சுமார் மூன்று மணி நேரம் அந்த மாபெரும் யந்திரசாலையைப் பார்வையிட்டிருக்கிறார். இந்த வாய்ப்பு, ருஷ்யாவுக்கு விஜயம் செய்த வேறு எந்த ராஜதந்திரிக்கும் அவர்கள் அளித்ததில்லை! இது போதாது என்று இன்னொரு நற்செய்தியும் வந்திருக்கிறது.

உலகிலேயே மிக முன்னேற்றமடைந்த ஆகாயவிமானப்படைபெற்றநாடுருஷ்யா. இந்த விமானப்படை ஜூலை மூன்ரும்தேதி, வான மண்டலத்திலே போரிடத் தனக்குள்ள திறமையை ஒரு பெரிய கண்காட்சியாகச் செய்து காட்டப் போகிறது. இதற்கு நமது விமானப் படையின் தலைவர் ஏர்மார்ஷல் எஸ். முகர்ஜி அவர்களை வரவேற்றிருக்கிறது. அமெரிக்கா இன்னும் செய்து முடிக்காத பெரிய போர் விமானங்களை இப்பொழுது ருஷ்யா பெற்றிருக்கிறது. அவற்றை யெல்

லாம் பார்வையிட நமது ஆகாயப் படை தளபதிக்கு அழைப்பு அனுப்பியிருக்கிறது.

சமுதாய நலத் திட்டம்!

கம்யூனிட்டி பிராஜக்ட் என்றும், சமுதாய நலத் திட்டமென்றும் சென்ற இரண்டரை ஆண்டுகளாகக் காதில் வார்த்தைகள் விழுந்த வண்ணம் இருந்தன. இத் திட்டத்துக்கென்று தனி உத்தியோகஸ்தர்களும் விசேஷ வேலைகளும் நடைபெற்று வருவதாகக் கேள்விப்பட்டு வந்தோம். ஆனால் அந்தத் திட்டத்தின் கீழ் என்னென்ன வேலைகள் உருப்படியாக நடந்திருக்கின்றன என்பது இப்பொழுது புள்ளி விவரங்களுடன் வெளியிடப் பட்டிருக்கின்றது.

இந்தத் திட்டம் தொடங்கிய பிறகு இதுவரை 9,95,731 ஏக்கர் நிலம் அதிகப்படியாக விவசாயத்துக்கு எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் பல சின்னஞ் சிறு நீர்ப்பாசன வசதிகள் பெருகியிருப்பதால் தேசத்தில் பல இடங்களில் இரு போக விளைச்சல் சாத்தியமாகியிருக்கிறது. இதன் பயனாக வருஷத்தில் பல நாட்கள் வேலையற்றிருந்த விவசாயிகளுக்கு வேலை கிடைத்திருக்கிறது. நாட்டில் உணவு உற்பத்தி பெருகி, உணவுப் பஞ்சம் இந்த நாட்டில் நிலவியது என்பதைப் பழங் கதையாகவும் பகற்கனவாகவும் ஆக்கி விட்டிருக்கிறது! புதுச் சாலைகள் 16, 753 மைல் நீளத்துக்குத் தேசத்தில் அமைக்கப்பட் டிருக்கின்றன. கிராமங்களில் பல வீடுகள் செப்பனிடப்பட்டிருக்கின்றன. பல புது வீடுகள் எழுப்பப் பட்டிருக்கின்றன. இவற்றின் மொத்தத் தொகை 1,10,731 வீடுகளாம்.

இப்படிப் பல சாதனைகள் இந் நாட்டில் சென்ற இரண்டரை ஆண்டுகளில் நிகழ்ந்திருக்கின்றன. இதற்குக் காரணம் பொது ஜனங்களின் உற்சாகமான ஒத்துழைப்புத்தான். நமது சர்க்கார் இத் திட்டங்களுக்காக இருபது கோடி ரூபாய் மொத்தச்செலவு செய்திருக்கிறார்கள். அதில் சரி பாதி மக்கள் ஈடுபடுத்தியிருக்கிறார்கள். அப்படியானால் தேசத்தில் எத்தகைய விழிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை உணரலாம். தேசம் முன்னேற்றப்பாதையில் வெகு வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது என்பதில் என்ன சந்தேகம்?

விடைபெறும் பைஸி

நமது கப்பற் படை தளபதியாக இருந்த ரீஅட்மிரல் பைஸி தாய் நாட்டுக்குத் திரும்புகிறார். அதற்கு முன் அவர் சென்ற வாரம் சென்னைக்கு வந்திருந்து நமது சென்னைக் கப்பற் படை வீரர்களிடம் விடைபெற்றுக்கொண்டார்.



திரு பைஸி

இவருடைய முயற்சியின் பயனாக பம்பாய், ஜாம் நகர், கொச்சி முதலிய இடங்களில் கப்பற்படை வீரர்களுக்குப் பயிற்சிக் கூடங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. இப்பொழுது இங்கிலாந்திலிருந்து நமது பாரத சர்க்கார் புது போர்க் கப்பல்கள் வரவழைக்க ஏற்பாடு செய்திருக்கிறது.

இங்கிலாந்து செல்லும் திரு பைஸி அங்கு பிளிமத் கப்பற் படைக்குப் பிரதம சேனாபதியாகப் போகிறார். அங்கேதான் பாரத நாட்டுக்கு வரப்போகிற கப்பல்கள் கட்டப்படுகின்றன. நமது நாட்டிலிருந்த திரு பைஸியே, நமக்காகக் கப்பல் கட்டப்படும் இடத்துக்குத் தலைவராகப் போகிறார் என்பதில் நமக்கெல்லாம் மகிழ்ச்சி. நல்ல கப்பல்களாக நமது நாட்டுக்கு அவர் மேற்பார்வையிலேயே கட்டப்பட்டு வரும் அல்லவா?


ஹிந்து மதப் பிரசாரம்

அனைவரையும் பரம் பொருளிடத்தும், பரம்பொருளை அனைவரிடத்தும் காணுதலையே இலட்சியமாகக் கொண்டவர்கள் ஞானிகள். ஹிந்து தர்மத்தின் வாழ்க்கையிலே தன்னலமற்ற தொண்டெனும் தருமமே தலை சிறந்த அம்சம். எங்கும் பரந்த அன்பைச் செலுத்துவது ஒன்றே மார்க்கம்.

நமது தர்மத்தை மக்களிடையேயும் மாணவர்களிடையேயும் பரப்புவதற்காக, மதுரை ஆதீன இளவரசு திருப்பெருந் திரு திருவருள் தவயோக சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகளின் தலைமையில் 'ஹிந்து தர்ம பிரசார சங்கம்' தோன்றியிருக்கிறது. பூர்வாங்கக் கூட்டம் ஜூன் மாதம் 26ந் தேதி தியாகராய நகர் தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில் நடைபெற்றது. நிர்வாகக் குழுவில், பல அறிஞர்கள் அங்கம் வகிக்கிறார்கள்.


இந்தப் புதிய சங்கத்தின் திருப்பணியினால் சமய உணர்வு மேலும் மேலும் பெருகும் என்று எதிர்பார்க்கிறோம்.

நேருஜி ‘ஷஹ’ கொடுத்து விட்டார்




சதுரங்கத்தில் யுத்தப் பிசாசுக்கு இடமின்றி நேருஜி கட்டி விட்டார்.

சந்தேக நீக்கம்!



"தென் இந்தியா மீது ஹிந்தியைத் திணிப்பது சர்க்கார் நோக்கமல்ல. ஹிந்திக் கல்வியினால் மற்றப் பிரதேச பாஷைகளின் பரிபூரண வளர்ச்சிக்குத் தடை இல்லை." —ராஷ்டிரபதி

அவர் முயற்சி



திரு வி. கே. கிருஷ்ணமேனன் சீனாவை ஐ. நா. சபைக்குள் நுழைக்கப் பெரும் பிரயத்தனம் செய்கிறார்.

முன்னாள் பிரதமரின் வியாக்கியானம்

கொழும்பு, ஜூன் 25

இவ்வாரம் இலங்கை பார்லிமெண்டில் இந்தியர் பிரச்னையைப் பற்றிக் காரசாரமான விவாதம் நடைபெற்றது. இந்த விவாதம் இந்திய வட்டாரங்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை உண்டுபண்ணிய பொழுதிலும் அரசாங்கத்தின் அலட்சிய மனோபாவத்தை வெளிப்படுத்த உதவியதென்று கூற வேண்டும். பத்து லட்சம் இந்திய வம்சாவளியினர்களின் தலைவிதியையும் அண்டை நாட்டு உறவையும் பற்றி அதிமுக்கியமான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இலங்கைப் பிரதமருக்கு இதைவிட சங்கீதக் கச்சேரியில் சமூகம் கொடுப்பது முக்கியமாகத் தோன்றியது போலும்! ரத்மலானை விமான நிலையத்தில் நடைபெற்ற ஒரு மேனாட்டு சங்கீதக் கச்சேரிக்கு அவர் போய் விட்டார். மற்ற மந்திரிகளாவது விவாதத்தில் கலந்து கொண்டு எதிர்க்கட்சியினர் எழுப்பிய பிரச்னைகளுக்கும் குற்றச் சாட்டுகளுக்கும் பதிலளித்திருக்கலாம். கையில் தலையைப் புதைத்துக் கொண்டு இடித்த புளியைப்போல மௌனமாக உட்கார்ந்திருந்த இரண்டு மூன்று மந்திரிகளும் விவாதத்தில் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. "யார் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும், எங்கள் இஷ்டப்படித்தான் எதையும் செய்வோம்!" என்று அரசாங்கம் சொல்லுவதைப் போலிருந்தது அவர்கள் காட்டிய அலட்சியம்.

சர்க்கார் தரப்பில் ஸ்ரீ டட்லி சேனநாயகா பேசினார். சென்ற ஜனவரி ஒப்பந்தத்துக்குப்பின் அதற்குக் குதர்க்க வியாக்யானம் கொடுத்துப் பிரச்னையைக் குழப்பிய பெருமை இவரையே சேரும். அவர் செய்த கலாட்டாவை உத்தேசித்தே சென்ற வருட அக்டோபர் மாதம் இலங்கை இந்தியப் பிரதம மந்திரிகள் மறுபடியும்கூடி ஜனவரி ஒப்பந்தத்துக்கு எழுத்து மூலம் தெளிவான வியாக்கியானம் எழுதினார்கள். அதற்கு ஸ்ரீ டட்லியும் உடந்தையாயிருந்தார். டில்லியிலிருந்து திரும்பியதும் ஸ்ரீ டட்லி ஒரு புதிய வியாக்கியானம் கொடுத்து டில்லி ஒப்பந்தத்தை உடைக்கக் கட்சி கூட்டிக் கொண்டு வந்தார். இவ் வாரம் பார்லிமெண்டில் அவர் பேசிய பொழுது டில்லி ஒப்பந்தம் சரிவர அமுல் நடத்த முடியாதபடி குதர்க்க வியாக்கியானம் கொடுப்பது இந்திய ஹைகமிஷனர்தானென்று கூறி விட்டு, பாரதப் பிரதமர் நேரு ஹைகமிஷனரின் வியாக்கியானத்தை நிராகரித்து விட்டு இலங்கையின் வியாக்கியானத்தை ஏற்றுக் கொள்ளுவாரென்று நம்புவதாயும் சொன்னார். மேலும், "எங்கள் போக்குக்கு நேருஜி இசையா விட்டால் டில்லி ஒப்பந்தத்தை நிராகரித்து விடுவோம்" என்று ஸ்ரீ டட்லி சேனநாயகா பயமுறுத்தினார்.

ஸ்ரீ பீட்டர் கெனமென் பேசியபொழுது நிலைமையைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்:

"முதலில் இந்தியாவை நீங்கள் ஏய்க்கப் பார்த்தீர்கள். இந்தியா பதிலுக்குப் பதில் திட்டியது. இப்பொழுது ஒருவரையொருவர் திட்டிக் கொள்ளுகிறீர்கள். எல்லாம் ஒரே ஏமாற்று வித்தையாக இருக்கிறது. இதையெல்லாம் விட்டுப் பிரச்னையை ஆதியோடந்தமாக மறுபடி பரிசீலனை செய்து நேர்மையான ஒரு பரிகாரம் காண முயற்சிப்போம்" என்றார்.

இலங்கைப் பிரஜாவுரிமைக்கு மனுக் கொடுத்திருப்பவர்கள் எவ்வளவு அக்கிரமமாக நடத்தப்படுகிறார்களென்பதை இலங்கை சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஸ்ரீ கிரேஷியன் இவ்வாரம் எடுத்துக் காட்டியிருக்கிறார். அநியாயமாக உரிமை மறுக்கப்பட்ட ஸ்ரீ வி. பரமசிவம் என்பவரின் அப்பீலில் நீதிபதி ஸ்ரீ கிரேஷியன் தீர்ப்புக் கூறிய பொழுது பிரஜா பதிவு இலாகா உதவி கமிஷனர்கள் தங்களுடைய மகத்தான பொறுப்பை உணர்ந்து நீதி வழங்குவதாகத் தெரியவில்லையென்றும் அவர்கள் நடத்தும் விசாரணைகள் வெறும் கண் துடைப்பாகவும் கேலிக் கூத்தாகவுமிருக்கிறதென்றும் ஆணித்தரமான அபிப்பிராயம் தெரிவித்துக் கண்டித்தார். பத்து லட்சம் இந்தியர்களின் பிரஜாவுரிமை மனுக்கள் எவ்விதம் விசாரணை நடத்திப் பைசல் செய்யப்படுகின்றனவென்பதையும் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு எவ்வளவு அநியாயமாக உரிமை மறுக்கப்படுகிறதென்பதையும் நீதிபதி ஸ்ரீ கிரேஷியனின் தீர்ப்பு உணர்த்திக் காட்டுவதாயிருக்கிறது. இந்த லட்சணத்தில்தான் இந்தியா தங்களை ஏமாற்றுவதாக இலங்கை சொல்லிக் கொள்ளுகிறது. கண்ணாடி வீட்டிலிருந்து கொண்டு அடுத்தவர் மீது கல் எறிகிறார்கள்!

—ரஜனி



ஆலப்புழை பிரபல ஜவுளி வர்த்தகர் ஸ்ரீ விரையா செட்டியார் மருமகனும், தெய்வாத்துக்கரை பிரின்ஸிபல் முன்சீப் ஸ்ரீ க. பெத்தா செட்டியார், B.A., B.L. அவர்கள் சகோதரருமான திரு பத்மநாபன், B. A.க்கும் சென்னை வித்வான் வெங்கடராஜுலு செட்டியார் அவர்கள் சகோதரர் சமுகரங்கபுரம் பண்ணை நிர்வாகி ஸ்ரீ க. வெ. கிருஷ்ணசாமி செட்டியார் குமாரி திருமதி வெங்கட கிருஷ்ணவேணிக்கும் 10-6-55 வெள்ளியன்று மணமகன் இல்லத்தில் திருமணம் நடந்தேறியது. அவ்வமயம் பல பிரமுகர்கள் வந்திருந்து தம்பதிகளை ஆசீர்வதித்தனர். மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும் வாழ்த்துச் செய்திகளும் கிடைத்தன

வாழ்க பத்மநாபன் — வெங்கடகிருஷ்ணவேணி



நமது அதிதி

ஆந்திர முதன் மந்திரி திரு பி. கோபால் ரெட்டி அவர்களுக்குச் சென்னைப் பிரமுகர்கள் சென்ற 27-ம் தேதி மாடி தாசப்பிரகாசா ஹோட்டலில் விருந்துபசாரம் நடத்தினார்கள். சென்னை மேயர், நிதி மந்திரி சி. சுப்பிரமணியம், மற்றும் மந்திரிகள், நீதிபதிகள், உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், பிரபல வியாபாரிகள் ஆகியோர் விஜயம் செய்து சிறப்பித்தனர். நிதிமந்திரி சி. சுப்பிரமணியம் பேசுகையில் திரு கோபால் ரெட்டி சென்னையில் நிதி மந்திரி என்ற பதவிக்கே எப்படி வழி காட்டியாக விளங்கினார் என்பதைப் பாராட்டிப் பேசினார். சென்னை ஷெரீப் திரு கோதாரி வந்தனோபசாரம் கூறினார்.

—போட்டோ: கணேஷ்—



சக்கரவர்த்தித் திருமகன்

ராஜாஜி

75. வானரங்களின் களியாட்டம்

ஹனுமானைப் பார்த்து மகிழ்ச்சி மேலிட்ட வானரர்கள் மகேந்திரமலை மேல் கூடினார்கள். விருத்தனான ஜாம்பவான் வாயுபுத்திரனை அன்புடன் வரவேற்று “நடந்ததையெல்லாம் நமக்குச் சொல். எல்லாரும் அனுபவிக்கலாம். எப்படி தேவியைக் கண்டாய், அப்போது என்னவெல்லாம் நடந்தது, அவள் எப்படியிருக்கிறாள், உடல் நிலை மனோநிலை எல்லாவற்றையும்பற்றிச் சொல். ராவணன் எப்படி நடந்து கொள்ளுகிறான், அருமை ஆஞ்சனேயனே, எல்லாம் உள்ளபடி நமக்குச் சொல்லுவாய். அதன் மேல் நாம் இனி என்ன செய்ய வேண்டியது என்பதை யோசித்துத் தீர்ப்பதற்கு அனுகூலமாக இருக்கும்” என்றான்.

ஹனுமான் மனதால் சீதையைத் தியானித்து நமஸ்கரித்துவிட்டு அவர்களுக்கு விஷயம் சொல்ல ஆரம்பித்தான்.

“மகேந்திரமலை மேலிருந்து நான் ஆகாயத்தில் கிளம்பியது உங்களுக்குத் தெரியுமே. கிளம்பி சமுத்திரத்தைத் தாண்டி ஆகாயத்தில் சென்றுகொண்டிருந்தபோது திடீர் என்று கடலிலிருந்து முன் அங்கே இல்லாத ஒரு மலை கிளம்பிற்று. ‘ஓகோ! என்னைத் தடுப்பதற்கு இது ஒன்று ஏதோ நிமிர்ந்து என் வழியை அடைக்கிறது. இதை உடைத்து எறிய வேண்டும்’ என்று நிச்சயித்தேன். நிச்சயித்துப் பொன் மயமான அந்த மலையை என் வாலால் அடித்தேன். மலை அந்த அடியை வினயமாக வாங்கிக்கொண்டு மிக இனிய குரலில் ‘மகனே! நான் பகைவனல்ல. உன் தந்தையால் காப்பாற்றப்பட்டு நன்றி மறவாதவன் நான். என்னைக் கொல்ல வந்த இந்திரனுடைய வஜ்ராயுதத்தினின்று தப்பி உன் தகப்பனார் வாயுவினுடைய உதவியால் பறந்து கடலில் மூழ்கி மறைந்து பிழைத்திருக்கிறேன். முன் நாட்களில் மலைகளெல்லாம் சிறகு பெற்று உலகம் பயந்து நடுங்கும்படி இங்குமங்கும் ஆகாயத்தில் பறந்துகொண்டிருந்தன. அந்தக் காலத்தில் இந்திரன் உலகத்தின் பெரும் பயத்தைத் தீர்க்க மலைகளைத் துரத்தித் துரத்தி அவற்றின் சிறகுகளை வெட்டித் தள்ளினான். அப்போது வாயு பகவான் எனக்குச் செய்த உதவியால் அல்லவா நான் சிறகுடன் பறந்து கடலில் மூழ்கித் தப்பினேன்? அந்த உதவியை நான் மறக்கவில்லை. நீ ஆகாயத்தில் தாவி யாரும் செய்யாத கஷ்டமான காரியத்தைச் செய்கிறாய். உனக்குச் சிரமம் தீர வந்து நிற்கிறேன். என்மேல் கொஞ்ச நேரம் தங்கி இளைப்பாறிப் பிறகு ராம காரியத்தைப் பூர்த்தி செய்யச் செல்வாய்’ என்றான். நான் இந்த உபசாரத்தைப் பெற அவகாசமில்லை என்று சமாதானம் சொல்லி, மலையிடம் விடைபெற்றுக் கொண்டு தங்காமல் சென்றேன்.”

இவ்வாறே பிறகு ஒன்றன்பின் ஒன்றாக சமுத்திரம் தாண்டும்போது நடந்த நிகழ்ச்சிகள், லங்கா நகரம் பிரவேசித்தபோது நடந்த நிகழ்ச்சிகள், நகரத்திலும் ராவணனுடைய அரண்மனையிலும் தேடிச் சீதையைக் காணாமல் போனது, பிறகு அசோகவனத்தில் போய்ச் சீதையைக் கண்டது, ராவணன் வந்து சீதையை வருந்திக் கேட்டுக் கொண்டது, சீதை அவனைத்



துச்சமாக எண்ணிப் பேசியது, ராக்ஷசன் சீதையை பயமுறுத்தியது, ராக்ஷசிகள் சீதையைப் பலவாறு தொந்தரவு செய்து பயமுறுத்தியது, சீதை உயிர் நீக்க நிச்சயித்தது, பிறகு சீதையுடன் தான் பேசி ராமனைப் பற்றிச் செய்தி சொன்னது எல்லாம் ஒன்றும் விடாமல் ஹனுமான் வானர வீரர்களுக்குச் சொன்னான்.

சீதை தனக்குச் சொன்னதையெல்லாம் கண்களில் நீர் ததும்பச் சொன்னான். பிறகு வனத்தை அழித்ததையும், ராக்ஷச வீரர்களைக் கொன்றதையும், இந்திரஜித்தால் கட்டப்பட்டு ராவணன் முன் கொண்டு போகப்பட்டதையும், வாலுக்குத் தீ வைக்கப்பட்டதையும், நகரத்தைத் தான் கொளுத்தியதையும் எல்லாம் நடந்தவாறு முழுக் கதையும் வானரர்களுக்கு ஹனுமான் சொன்னான்.

இம்மாதிரி கட்டங்கள் வரும்போது வால்மீகி ராமாயணத்தில் ஒன்று நாம் காண்கிறோம். முன் நடந்த நிகழ்ச்சிகளை ஏதேனும் ஒரு பாத்திரம் வழியாகத் திரும்பச் சொல்ல நேரும் இடங்களில் தயங்காமலும் ஏதும் விடாமலும் எல்லா நிகழ்ச்சிகளையும் மிக அழகாக மறுபடியும் கவி பாடுகிறார். பாராயணமாகப் படிப்போருக்கு இது மிக ஆனந்தம் தருகிறது. விஸ்தார காவியங்களில் இது ஒரு தனி அழகு. இங்கே நான் அந்த மாதிரி நடந்ததையெல்லாம் மறுபடியும் ஹனுமான் வாயில் வைத்துத் தமிழில் சொல்லுவது சரியாக இராது. அதிகம் நீண்டுபோகும். படித்ததையே படிக்க வேண்டியதாகும். அது இந்தக் காலத்தோருக்கும் பிடிக்காது!

ஏதேனும் அபாயம் தீர வேண்டும்

அல்லது எடுத்த காரியம் ஏதேனும் வெற்றிகரமாக நடைபெற வேண்டும் என்று விரும்புகிறவர்கள் சுந்தர காண்டத்தை பாராயணம் பண்ணுவது நம்முடைய வழக்கம். கடலைத் தாண்டும் போதும் பிறகும் நடந்த வரலாற்றை ஹனுமான் எடுத்துச் சொல்லும் இந்த அத்தியாயத்தை பாராயணம் செய்தால் சுந்தரகாண்டம் முழுதும் பாராயணம் செய்த பலனை அடையலாம்.

நடந்த நிகழ்ச்சிகளை ஒன்றும் விடாமல் விஸ்தாரமாகச் சொல்லி முடித்து ஹனுமான் சொன்னான் :

“நம்முடைய முயற்சி இவ்வாறு சுபமாக முடிந்தது. ஆனால் இதற்கெல்லாம் மூல பலம் சீதையின் சீலமே, அவள் சக்தியே என்பதை நாம் உணர வேண்டும். என் மனத்தில் அந்தப் புனித தேவியின் காலடியில் இன்னும் நான் பணிந்தே நிற்கிறேன். சீதையை நினைக்கும் போது அவளை இந்த ராக்ஷசன் எவ்வாறு பிடித்துத் தூக்கிச் செல்ல முடிந்தது, அந்தக் கணமே எரிந்து சாம்பலாகப் போயிருக்க வேண்டுமல்லவா என்று வியக்க வேண்டி இருக்கிறது. ஆனால் ராவணனுடைய தபோபலமும் பெரிது. அது அவனை ஓரளவு இன்னும் காத்துவருகிறது. ஆயினும் இஷ்டப்பட்டால் சீதை அவனை எரித்தே யிருப்பாள். தன் கணவன் ராமசந்திரனால் இவன் தண்டனை அடைய வேண்டும் என்று சகித்துக் கொண்டிருக்கிறாள். இப்போது உங்கள் யோசனை என்ன? இப்போதே லங்கை சென்று ராவணனை வதம் செய்து லங்கையையும் அரக்கர் கூட்டத்தையும் நாமே அழித்து விட்டு சீதையையும் அழைத்துக் கொண்டு ராமனிடம் தேவியைச் சமர்ப்பித்துச் சந்தோஷிக்கச் செய்யலாமா? இதைப் பற்றி நீங்கள் யோசிக்க வேண்டும்.

“நமக்கு இதைச் செய்யும் சக்தி இல்லாமல் இல்லை. நான் ஒருவனாகவே அந்த கூட்டத்தை அடையாளமின்றி அழித்து விடுவேன். ஜாம்புவான் ஒருவரே போதும், அந்த அரக்கர் சேனை முழுவதையும் அழிக்க. வாலி புத்திரன் யுவராஜா ஒருவன் போதாதா அவர்களை சம்பூரணமாக வதம் செய்வதற்கு? பனஸன், நீலன் இவர்களுடைய பராக்கிரமம் போதுமே, லங்கையை ராவணனையும் சேர்த்து அழித்து வெற்றியுடன் திரும்பி வர. மைந்தன், த்விவிதன் இந்த அசுவினி புத்திரர்கள்



இருவருமே சென்று இந்தக் காரியத்தை எளிதில் முடித்து விட்டுத் திரும்புவார்கள். பிதாமகருடைய வரங்களைப் பெற்றிருக்கிற இவர்கள் வெகு எளிதில் ராவணனைக் கொன்று வெற்றி முழக்கத்துடன் திரும்புவார்கள்.

"இப்படி நமக்குள் பலர் இருக்கிறார்கள், ராவணனையும் அவன் அரக்கர் கூட்டத்தையும் அழிக்க வல்லவர்கள். லங்கையில் நான் முழக்கம் செய்துமிருக்கிறேன். 'ராம தூதன் நான். சுக்ரீவனுடைய மந்திரி. உங்களை வதம் செய்ய வந்திருக்கிறேன்' என்று கர்ஜித்திருக்கிறேன். துஷ்டன் ராவணனுடைய நந்தவனத்தில் சிம்சுபா மரத்தடியில் ராக்ஷஸிகளால் சூழப்பட்டுச் சிறைபட்டுக் கிடக்கிறாள் வைதேஹீ என்கிற அந்த பதிவிரதா தேவி. மேகங்களால் மூடப்பட்டுத் தெரிந்தும் தெரியாமலுமிருக்கிற சந்திரனைப் போல் அசோகவனத்தில் சிறைப்பட்டுக் கிடக்கிறாள். எப்போது ராமன் வருவான் வருவான் என்று அவன் தியானமாகவே வேறு எதையும் சிந்திக்காமல் வாடி வதங்கி தவமிருந்து வருகிறாள். கொடிய ராக்ஷஸிகள் அவளைத் துன்புறுத்திக் கொண்டிருப்பதை இந்தக் கண்களால் பார்த்தேன். காட்டில் துன்புறுத்தப்பட்ட மானைப் போல் அந்த வனத்தில் அவலக்ஷண சொரூபங்களான அரக்கிகளின் மத்தியில் அகப்பட்டுக் கொண்டு வருந்தி வருகிறாள். அவளுடன் நேரில் நின்று பேசிச் சமாதானப் படுத்தினேன். 'ராம லக்ஷ்மணர்கள் வருவார்கள். ராமனால் ராவணன் சீக்கிரமாகவே வதம் செய்யப்படுவான்' என்று சொல்லியிருக்கிறேன். யோசித்து இனி செய்ய வேண்டியது என்னவென்று தீர்மானியுங்கள்" என்றான்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த அங்கதன் கோபக்கொதிப்புடன் குதித்தெழுந்து "நான் ஒருவனே போதும். அப்படியிருக்க நாம் இத்தனை வீரர்களும் இருக்கிறோம். இவ்வளவு நாட்களானபின் நாம் சீதையை அழைத்துப் போகாமல் ராமனிடம் வெறுங் கையாகத் திரும்பிச் செல்வது சரியல்ல. லங்கைசென்று அரக்கர்சேனையையும்ராவணனையும் வதம் செய்து சீதையுடன் கிஷ்கிந்தை திரும்புவோம்" என்றான்.

யுவராஜன் சொன்னதைக் கேட்ட ஜாம்புவான் மெதுவாகப் பேசினான்.

"அப்படியல்ல, என் அன்புக்குரிய ராஜகுமாரனே! நாம் ராம லக்ஷ்மணர்களிடம் விஷயத்தையெல்லாம் சொல்லி அதன்மேல் அவர்கள் சொல்லுவது போல் செய்ய வேண்டும். ராகவனுடையகாரியத்தை அவர் எண்ணத்தின்படி முடிவு செய்ய வேண்டும். அதுவே முறை" என்று மிக முதிர்ந்த அறிவுள்ள ஜாம்பவான் சொன்னான்.


இதுவே சரி யென்று வானரக் கூட்டம் ஹனுமான் அங்கதன் எல்லாரும் உள்பட ஒப்புக் கொண்டார்கள். அங்கிருந்து ஆகாயத்தில் கிளம்பி கிஷ்கிந்தை நோக்கி மிக வேகமாகச் சென்றார்கள்.

• • •

வானர ராஜனுடைய நந்தவனத்துக்கு அருகில் இறங்கினார்கள். அந்த வனத்தில் புகுந்து தேன்குடித்து, பழங்கள் உண்டு, காவற்காரர்கள் என்ன சொன்னாலும் கேட்காமல் அவர்களையும் அடித்து விரட்டி எதேச்சையாக நடந்து கொண்டு தோட்டத்தையும் நாசம் செய்தார்கள். அவர்கள் செய்த களியாட்ட அட்டகாசத்தைப்பொறுக்காத ததிமுகன், அவன் நந்தவனத்துக்குக் காவலதிகாரியும், சுக்ரீவனுடைய மாமனும், வேகமாகச் சென்று அரசனிடம் போய் "நந்தவனம் பாழாய்ப் போயிற்று. தெற்கே சென்ற வானரர்கள் திரும்பி வந்தவர்கள் அங்கே இறங்கி வெகு மோசமாக நடந்து கொள்கிறார்கள். நான் என்ன சொல்லியும் கேட்கவில்லை. என்னையே அடித்தும் குத்தியும் புறக்கணித்து அவமானப்படுத்தி இஷ்டப்படி தேன்குடித்து, பழங்கள் பறித்துத் தின்று விட்டுப் போதையாகக் கிடக்கிறார்கள். செடிகளையும் கொடிகளையும் நாசமாக்கி விட்டார்கள். இவர்களை உடனே அரசன் தண்டிக்க வேண்டும்" என்றான்.


சுக்ரீவன் விஷயத்தைக் கண்டு கொண்டான். 'ஹனுமானும் ஜாம்புவானும் அங்கதனும் காரியசித்தியடைந்து வந்து விட்டார்கள், வெற்றி வெறியில் இவ்வாறு செய்திருக்கிறார்கள்' என்று உணர்ந்து கொண்டு லக்ஷ்மணனுக்கு விஷயத்தைச் சொன்னான்.

"ததிமுகனே! உடனே அவர்கள் அனைவரையும் இவ்விடம் வரச்சொல்" என்று சுக்ரீவன் உத்தரவிட்டதும் ததிமுகனும் நிலைமையை உணர்ந்து மிக வேகமாக வானரர்கள் இருந்த இடம் ஆகாய மார்க்கமாகவே சென்று அவர்களுக்கு அரசன் உத்தரவைத் தெரியப் படுத்தினான்.



BINACA
நீங்கள் விவேகமுள்ள தாய்தானா?
பழங்களின் மணம் கமழும் டூத்பேஸ்ட்


காங்கிரீட் ரோடுகளினால்
ஏற்படும் மூன்று சகாயங்கள்
• வழுக்குவதை தடை செய்கிறது • இரவில் தெளிவான பார்வை ஏற்படுகிறது • டிரைவிங் செய்வதில் களைப்பு ஏற்படாமலிருக்கிறது
இவைகளும், அத்துடன் காங்கிரீட்டின் நெடுநாள் உழைப்பும், அதன் குறைந்த முதல் செலவும், அதன் பின் செப்பனிடும் குறைவான செலவும், ரோடுகள் அமைப்பதற்கு மிகவும் சிறந்தது.
நீலகிரி பிராண்ட்
இந்த புகழ் பெற்ற ஏ சி சி சிமெண்ட் காலமெனும் சோதனையில் தேறியது.
ஏ சி சி
தி சிமெண்ட் மார்க்கடிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்



ரவிசந்திரிகா

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்"

என்று வள்ளுவன் கனவு கண்டான் தமிழுலகைப் பற்றி. ஆனால் நடப்பது அத்தனையும் வேறு. கன்னி ஒருத்தியும், காளை ஒருவனும் அன்பின் பிணைப்பிலே கட்டுண்டு, நட்புரிமை பூண்டு நாட்டில் உலவ நேரிட்டால், உலகமானது அவர்களைக் கூடா ஒழுக்கத்தில் திரிபவர்கள் எனக் கதை கட்டிச் சிரிக்கிறது; ஏளனம் செய்து எள்ளி நகையாடுகிறது. ஆனால் நட்புரிமை பற்றுக் காமத்தில் உழலும் கயவர்களைப் பற்றிச் சிந்தியாது இவ்வறியா உலகம்.

இதைச் சுட்டிக் காட்டிச் சூடு கொடுக்கும் வகையில் ஆசிரியர் சோமு அவர்கள், ரவீந்திரன், சந்திரிகாவோடு எங்ஙனம் பழகுகிறான் என்பதை அவன் டாக்டரிடம் கூறுவதாகக் கூறுகிறார். அவற்றினைப் படிக்கும் போது உலகை உணரும் நெஞ்சாயின் சிந்தித்துப் பார்க்கும். காமத்துக்கு அஞ்சும் ரவீந்திரன் போன்ற உணர்ச்சி மிக்க அன்பின் பிடியிலே கட்டுண்டவர்களை நச்சுப் பாம்பு நாகரத்தினம் போன்றவர்கள் தூற்றக் கிளம்பி விடுதல் இவ்வுலகின் இயற்கையாகி விட்டதை எண்ணும் போது நெஞ்சில் வேதனை மோதுகிறது.

ஆணோடு பெண்ணும், பெண்ணோடு ஆணும் தனித்துப் பழக வேண்டி வரும் எதிர் காலத்தில் இதுபோன்ற நவீனங்கள் அவசியம் தேவை. ஆண்கள் ரவீந்திரர்களாகவும், பெண்கள் சந்திரிகாவாகவும் காமத்தை அடைத்துப் பூட்டிவிட்டுக் காதலின் வாயிலைத் திறக்க வேண்டும்.

தெத்துணப்பட்டு
24—6—55

ப. கிருஷ்ண ரெட்டி

★

பாமரப் பாடல்கள்

ரவிசந்திரிகா என்னும் நவீனத்தை ஆவலோடு படித்து ரஸித்து வரும் ஆயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். ஒரு சிறு விஷயத்தை ஊர்ஜிதம் செய்து கொள்ளவே இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

ரவிசந்திரிகா நவீனத்தில் 'மூன்னு மூலை யிலே', 'கண்டெடிக் கண்ணே!' 'மீலைப்பழனி வேலவனே' முதலிய அற்புதமான நாட்டுப் பாடல்களைச் சேர்த்து எழுதுவதைப் பெரிதும் வரவேற்கிறேன். இந்தப் பாடல்கள் அந்தந்த வட்டாரங்களில் உலவி வரும், மக்களிடையே வழங்குகிற நாடோடிப் பாடல்களிலிருந்து சேகரித்தவைதானா! இதுபோன்ற பாடல்கள் இன்னும் பல இந்த நவீனத்தில் இடம் பெறுமானால் நம்நாட்டில் தொழிலாள மக்களிடையே வழங்கும் கவிச் செல்வத்தை மங்காமல் பாதுகாத்த பெருமை தங்களைச் சாரும்.

சென்னை
24—6—55

சிவசங்கரன்

[ரவிசந்திரிகாவில் வரும் நாடோடிப் பாடல்கள் அந்தந்த வட்டாரங்களில் இன்னும் வழங்கி வருகிற தொன்மையான கிராமப் பாடல்களே. நன்றி. —ஆசிரியர்.]

★

பம்பாய்வாசிகள் படும் அவதி

பம்பாய் நகரில் மதராஸிகள் ஏராளமாக வேலை நிமித்தம் போய் வசித்து வருகின்றனர். பம்பாயில் மாதுங்கா ஒரு மதராஸி நகரமாகவே இருக்கிறது. தினசரி அநேகம் மதராஸிக் குடும்பங்கள் பம்பாய்க்குப் போய்க் கொண்டும், வந்து கொண்டும் இருக்கிறார்கள். இக் குடும்பங்கள் அநேகமாகத் தஞ்சை, திருச்சி, மதுரை அதற்கப்பாலுள்ள பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே. இவர்கள் குழந்தை குட்டிகளுடன் ரயிலில் பிரயாணம் செய்யும் அவதி சொல்லி முடியாது. சென்னையில் ரயில் மாற்றுவதற்குள் இவர்கள் படும் செலவும் துன்பமும் சொல்லி முடியாது.

ஒருவாறு இப் பிரதேசத்திலிருந்து வருவோருக்குக் கொஞ்சம் கஷ்டம் குறையக் கீழ்க்கண்ட யோசனையை, ரயில்வே அதிகாரிகளுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திருச்சியிலிருந்து பம்பாய் விழுப்புரம் கார்டு லைன் மார்க்கமாக 1356 மைல்கள் மெயில் சார்ஜ் ரூ. 40—11—0.

திருச்சியிலிருந்து பம்பாய்க்கு ஈரோடு ஜோலார்ப்பேட்டை மார்க்கமாக 1392 மைல்கள். மெயில் சார்ஜ் ரூ. 41—10—0.

ஈரோடு மார்க்கமாகச் செல்லுவதற்கு டிக்கட் கட்டணம் கூடப் பதினைந்து அணுத்தான் ஆகிறது.

ஆகையால் திருச்சியிலிருந்து பம்பாய்க்கு ஈரோடு மார்க்கமாக ஒரு எக்ஸ்பிரஸ் வண்டி விடும்படி ரயில்வே அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறேன். இது முடியா விட்டால் வாரத்துக்கு இரு முறையோ அல்லது ஒரு முறையோ திருச்சியிலிருந்து மேற்கண்டவாறு ஒரு எக்ஸ்பிரஸ் வண்டி விடலாம்.

இதுவும் முடியா விட்டால், திருச்சி பங்களூர் எக்ஸ்பிரஸில் நேராகப் பம்பாய் செல்லும் சில வண்டிகளைச் சேர்த்து இவைகளை ஈரோடில் கொச்சி எக்ஸ்பிரஸிலும், அரக்கோணத்தில் பம்பாய் எக்ஸ்பிரஸிலும் சேர்க்க வேண்டும். ரயில்வே அதிகாரிகள் பம்பாய் வாசிகள் படும் அவதிக்குப் பரிகாரம் தேட முயற்சிப்பார்களா!

திருச்சி
19—6—55

கே. எம். கமலா

படித்துப்பாருங்கள்

கவிமணி நினைவு மலர்

"கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் பாடல்கள் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெருஞ் செல்வம், அரிய செல்வம், தெவிட்டாத அமிர்தம், ஆயுள்நாள் முழுதுமே தமிழ் மகன் தன்னுடன் வைத்துக் கொண்டு அனுபவிக்க வேண்டிய வாடாத கற்பகப் பூச்செண்டு" என்று கவிமணியின் கவிதைச் சிறப்பை ரஸிகமணி டி. கே. சி. அவர்கள் பாராட்டி யிருக்கிறார்கள். 'கண்ணாரக் காண ஒரு கவிஞர்' என்று போற்றி யிருக்கிறார்கள். நாஞ்சில் நாட்டு இக் கவிஞரின் நினைவாக ஒரு மலர் வெளியிட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டுக்கு 'மலரும் மாலையும்' வழங்கிய இந்தக் கவிஞர் பெருமானுக்கு நினைவு மலர் சூட்டி அஞ்சலி செலுத்தி யிருக்கிறார்கள்.

"இந் நாட்களில் பாடிய கவிஞர்களுக்குள் வேலைப்பாடு நன்றாக அறிந்த கவிஞர், அதிலும் வெண்பா பாடக் கூடியவர் தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் தான் என்று டி. கே. சி. எனக்கு அவர்களை அறிமுகம் செய்தார்கள். டி. கே. சி. அவர்களின் மதிப்பைப் பெற்ற அவர்களிடம் எனக்கு அளவற்ற மதிப்பு" என்று ராஜாஜி அவர்கள் "என் ஆசை" என்ற கட்டுரையில் எடுத்துக் கூறி யிருக்கிறார்கள்.


"இருபதாம் நூற்றாண்டில் தமிழ் வளர்த்த பெருமை கவிமணி தேசிக விநாயகம் பிள்ளைக்கு உரியதாகும்" என்று பேராசிரியர் திரு ரா. பி. சேதுப் பிள்ளையவர்கள் தமது கட்டுரையில் கூறி யிருக்கிறார்கள். 'கல்கி' ஆசிரியர் திரு சோமு அவர்கள் திருச்சி அகில இந்திய ரேடியோவின் நிகழ்ச்சி நிர்வாகஸ்தராக இருந்த போது, புத்தேரிக்குச் சென்று கவிமணியின் குரலை ரேடியோவுக்காக ஒலிப்பதிவு செய்த சம்பவத்தை ரஸமாக எழுதி யிருக்கிறார். டாக்டர் எஸ். சோமசுந்தர பாரதியார், டாக்டர் பா. நடராஜன், திரு. பெ. தூரன், திரு. மு. வரதராசனார், திரு. எ. கே. செட்டியார், திரு பா. சொக்கலிங்கம், திரு தே. ப. பெருமாள், திரு டி.கே. சண்முகம், திரு தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் மற்றும் பல அறிஞர்களும், கலைஞர்களும் கவிமணியின் கவிதைத் திறனைப் பற்றிச் சுவையோடு எழுதியிருக்கிறார்கள்.

கவிமணி நினைவு மலர்: கிடைக்குமிடம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை—1 விலை ரூ. 2—0—0.

பாலு சகோதரர்களின் கலைக்கூட மலர்

தமிழகத்தில் திருக்குறளை அறியாதவர்கள் இருக்க முடியாது. திருக்குறள் பாக்கள் பொதுவாக நோக்குமிடத்து மனத்தினால் மட்டும் உணர்ந்து அனுபவிக்கத் தக்க உண்மைகளைக் கொண்டவை. அவைகளுக்குச் சித்திர விளக்கம் கொடுக்கும் தனிப்பெரும் பேறு பாலு சகோதரர்களுக்குக் கிட்டியது! குறள் மட்டுமன்றி, கம்ப ராமாயணம், புறநானூறு போன்ற பல தமிழ் நூல்களிலிருந்தும் பல காட்சிகள் வரைந்திருக்கிறார்கள். மகாத்மா காந்தியின் வரலாற்றை வண்ண ஓவியமாகத் தீட்டியிருக்கிறார்கள்; வீர பாண்டிய கட்டபொம்மனின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சித்திரங்களாக வரைந்திருக்கிறார்கள். இப்படிப் பல. இவற்றையெல்லாம் சென்னை, தஞ்சை, பம்பாய், தில்லி, யாழ்ப்பாணம் முதலிய பெரு நகரங்களிலிருந்த பொதுமக்கள் பார்த்து வியக்கவும் மகிழவும் சந்தர்ப்பம் கிட்டியது. ஆனால் மேற்படி காட்சிகளைப் பார்த்தவர்களைவிட பார்க்காதவர்களே அதிகம். இவர்களுக்கு இப்போது இரட்டிப்பு அதிர்ஷ்டம் கிடைத்திருக்கிறது.

இவ்வாண்டு வள்ளுவர் திருநாளில் பாலு சகோதரர்கள் ஒரு மலர் வெளியிட்டிருக்கிறார்கள். அம் மலர் அவர்களது வண்ண ஓவியங்களோடு, தமிழ்ப்பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை, டாக்டர் மு. வரதராசனார், திரு அ. ச. ஞானசம்பந்தன் முதலியோரது கட்டுரைகளுடன் ஓர் இலக்கியப் புதையலாக விளங்குகிறது. கிடைக்குமிடம்: பாலு சகோதரர்கள், கலைக்கூடம் சென்னை-2. விலை: ரூ. 3.


உங்களுடைய தேக ஆரோக்கியத்தை
ப்ளிட் எப்படி பாதுகாக்கின்றது
மலேரியா, டைபாயிட், காலரா முதலிய
பல வியாதிகளைக் கொண்டுவரும் பூச்சிகளை இது கொல்லுகிறது
ப்ளிட் தனிப்பட்ட ஒரே ஒரு பூச்சியைக் கொல்லும் மருந்தல்ல. ஆனால் பற்பல பூச்சிகளைக் கொல்லும் மருந்துகளின் ஒரு முழுச் சேர்க்கையாகும். இதிலுள்ள இம்மருந்துகள் ஒன்றிற்கொன்று கலந்து மற்றதையும் மிகவும் சக்தியுள்ளதாகச் செய்துகொள்ள உதவுகின்றன. இவ்வித ஒற்றுமையான செய்கையினாலேயே ப்ளிட் நீங்கள் வாங்கக் கூடிய பூச்சியைக் கொல்லும் மருந்துகளிலேயே மிகவும் சக்திவாய்ந்ததாயும், சிக்கனமானதாயும் விளங்குகிறது.
ப்ளிட் மாந்தருக்கும் வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகளுக்கும் தீங்கு விளைவிக்காது. இன்றே ஒரு டின் வாங்குங்கள்—இது எவ்வளவு பலனுள்ளதென்பதை அறிய உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கும்.
1 ஒரு வகையைத்தான் கொல்லும் என்றில்லை—வீட்டிலுள்ள பூச்சிகளனைத்தையும் கொல்லுகிறது
பூர்ணப் பிரயோஜனத்தை உத்தேசித்து விஞ்ஞான முறைப்படி ப்ளிட்டில் ஆறு சக்தி வாய்ந்த பூச்சிகளைக் கொல்லும் மருந்துகள் சேர்க்கப்பட்டுள்ளன. வீட்டிலுள்ள பூச்சிகள் இதனுடைய சாவடிக்கும் தன்மையினின்று தப்பவே முடியாது!
2 நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு அணுவுக்கும் அதிகமான பூச்சிகளைக் கொல்லுகிறது
ப்ளிட் தெளிக்கப்பட்ட பாகம் பல வாரங்களுக்கு பூச்சிகளின் உயிருக்காபத்தாய் விளங்குகிறது. நீங்கள் ப்ளிட் உபயோகித்த பிறகு உங்களை பாதுகாத்துக் கொண்டே போகிறது. உங்கள் முழுக்குடும்பத்தின் தேக சுகத்தை ப்ளிட் கொண்டு காப்பாற்றவும்.
FLIT
D.D.T.
KILLS
ESSO
சிவப்பு, வெள்ளை, நீல நிறமும் கொண்ட டின்னில் கிடைக்கும்
ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி
(கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
V. 1730



தற்கொலை! ஆம், அந்தப் பயங்கரமான முடிவுக்கு வந்தான் ஜகந்நாதன். இத்தகைய பேரவமானத்துக்குப் பின்னர், மானமுள்ள ஓர் ஆண் மகன் எவ்வாறு உயிர் வைத்துக் கொண்டிருக்கக் கூடும்! ஒரு பாகமேனும் தேறியிருக்கக் கூடாதா? அதிலும் இது இரண்டாம் தடவை. இண்டர்மீடியட் பரீட்சையில் ஜகந்நாதன் முதல் தரத்தில் தேறியவன். அதுவரை ஒரு வகுப்பிலாவது பரீட்சையில் தவறியது கிடையாது. பி. ஏ. வகுப்பில் முதல் முறை இரண்டு பாகத்திலும் தவறிய போது அவன் அடைந்த ஏமாற்றமும் துயரமும் சொல்லத் தரமல்ல. ஆயினும் எப்படியோ சகித்துக் கொண்டு, இரண்டாம் முறை அதிகக் கவலையுடன் படித்தான். ஆயினும் பயனென்ன! 'மேல் மாடி காலி' என்பதாக அவன் கேலி செய்த 'மண்டு'க்கள் எல்லாரும் தேறி விட்டார்கள். அவன் மட்டும் அம்முறையும் தவறிவிட்டான் - இரண்டு பாகத்திலும். அவமானம்! அவமானம்! தற்கொலையின்றி இந்த அவமானம் தீருமா!

இது ஒரு புறம் இருக்கட்டும். செல்லத்தின் முகத்தில் எவ்வாறு விழிப்பது! தன்னிடம் அளவிறந்த காதல் வைத்துள்ள அப் பேதை இந்த அவமானத்தை எங்ஙனஞ் சகிப்பாள்! பரீட்சைக்கு நான்கு மாதங்களுக்கு முன்பு செல்லத்தைப் பிறந்தகத்துக்கு அனுப்பிய போது அவளுக்கும் தனக்கும் நிகழ்ந்த விவாதம் ஜகந்நாதனுக்கு நினைவு வந்தது. அவள் அப்போது கூறினள்:—"என்னை ஏன் அனுப்புகிறீர்கள்! நான் உங்கள் படிப்புக்கு எவ்விதத்திலாவது குறுக்கே வருகிறேனா? நான் இருந்தால் உங்களுக்கு எவ்வளவோ சௌகரியமாயிற்றே! உங்கள் அறையைப் பெருக்கிச் சுத்தமாய் வைக்கிறேன். புத்தகங்களை அடுக்கி வைக்கிறேன். வேஷ்டி துவைத்து உலர்த்திக் கொடுக்கிறேன். குளிப்பதற்கு வெந்நீர் போட்டுக் கொடுக்கிறேன். இரவில் நீங்கள் படிக்கும் போது உங்கள் படுக்கையை விரித்துவிட்டே நான் சென்று படுத்துக் கொள்ளுகிறேன். உங்களுக்கு எவ்வளவு நேரம் மீதியாகிறது! ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டு தனியறையில் இருந்தால் இவைகளையெல்லாம் நீங்கள் தானே செய்ய வேண்டும்! இவ்வளவு சௌகரியம் இருக்குமா! எனக்காக நீங்கள் அதிக நேரம் செலவிடுவதேனும் உண்டா! மாலைப் பொழுதில் நீங்கள் வெளியிலிருந்து வந்ததும் அரை மணி நேரம் மாடியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறோம். இதைத் தவிர வேறு எப்போதாவது உங்கள் படிப்புக்குக் குறுக்கே நான் வருகிறேனா? மேலும், உங்கள் தேக சௌக்கியத்தை என்னைப் போல் யார் கவனித்துக் கொள்வார்கள்!"

செல்லம்மாளின் இவ்வளவு வாதமும் அப்போது ஜகந்நாதன் செவியில் ஏறவில்லை. சென்ற வருஷம் பரீக்ஷையில் தவறியதும், அவனது நண்பர்களும் மற்றவர்களும், "ஆம்படையான் ஆத்துக்கு வந்ததும் பையன் கழி போட்டு விட்டான்" என்று கேலி செய்தது அவன் மனத்தை விட்டு அகலவில்லை. இந்தக் கேலிப்பேச்சு அவன் உள்ளத்தில் உறுத்திக் கொண்டேயிருந்து, கடைசியில் தான் பரீட்சையில் தவறியதற்குத் தன் மனைவியே காரணம் என்னும் நம்பிக்கையை உண்டுபண்ணி விட்டது. எனவே, இம் முறை அவளை ஊருக்கு அனுப்பியே தீர வேண்டுமென்றும், இல்லாவிடில் தனக்குப் பரீட்சை தேறாதென்றும் அவன் நிச்சயம் செய்து கொண்டிருந்தான். இப்போதோ! "அவ்வளவு பிடிவாதமாக என்னை ஊருக்கு அனுப்பினீர்களே! பரீட்சையில் தேறி விட்டீர்களா!" என்று செல்லம் கேட்டால், என்ன விடையளிப்பது! தன் புண்பட்ட மனத்தை இன்னும் புண்படுத்தக்கூடாதென்று அவள் இவ்வாறு கேளாமலிருக்கலாம்; தேறுதலும் சொல்லலாம். இருந்தாலும், அவள் மனத்தில் இவ்வெண்ணம் இருக்கத்தானே செய்யும்! அவள் முகத்தில் விழிப்பது எப்படி!

இனி, கிராமத்திலுள்ள பெற்றோர்களோ! அவர்களைப் பற்றி எண்ணியபோதே ஜகந்நாதனுக்கு வயிறு பகீர் என்றது. தகப்பனார் ஓயாத உழைப்பும் உழைத்து மூத்த புதல்வனை தன்னைப் படிக்க வைத்தார். இப்போது அவருக்குத் தள்ளாத வயது வந்து விட்டது. குடும்பத்துக்கு 1500 ரூபாய் கடன் இருந்தது. இன்னும் இரண்டு புதல்விகளுக்கும் கல்யாணம் நடக்க வேண்டும். ஒரு பையனைப் படிக்க வைத்தாக வேண்டும். நிலத்தில் கிடைக்கும் வருமானம் காலட்சேபத்துக்கே போதும் போதாததாயிருந்தது. ஜகந்நாதனுக்கு வாங்கின வரதட்சணை ரூ. 2000-த்தில் ஒரு பைசாகூடத் தொடாமல் அவன் பி. ஏ. படிப்பதற்காகக் கொடுத்து விட்டார். அவன் உத்தியோகம் செய்யப் போகிறான் என்ற நம்பிக்கையே குடும்பத்துக்கு இப்போது ஆதாரமாக இருந்து வந்தது. போன வருஷமே அவர்கள் அடைந்த ஏமாற்றம் வருணிக்கத்தரமன்று. இம்முறையும் தவறிப் போன செய்தி கேட்டால், அந்தோ! அவர்கள் மனம்


இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய கதை.

இறந்தே போய்விடும். அவர்கள் துயரத்தைப் பார்த்து எவ்வாறு சகித்துக் கொண்டிருப்பது! நல்ல வேளை உயிரை விடுவதும் வைத்துக் கொண்டிருப்பதும் ஒருவனுடைய விருப்பத்தைப் பொறுத்ததாயிருக்கிறதே. அதை நினைத்துச் சந்தோஷப்படவேண்டியதுதான்.

அவமானத்தைப் பொருட்படுத்தவேண்டாம்; மனைவியையும், பெற்றோர்களையும் கவனிக்க வேண்டாம்; எனினும், அடுத்தாற்போல் செய்வதற்கென்ன இருக்கிறது; வரதட்சிணைப் பணம் ரூ. 2000-மும் இந்த மூன்று வருஷங்களில் செலவழிந்து போயிற்று. பாங்கிக் கணக்கில் முப்பது ரூபாயோ என்னவோ தான் பாக்கி. இன்னுமொரு வருஷம் படையெடுத்துச் சென்று பரீட்சைக் கோட்டையை முற்றுகை யிடுவதென்பது இயலாத காரியம். மாமனாரிடம் பணம் கேட்கலாமா! சை! அதைவிட நாக்கைப் பிடுங்கிக் கொண்டு உயிர் விடலாம். உத்தியோகத்துக்குப் போவதென்றாலோ, பரீட்சையில் தவறிய பி. ஏ.க்கு என்ன சம்பளம் கொடுப்பார்கள்! 30, 35-க்கு மேல் இல்லை. இந்த முப்பத்தைந்து ரூபாயைக் கொண்டு பட்டணத்தில் மனைவியுடன் எவ்வாறு வாழ்க்கை நடத்துவது! சென்ற வருஷத்தில் மாதம் அறுபது ரூபாய் போதாமல் கஷ்டப்பட்டோமே! பின்னர், பெற்றோர்களுக்குப் பணம் அனுப்புவதெப்படி! தம்பியைப் படிக்க வைப்பதும் தங்கைகளுக்குக் கல்யாணம் செய்து வைப்பதும் எங்ஙனம்!

ஆ! பரீட்சையில் மட்டும் தேறியிருந்தால்! நினைத்தபடி இன்கம்டாக்ஸ் ஆபிஸில் ஓர் உத்தியோகமும் கிடைத்திருந்தால்!......" சம்பளத்தைக் கொண்டு நீ உன் காலட்சேபத்தை நடத்திக் கொள். மேல் வரும்படியை மட்டும் மாதாமாதம் எனக்கு அனுப்பி விடு" என்று தந்தை அடிக்கடி கூறியது அவனது நினைவுக்கு வந்தது. 'மேல் வரும்படி.' விஷயத்தில் தானுக யாரையும் ஒரு பைசாவேனும் கேட்பதில்லையென்று அப்போதே நிர்மானித்திருந்ததும் ஞாபகம் வந்தது. இன்கம்டாக்ஸ் ஆபிஸ் உத்தியோகம் அகப்படாவிட்டாலும் ரயில்வேயில் ரூ. 100 சம்பளத்தில் வேலை கிடைத்திருந்தால் போதுமே!... சை, சை, என்ன நினைவுகள்! இவைகளைப் பற்றி இப்போது எண்ணி என்ன பயன்! தற்கொலை! தற்கொலை! அதைப் பற்றியன்றோ இப்போது சிந்திக்க வேண்டும்!

ஒரே ஒரு யோசனை, நாம் போய்விட்டால், மனைவி, பெற்றோர்களின் கதி என்ன! 'நல்ல வேளையாக மனைவியின் பெற்றோர்கள் கொஞ்சம் பணக்காரர்கள். எனவே அவளைப் பற்றிக்கவலையில்லை. உயிரோடிருந்தாலும் பெற்றோர்களுக்கு உதவி எதுவும் செய்ய முடியாது. அவர்கள் எல்லாரும் அளவு கடந்த துக்கத்தில்ஆழ்ந்து விடுவார்கள் என்பது உண்மையே. ஆனல், உயிரோடிருந்து அவர்கள் துயரத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதை விட, இறந்து போய் விட்டால், பிறகு யார் எப்படிப் போனுல் நமக்கென்ன தெரியப் போகிறது!



இவ்வளவு எண்ணங்களும் ஜகந்நாதன் மனத்தில் கோவையாக எழுந்து மறைந்தன. அவனுடைய அறிவு அந்த நெருக்கடியான தருணத்தில் மிகத் தெளிவு பெற்றிருந்தது. அச்சமயத்தில், "நான் ஏன் தற்கொலை செய்து கொள்ள வேண்டும்!" என்னும் விஷயமாக ஒரு கட்டுரை வரையச் சொல்லியிருந்தால் அவன் மிக நன்றாக எழுதியிருப்பான். இவ்வளவு தெளிந்த அறிவுடன் பரீட்சையில் எழுதியிருந்தால், எந்தக் குருட்டுப் பரீட்சகனும் அவனைத் தேர்தல் செய்யத் தவறியிரான்!

தற்கொலை செய்து கொள்ளும் விதத்தைப் பற்றி ஜகந்நாதன் அதிகமாகச் சிந்திக்கவேயில்லை. ஒரே கணத்தில் இந்த விஷயத்தில் முடிவுக்கு வந்து விட்டான். இரவு ஏழு மணியாயிற்று. மனைவிக்கொரு கடிதமும், தந்தைக்கொரு கடிதமும் எழுதினான். மனைவிக்கு எழுதிய கடிதம் வருமாறு :—

"என் அன்பே! நான் பரீட்சையில் இம்முறையும் தவறிவிட்டேன். இனி உன் முகத்தில் விழிக்க என்னால் முடியாது. தற்கொலை செய்து கொண்டு இன்றிரவு உயிர் விடப் போகிறேன்.

ஜகந்நாதன்."

தந்தைக்கு எழுதிய கடிதமும் இவ்வளவு சுருக்கமானது தான்.

இரண்டையும் மடித்து உறையில் போட்டு விலாசம் எழுதி மேஜையின் மீது வைத்தான். மரண விசாரணையில் அடையாளம் தெரிவதற்காகத் தன்னுடைய விலாசம் எழுதிய ஒரு காகிதத்தைச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டான். (என்ன முன்யோசனை!) அறையைப் பூட்டிவிட்டு வெளியே வேகமாகக் கிளம்பினான்.

2

இரவு ஒன்பது மணி. அமாவாசை இருட்டு. தென் இந்திய ரயில் பாதையில் ஒரு சிறு வாய்க்காலின் பாலத்தின் மீது ஜகந்நாதன் உட்கார்ந்து கொண்டிருந்தான். நிர்மலமான நீல வானத்தில் நட்சத்திரங்கள் கண் சிமிட்டி மனிதர்களின் அறியாமையைக் குறித்துக் கேலி செய்து கொண்டிருந்தன. மேல் வான வட்டத்தின் அடிவாரத்தைக் கரிய மேகத்திரள் மறைத்திருந்தது. ஒவ்



வொருசமயம் அம்மேகத்திரளை மீறிக்கொண்டு ஒரு பொன் மின்னற்கொடி வெளிக் கிளம்பி ஒரு கணம் கண்ணைப் பறித்துவிட்டு உடனே மறைந்தது. கிழக்கே வெகு தூரத்தில் பட்டணத்தின் மின்சார விளக்குகள் மங்கலாகக் காணப்பட்டன. வெறுப்புத் தரும் வாடைக் காற்றில் கலந்து, காட்டில் ஊளையிடும் நரியின் கூக்குரல் வந்து கொண்டிருந்தது. அவ்வப்போது மத்திம ஸ்தாயியில் இடிகள் உறுமின. பக்கத்திலிருந்த புளிய மரத்தில் ஒரு கோட்டான் கோரமாகக் கத்திக் கொண்டிருந்தது.

அடுத்த ஸ்டேஷனிலிருந்து போட்மெயில் புறப்பட்டு விட்டதென்பதற்கு அறிகுறியான ஊதல் சத்தம் கேட்டது. ஜகந்நாதன் எழுந்து சென்று தண்டவாளத்தின்மீது குறுக்காகப் படுத்துக் கொண்டு கண்ணை இறுக மூடிக் கொண்டான். இதயம் 'பட்பட்' என்று அடித்துக் கொண்ட சத்தம் அவன் செவியில் நன்றாகக் கேட்டது. அவன் மனைவியும், மாமனாரும், மாமியாரும், தந்தையும், தாயும், தம்பியும், தங்கைகளும், ஒவ்வொருவராக அவன் முன்பு தோன்றி, "ஐயோ பைத்தியமே! இப்படிச் செய்யாதே!" என்று கெஞ்சுவது போல் அவனுக்குத் தோன்றிற்று. இந்தப் பிரமையினின்று விடுபடும் பொருட்டு அவன் கண்களைத் திறந்து ரயில் வரவேண்டிய திக்கை நோக்கினான். அவ்விடத்தில் ரயில் பாதை நேராக அமைந்திருந்தபடியால் வெகு தூரத்தில் ரயில் வருவது காணப்பட்டது. குழந்தைப் பருவத்தில் கொள்ளிக் கண்ணன் என்னும் இராட்சதனைப் பற்றிக் கேட்ட கதை அவனுக்கு அப்போது நினைவு வந்தது. பெரிய கரிய வடிவமும் கொள்ளிக் கண்களும் உடைய ஒரு பூதம் பயங்கரமாக உறுமிக் கொண்டு தன்னை விழுங்க வருவது போல் அவனுக்குத் தோன்றிற்று. இத் தோற்றத்தினால் பீதியடைந்து அவன் மீண்டும் கண்களை மூடிக் கொள்ளப் போனான். ஆனால், அச்சமயத்தில் சுமார் ஐம்பது அடி தூரத்தில் ரயில் பாதை ஓரமாக வெள்ளைத் துணியால் முக்காடணிந்த உருவம் ஒன்று தன்னை நோக்கி வருவதைக் கண்டு விட்டான்.

பேய் பிசாசுகளிடம் ஜகந்நாதனுக்கு நம்பிக்கையில்லை. இருந்தாலும் அப்போது அவன் உடலும் நடுங்கி விட்டது. வியர்வை வியர்த்துத் துணிகள் எல்லாம் ஒரு கணத்தில் சொட்ட நனைந்து போயின. அச் சமயத்தில் அவன் உணர்வு போன வழி காரியம் செய்தானேயன்றி, அறிவைப் பயன்படுத்தி யோசித்து எதுவும் செய்யவில்லை. அவ்விடத்திலிருந்து உடனே போய்விட வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. மெதுவாக நகர்ந்து பக்கத்திலிருந்த பாலத்துக்கு வந்து அங்கிருந்து கீழே வாய்க்காலில் சத்தமின்றி இறங்கி விட்டான். ஏற்கெனவே காரிருள்; அதிலும் பாலத்தின் நிழல். அங்கிருந்து அவ் வுருவத்தைப் பார்த்துக் கொண்டே நின்றான். என்ன அதிசயம்! அவ்வுருவம் சற்றுமுன் ஜகந்நாதன் படுத்திருந்த இடத்துக்கே வந்து நின்றது. முக்காடு போட்டிருந்த துணியை எடுத்துக் கோயிலில் ஸ்வாமி தரிசனம் பண்ணும் போது செய்வது போல இடுப்பில் வரிந்து கட்டிக் கொண்டது. பின்னர் தண்டவாளத்தின் மீது குறுக்காகப் படுத்தது!

அத்தகைய நிலைமையிலும் ஜகந்நாதனால் புன்னகை கொள்ளாமல் இருக்க முடியவில்லை. அவ்வுருவம், தன்னைப் போலவே ஏதோ ஒரு காரணத்தினால் தற்கொலை செய்து கொள்ள வந்த துரதிருஷ்டசாலியான ஒரு மனிதனே என்பதை அவன் தெள்ளத் தெளியக் கண்டான். அவன் உயிரை அச்சமயம் தான் காப்பாற்ற விட்டால், அக் கொலை பாதகத்துக்கு உடந்தையாயிருந்த பாவம் தன்னைச் சாரும் என்று அவனுக்கு ஓர் உணர்ச்சி உண்டாயிற்று. ரயிலோ சமீபத்தில் வந்து விட்டது. அவன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தேறிச் சென்று, படுத்திருந்த உருவத்தை முதுகில் தொட்டான். அவ்வுருவம் அப்படியே வீறிட்டுக் கொண்டு துள்ளி விழுந்தது. பாவம்! ரயில் வண்டி தன் மீது ஏறி விட்டதாக அந்தத் துரதிர்ஷ்டசாலி நினைத்திருக்க வேண்டும். ஜகந்நாதன் அவனைப் பாதி தூக்கிக் கொண்டும் பாதி இழுத்துக் கொண்டும் கீழே பாலத்தின் அடியில் கொண்டு வந்து சேர்த்தான்.

3

"ஆம், மூன்று ஆண்டுகளாக நான் அலையாத இடமில்லை. நான் போகாத ஆபீஸ் இல்லை. விண்ணப்பம் எழுதி எழுதிக் கையும் சலித்து விட்டது. நடந்து நடந்து காலும் ஓய்ந்து விட்டது. மனைவியையும், இரண்டு குழந்தைகளையும் காப்பாற்றி யாக வேண்டும். பாங்கியில் இரண்டாயிரந்தான் பாக்கி. அதை வைத்துக் கொண்டு எங்கேயாவது கிராமத்துக்குப் போய் அவர்களாவது சௌக்கியமாயிருக்கட்டும் என்ற முடிவுக்கு வந்தேன். இன்னும் இரண்டு வருஷங்கள் நான் இந்த நகரத்தில் இருந்து வேலை தேடிக் கொண்டிருந்தால், அந்தப் பணமும் தொலைந்து போய் விடும். பின்னர், என் மனைவி குழந்தைகளின் கதி என்ன! ஆகையினாலே இன்று முடிவாக பி.ஏ. பட்டத்துக்குரிய பத்திரத்தைச் சர்வகலாசாலை ரிஜிஸ்டாருக்கே திருப்பி யனுப்பிவிட்டு, உயிரை விடும் துணிவுடன் புறப்பட்டு வந்தேன். நீர் அதற்குக் குறுக்கே நின்றீர்" என்று கூறி முடித்தார் மகாதேவ ஐயர். ஜகந்நாதன் கொல்லென்று சிரித்தான். அவர்கள் பாலத்தின் மீது உட்கார்ந்திருந்தார்கள். "என் வரலாற்றை உம்மிடம் கூறியது குறித்து வருந்துகிறேன். பிறர் துன்பத்தைக் கேட்டுச் சிரிக்கும் குணமுள்ளவர் நீர் என்பது எனக்குத் தெரியாது போயிற்று" என்று மகாதேவ ஐயர் சற்றுக் கோபத்துடன் கூறினார்.

"தயவு செய்து மன்னித்து விடுங்கள். நான் கூறப் போவதைக் கேட்டால் நான் சிரித்ததற்குக் காரணம் உண்டென்று நீங்களே சொல்வீர்கள். நான் சென்ற வருஷமும் இவ்வருஷமும் பி. ஏ. பரீட்சைக்குச் சென்று தவறி விட்டேன். இதன் பொருட்டுத் தற்கொலை செய்து கொள்ளும் நோக்கத்துடனேயே நானும் இங்கே வந்தேன். நீங்கள் திடுக்கிடுகிறீர்களல்லவா! எந்த இடத்தில் நீங்கள் படுத்துக் கொண்டீர்களோ, அதே இடத்தில் ஒரு நிமிஷத்துக்கு முன்பு நான் படுத்துக் கொண்டிருந்தேன். தங்களைக் கண்டு பயந்து கொண்டு கீழே இறங்கினேன். பி. ஏ. பரீட்சையில் முதன்மையாகத் தேறிய தாங்கள் அப்பட்டத்தினால் ஒரு பயனுமில்லையெனக் கண்டு அதைத் திருப்பி அனுப்பி விட்டு உயிர்

துறக்கத் துணிந்திருக்கையில் அப்படிப்பட்ட பட்டம் கிடைக்க வில்லையே யென்பதற்காக நான் தற்கொலை செய்து கொள்ளத் தீர்மானித்ததை எண்ணியபோது, என்னையறியாமல் சிரிப்பு வந்து விட்டது. இப்பொழுது சொல்லுங்கள். நான் சிரித்ததில் தவறு உண்டா!'' என்றான் ஜகந்நாதன்.

இதைக் கேட்டதும் மகாதேவையருக்குக் கூட நகைப்பு வந்து விட்டது. சற்று நேரம் இருவரும் இடிஇடி யென்று சிரித்தார்கள். அந்த நிர்மானுஷ்யமான இடத்தில், அந்த நள்ளிருளில் அவர்களுடைய சிரிப்பின் ஒலியைக் கேட்டு அதுவரை சத்தம் போட்டுக் கொண்டிருந்த பூச்சிகள், தவளைகள் முதலியன, பயந்து வாய் மூடின. அருகிலிருந்த புளிய மரத்தில், உறங்கிக் கொண்டிருந்த ஒரு பறவை கண் விழித்துக் 'கிறீச்' என்று கத்திற்று.

''உயிர் விடும் யோசனையை மறந்து விடுவோம்'' என்று மகாதேவையர் கூறினார்.

''ததாஸ்து'' என்றான் ஜகந்நாதன். பின்னர் அவன் சொன்னான்:—''இன்றிரவிலிருந்து, நாம் இருவரும் உயிர் நண்பர்களானோம். நாமிருவரும் ஒரே நோக்கங் கொண்டு இருவரும் ஒருவரது உயிரை ஒருவர் காப்பாற்றினோம். இருவரும் ஏறக்குறைய ஒரே நிலையில் இருக்கிறோம். நம்மிருவரையும் சேர்த்துவைக்க வேண்டுமென்பது கடவுளுடைய திருவுள்ளம் போலும்!''

''ஆம். நண்பர் ஒருவர் இல்லாத காரணத்தினாலேயே, நான், இவ்வளவு விரைவில் மனஞ்சோர்ந்து விட்டேன். தங்களுடைய நிலையும் அப்படித்தான் இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். இனி, இருவரும் சேர்ந்து, புதிய பலத்துடனும் உற்சாகத்துடனும் வாழ்க்கைப் போராட்டத்தில் இறங்குவோம்.''

''அப்படியே யாகட்டும். ஆனால், என்ன செய்வது என்பதுதான் விளங்கவில்லை.''

''இனிப் பரீட்சைக்குப் போகும் எண்ணத்தை விட்டு விடுங்கள். என்னிடம் இரண்டாயிரம் ரூபாய் இருக்கிறதென்று சொன்னேனல்லவா! அதை வைத்துக் கொண்டு ஏதேனும் தொழில் நடத்துவோம்.''

இவ்வாறு சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, இருவரும் கைகோத்துக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

மறுநாள், ஜகந்நாதனுக்கு, அவனுடைய காதல் மனைவி செல்லத்தினிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. அதன் பிற்பகுதியை இங்கே தருகிறோம்:—''......இந்தத் துக்க சமாசாரத்தில் நமக்கு ஒரு சந்தோஷமான அம்சமும் இல்லாமற் போகவில்லை. அத்தைக்கு என்னிடம் எப்போதுமே நிரம்பப் பிரியம் என்று தங்களுக்குச் சொல்லி யிருக்கிறேனல்லவா! அந்திய காலத்தில் நான் அவளுக்குச் செய்த பணிவிடை அந்தப் பிரியத்தைப் பதின்மடங்கு வளர்த்து விட்டது. எனவே, அவளுடைய மரண சாசனத்தில், பாங்கியில் அவள் பேரால் இருந்த ரூபாய் மூவாயிரத்தையும் எனக்குக் கொடுத்து விட்டதாக எழுதி வைத்திருக்கிறாள். இந்தப் பணம் தங்களாலேயே எனக்குக் கிடைத்தது என்பதை நினைவூட்டுகிறேன். தாங்கள் என்னை வற்புறுத்திப் பிறந்தகத்துக்கு அனுப்பி யிராவிடில் அத்தைக்குப் பணிவிடை செய்யும் சந்தர்ப்பம் கிடைத்திராது. அப்போது அவள் பணத்தை எனக்குக் கொடுத்திருப்பது நிச்சயமில்லை. ஆதலின் அந்தப் பணம் முழுதும் தங்களுக்கே உரியதாகும். இன்னொரு சமாசாரம், தங்கள் பரீட்சையின் முடிவு இதற்குள் தெரிந்திருக்க வேண்டும். தேறியிருந்தால் சந்தோஷம், இல்லாவிட்டாலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லையென்று எனக்குத் தோன்றுகிறது. பட்டம் பெற்றவர்களுக்கும் இக்காலத்தில் உத்தியோகம் இலேசில் கிடைப்பதில்லை யென்று எல்லாரும் சொல்கிறார்கள். மேலும், கைகட்டிச் சேவகம் செய்யும் பிழைப்பு தங்கள் இயல்புக்கு ஒத்ததன்று. எனவே, இந்த மூவாயிர ரூபாயையும் மூலதனமாக வைத்துக் கொண்டு, தாங்கள் ஏதேனும் ஒரு தொழில் ஆரம்பித்து நடத்தினாலென்ன! அடியாள் தங்களுக்கு இவ்வளவு தூரம் யோசனை சொல்ல முன்வந்தது தங்களுக்குப் பிடியா விட்டால், அதற்காக என்னைக் கோபித்துக் கொள்வதில் பயனில்லை. தாங்கள் தான் செல்லங் கொடுத்துத் தங்கள் செல்லத்தைக் கெடுத்து விட்டீர்கள். பிற விஷயங்கள் தங்களை நேரில் தரிசிக்கும் போது.''

மேற்சொன்ன சம்பவங்கள் நிகழ்ந்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. இப்போது மகாதேவையரும், ஜகந்நாதனும் ''மகாநாதன் கம்பெனி'' என்ற பெயருடன் புத்தக வியாபாரமும், பிரசுரமும் நடத்தி, நல்ல லாபம் சம்பாதித்து வருகிறார்களென அறிகிறோம். ஜகந்நாதனுடைய தந்தை மட்டும் ''என்னதான் இருந்தாலும் மாதாமாதம் சம்பளமும் அதன் மீது கொஞ்சம் மேல் வரும்படியும் கிடைப்பது போல் ஆகுமா!'' என்று சொல்லி வருகிறாராம்.

பி. ஸி. ஜி. எச்சரிக்கை

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

பி. ஸி. ஜி. ஊசி குத்தும் விஷயத்தில் நான் விவாதித்துக் கொண்டிருப்பது மக்களுக்குத் தெரியும். குழந்தைகளின் உடலில் புதிதாக ஒரு விஷத்தை ஏற்றுவதாயிருந்தால் நன்றாக ஆலோசித்துச் செய்ய வேண்டியது. பிடிவாதமானது முறையல்ல.

ஊசி குத்தி உடம்பில் ஏற்றும் பி.ஸி.ஜி. விஷமானது, க்ஷய வியாதியை உண்டாக்கும் ஜீவக் கிருமிகள் கலந்த ஒரு சத்து. காலரா டைபாயிட் முதலிய ஊசிக் குத்துகள் இவ்வாறல்ல. அவற்றில் செலுத்தும் சத்து உயிரற்ற விஷம். மருந்தாகக் குத்தும் பல ஊசி மருந்துகளும் அவ்விதமே. அவை உயிரற்ற பொருள்கள். ஆனால், பி. ஸி. ஜி. யில் குத்திச் செலுத்துவதானது ஜீவக் கிருமிகள் கொண்டது. இது உடம்பில் ஒரு முறை கலந்து விட்டால் பிறகு வெளியேறுவது கிடையாது. வைத்தியர்கள் பலர் இது அபாயம் என்று எண்ணி எழுதி வந்திருக்கிறார்கள். பி.ஸி.ஜி. ஊசி குத்திக் கொள்ளுவதனால் க்ஷய ரோகமும் உண்டாகலாம், வேறு வித நோய்களும் உண்டாகலாம் என்று கண்டிருக்கிறார்கள்.

எல்லாருடைய உடம்பிலும் இவ்வாறு ஆகாதிருந்தாலும் சிலருக்கு உண்டாகலாம். இது தேகத்தின் நிலையையும், குடும்பச் சூழ்நிலையையும் அதிர்ஷ்டத்தையும் பொறுத்தது.

சூதாட்டத்திலும் பரிசு பெரிய பரிசாக இருக்க வேண்டும். அபாயமான இந்த ஊசி குத்துவதனால் குழந்தைகளுக்கு என்ன பயன் உண்டாகும் என்று சொல்கிறார்கள்? இதை ஆராயலாம்.

நோயை ஓரளவு ஏற்றுவதனால் அதுவே நோய்க்குத் தடையாகும் என்று சொல்லுகிறார்கள். இதைத்தான் விஷப் பரீட்சை என்று நம்மவர்கள் சொல்லுவது. பெரிய லாபம் இருந்தால் அதையும் செய்யலாம். **ஆனால் பி. ஸி. ஜி. கட்சிக்காரர்கள் சொல்வதிலேயே, அந்த ஊசிக் குத்தின் சக்தி இரண்டு வருடத்துக்கு மேல் இராது என்று வெளியாகும்.**

அதிகப்படுத்திச் சொன்னார்களாயினும், நான்கு வருடத்திற்கு மேல் கிடையாது. திரும்பத் திரும்ப இரண்டு வருஷத்துக்கு ஒருமுறை பி.ஸி. ஜி. குத்துவதும் அபாயம் என்று அந்த வைத்தியர்களே சொல்லுவார்கள்.

இந்த இரண்டு வருஷகால வரம்பிற்குள்ளுங்கூடப் பாதுகாப்புக்கு உறுதியான பிரத்யக்ஷப் பிரமாணம் கிடையாது. இதை அவர்களே ஒப்புக் கொள்ளுகிறார்கள். **ஊசி குத்தின பிறகுங்கூட வேகங் கொண்ட தொத்து ஏற்பட்டால் பாதுகாப்பு இல்லை என்று ஒப்புக் கொள்கிறார்கள்.** இதெல்லாவற்றையும் யோசித்தால் கட்சி பேசுகிறவர்களுடைய வாதத்திலிருந்தே, ஊசி குத்துவதால் லாபம் ஒன்றும் இல்லை என்பது தெரிய வரும்.

லட்சக்கணக்கான குழந்தைகளின் உடலில் விஷத்தை ஏற்றுவதற்கு முன் உறுதியான முடிவை வைத்தியர்கள் காண வேண்டும். அது இல்லாத வரையில் ஊசி குத்துவதும், ஊசி குத்த ஒப்புக் கொள்ளுவதும் தவறாகும். இரண்டு வருஷத்தின் பாதுகாப்புக்காக அதை நம்பி க்ஷய நோய்க் கிருமியை உடம்புக்குள் செலுத்திக் கொள்வது புத்திசாலித்தனமா என்று யோசிக்க வேண்டும்.

முக்கியமான விஷயம்: இதில் சர்க்கார் சட்டத்தின் கட்டாயம் கிடையாது. வேண்டாம் என்று சொல்வதற்கு எந்தக் குழந்

தைக்கும் உரிமை உண்டு. அந்தக் குழந்தையைப் பெற்று வளர்க்கும் தாய் தகப்பன்மார்களுக்கும் உரிமை உண்டு. யாரிடமிருந்தாவது எப்போதாவது க்ஷய வியாதித் தொத்து குழந்தைகளுக்கு சேர்ந்துவிடுமோ என்று பயந்து நிச்சயமான தொத்தை இப்போதே குழந்தையின் உடம்பில் செலுத்துவது அறிவீனம்.

மற்ற வியாதிகளைப் போல் அல்ல க்ஷய ரோகம். அம்மை நோய்களில் ஏதேனும் ஒன்று ஒரு தரம் கண்டால், மறுமுறை வராது. நோய்ப் பட்ட நிலையிலேயே உடம்பில் பாதுகாப்பு ஏற்பட்டு விடுகிறது. இதை வைத்துக் கொண்டு அம்மை நோய்க்கு ஊசி குத்துகிறார்கள். வியாதியை ஏற்றி வியாதியைத் தடுக்கிறார்கள். க்ஷய வியாதி இந்த வகையல்ல. க்ஷய வியாதி உடம்பில் ஏறினால் அந்த தேகத்தில் மறுபடி க்ஷய வியாதி வராதபடியான காப்புச் சத்து ஏதும் உண்டாவதில்லை. இது க்ஷய வைத்தியர்கள் அறிந்த விஷயம்.

எந்தக் காரணத்தினாலாவது க்ஷயக்கிருமி உடம்பில் ஏறினாலும், சில தேகங்கள் நோய்ப்படுவதில்லை. இது இயற்கை ரகசியம். அத்தகைய உடலில் டுபெர்குலின் என்கிற விஷத்தைக் கீறிப் பூசினால் புண்ணாகும், அதாவது சதையானது கோபக் குறி காட்டுகிறது. அந்தக் கோபக் குறியையே காப்பாக எண்ணி வருகிறார்கள். ஆனால் இதைச் சில வைத்திய நிபுணர்கள் காப்பாக எண்ணுவதில்லை. இது ஒரு பெரிய விவாதத்துக்கு இடமான விஷயம்.


இன்னும் பல விஷயங்கள் உண்டு. அவற்றையெல்லாம் நான் இந்தச் சிறியக் கட்டுரையில் ஆராயப் புகவில்லை.

பி. ஸி. ஜி. ஊசிக் குத்தில் உள்ள அபாயங்கள் எண்ணிறந்தன. பி. ஸி. ஜி. தயார் செய்வதிலிருந்து அது குழந்தை உடலில் ஏறும் வரையில் பல நோய்க் கிருமிகள் அதில் கலந்து விடுவதற்கு இடம் இருக்கிறது. மருந்தைத் தயாரித்துப் பதினைந்து நாள் வரைதான் பி. ஸி. ஜி. திரவம் சரியான நிலையில் நிற்கும். அதற்கு மேல் அதை உபயோகிக்க முடியாது. பதினைந்து நாளுக்கு இடையிலும் பல பாத்திரங்களும் கைகளும் பட்டுக் குத்தும் போது திரவம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய இடம் இல்லை. ஜீவக் கிருமித் திரவமானபடியினால், விஷத்தைக் கொல்லும் மருந்து எதையும் இதில் சேர்ப்பதற்கில்லை. வேறு இன்ஜெக்ஷன்களில் இந்த அபாயமில்லை. இந்தச் சங்கடங்கள் எல்லாம் சேர்ந்துதான் ஊசி குத்துவதில் அநேக கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன.

கட்டாயம் இல்லாத வரையில் குழந்தைகளைப் பெற்றவருக்கு உரிமை உண்டு. வேண்டாம் என்று சொல்வதற்கு.



வேதாரண்யத்தில் சர்தார் திரு வேதரத்தினம் அவர்கள் நடத்தும் கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலத்தைச் சேர்ந்த ''கலைமகள் நிலைய''த்துக்கு டில்லி மக்கள் சபைத் தலைவர் திரு ஜி. வி. மாவ்லங்கர் 14-6-55 அன்று கால்கோள் விழா நிகழ்த்தினார்.



புதிய

ASPRO

REG TRADE MARK



'ஆஸ்ப்ரோ'

வலி மற்றும் ஜூரத்தை

அதி துரிதமாக

நிறுத்துகிறது!



புதிய 'ஆஸ்ப்ரோ'

ஒன்று தான் இந்த எல்லா அனுகூலங்களும் கூடியது.

✻ உதிரி வில்லைகளே கிடையாது! வில்லைகள் உதிரியாக இருந்தால் தூசியும் ஈரமும் அதை எளிதில் பாதித்து, அதன் விளைவாக வயிற்றுக்கு கோளாறு ஏற்படக் கூடும். புதிய 'ஆஸ்ப்ரோ' பரிபூரண பாதுகாப்புடையதாக இருப்பதற்கு காரணம் ஒவ்வொரு வில்லையும் தனித்தனியாக, காற்றுப்புகாத வகையில் விசேஷ முறையில் மூடி உறையிடப்பட்டுள்ளது.

✻ பாதுகாப்பு! 'ஆஸ்ப்ரோ' இருதயத்திற்கோ, வயிற்றுக்கோ கெடுதி விளைவிப்பதில்லை. துர்ப்பழக்கம் உண்டாக்கும் மருந்து எதுவும் இதில் சேர்க்கப்படவில்லை. புதிய 'ஆஸ்ப்ரோ'வை குழந்தைகள்கூட பயமின்றி உட்கொள்ளலாம்.

✻ மதிப்பு: இரண்டே அணா செலவில் உங்களுக்கு துரிதமாக வேலை செய்யும் மூன்று புதிய 'ஆஸ்ப்ரோ' வில்லைகள் கிடைக்கின்றன. எவ்வளவு மலிவு!

புதிய 'ஆஸ்ப்ரோ' ஒரு அற்புதமான புதிய முறையில் தயாரிக்கப்படுவதன் காரணமாக, அதை உட்கொண்டவுடன் மூன்று க்ஷணத்திற்குள்ளாகவே அதன் வேலையைத் தொடங்கி விடுகிறது. இப்பொழுது உங்களுடைய சகலவிதமான நோவுகள், தலைவலி, ஜலதோஷம் மற்றும் ஜுரத்தை வேறெந்த மருந்தைக் காட்டிலும் மிக துரிதமாக நிவர்த்தி செய்யக்கூடிய புதிய 'ஆஸ்ப்ரோ' கிடைக்கின்றது. 'ஆஸ்ப்ரோ' இருதயம் அல்லது வயிற்றுக்கு எவ்வித கெடுதியும் விளைவிக்காது.

276-TAM

✻ தாமதிக்காதீர் — இன்றே புதிய 'ஆஸ்ப்ரோ' கேட்டு வாங்குங்கள்

ஆற்றங்கரையினிலே



பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை

25. திரு ஆனைக்கா

முன்னொரு நாள் ஒரு சோழ மன்னன் காவிரியாற்றிலே உறையூர்த் துறையிலே இறங்கி நீராடினான். தண்ணீரில் மூழ்கி எழுந்தான்; கழுத்தில் இருந்த முத்தாரத்தைக் காணவில்லை. "ஆற்றில் விழுந்த ஆரத்தை நீரே ஏற்றருளும்" என்று ஈசனை வேண்டினான்.

திரு ஆனைக்காவில் உறையும் ஈசனை அன்று நீராட்டிய பொழுது அவர் கழுத்தில் விழுந்தது அம் முத்து மாலை. அரசன் 'சிவார்ப்பணம்' செய்த முத்தாரம் திருமஞ்சனக் குடத்திலே புகுந்து, ஆனைக்காவில் அமர்ந்த பெருமானது திருமேனியைச் சேர்ந்தது என்று எல்லோரும் இன்ப வாரியில் மூழ்கினர். இச் செய்தியைத் தேவாரத் திருப்பாசுரம் எடுத்துரைக்கின்றது.

"தாரமாகிய பொன்னித்
தண்துறை ஆடி விழுத்தும்
நீரின்நின்று அடிபோற்றி
நின்மலா கொள் எனஆங்கே
ஆரங்கொண்ட எம்ஆனைக்காவுடை
ஆதியை நாளும்
ஈரம்உள்ளவர் நாளும்
எம்மையும் ஆளுடையாரே"

[தாரம்-பெண், ஈரம்-அன்பு]

என்று பாடினார் சுந்தரர்.

பழங்காலத்தில் வளமார்ந்த சோலைகள் ஈசன் உறையும் கோயில்கள் ஆயின. சோழ நாட்டில் உள்ள நெல்லி மரச் சோலை திரு நெல்லிக்கா என்றும், குரங்காடும் சோலை குரக்குக்கா என்றும் தேவாரத்தில் குறிக்கப் பெற்றுள்ளன. காவிரிக் கரையில் அமைந்த குரங்குச் சோலையை,

"குரக்கி னம்குதி கொள்ளும் குரக்குக்கா
வரத்த னைப்பெற வானுல காள்வரே"

[வரத்தன் - வரதன், ஈசன்]

என்று தேவாரம் பாடிற்று.

கா என்பது சோலை. காவிரியாற்றின் நடுவே யானை உலாவும் நெடுஞ் சோலை யொன்று அந்நாளில் நின்றது. அதனை ஆனைக்கா என்று அழைத்தனர். அங்கு ஒரு நாவல் மரத்திலே வெளிப்பட்ட ஈசனை நாள்தோறும் துதிக்கையால் நீராட்டித் தூய மலர் தூவி வணங்கிற்று ஒரு யானை என்று பழங்கதை கூறுகின்றது.

"அப்பூங் காவில் வெண்ணாவல்
அதன்கீழ் முன்னாள் அரிதேடும்
மெய்ப்பூங் கழலர் வெளிப்படலும்
மிக்க தவத்தோர் வெள்ளானை
கைப்பூம் புனலும் முகந்தாட்டிக்
கமழ்பூங் கொத்தும் அணிந்திறைஞ்சி
மைப்பூங் குவளைக் களத்தாரை
நாளும் வழிபட் டொழுகுமால்"

[குவளைக் களத்தார்-கண்டம் கறுத்தார்]

என்று திருத் தொண்டர் புராணம் உணர்த்துகின்றது.

அந் நாவல் மரத்தில் அமர்ந்த நாதனை வழிபட்டுப் பேறு பெற்ற சோழ மன்னருள் ஒருவன் கோச் செங்கண்ணன். தமிழ் நாட்டில் திருக் கோயில் கட்டிய மன்னருள் தலை சிறந்தவன் அவனே. பணி

கண்டருளிய ஈசனுக்கு எழுபது மாடக் கோயில் எடுத்தான் அம் மன்னன் என்று பாடியுள்ளார் திருமங்கை ஆழ்வார். திரு ஆனைக்காவிலும் அவன் திருக்கோயில் எடுப்பித்தான் என்பது,

" ஆனைக் காவில் தாம் முன்னம்
அருள்பெற் றதனை அறிந்தங்கு
மானைத் தரித்த திருக்கரத்தார்
மகிழும் கோயில் செய்கின்றார்
ஞானச் சார்வாம் வெண்ணாவல்
உடனே கூட நலம்சிறக்கப்
பானற் களத்துத் தம்பெருமான்
அமரும் கோயிற் பணிசமைத்தார் "

[பானற் களம்-நீலகண்டம்]

என்னும் பெரிய புராணப் பாட்டால் தெரிகின்றது.

கோச் செங்கண்ணன் கட்டிய கோயில் 'நாவற் கோயில்' என்று பெயர் பெற்றது. 'ஜம்புகேசுரம்' என்ற வடமொழிப் பெயரும் அதற்கு உண்டு. அவ் ஆலயத்தில் அண்டங்கள் அனைத்தையும் ஈன்ற அம்மையோடு அமர்ந்தருளும் ஈசனைக் கண்குளிரக் கண்டு பூமாலையும் பாமாலையும் சாத்தினர் திருத் தொண்டர்கள். அத்தகைய அழகிய பாமாலைகளில் ஒன்று அகிலாண்ட நாயகி மாலை.

அகிலம் எல்லாம் ஈன்ற அம்மையை ஒரு பாகத்தில் வைத்து, கங்கையாகிய மங்கையைச் சடைமுடியில் வைத்துக் காட்சி தரும் இறைவனைக் கசிந்துருகிப் பாடினார் ஒரு கவிஞர். "அம்மையே! அகிலாண்ட நாயகியே! என் அனைய அடியார்கள் செய்யும் எண்ணிறந்த பிழைகளைப் பொறுத்து அருள் புரியும் அன்னையே! உன்னை ஒரு பாகத்திலே வைத்த பரமன், மூன்று பிழைக்கு மேல் பொறுக்காத ஒரு மங்கையைத் தன் முடியின் மேல் ஏற்றி வைத்தானே! இதனால் அன்றோ இவன் பித்தன் என்று ஒரு பெயர் பெற்றான்?" என்ற கருத்தை அமைத்து,

" அளவறு பிழைகள் பொறுத்தருள் நின்னை
அணிஉருப் பாதியில் வைத்தான்
தமர்பிழை மூன்றே பொறுப்பவள் தன்னைச்
சடைமுடி வைத்தனன், அதனால்
பிணியியல் மதியம் சூடிய பெருமான்
பித்தனென் றொருபெயர் பெற்றான்
களமர்மொய் கழனி சூழ்திரு ஆனைக்
காவகி லாண்டநா யகியே "

[களமர்-உழவர்]

என்று அக் கவிஞர் பாடிய அழகான பாட்டில் "தண்ணீர் மூன்று பிழைதான் பொறுக்கும்" என்னும் பழமொழியைத் தழுவி எழுந்த கற்பனை, சிறந்த இன்பம் பயக்கின்றது.

திரு ஆனைக்காவில் உறையும் பெருமானைப் பணிந்து பாமாலை பல புனைந்தார் திருநாவுக்கரசர். தனக்குவமை யில்லாத் தலைவனாகிய ஈசன் திருவடியே மனக் கவலையை மாற்றும் மருந்து. அதுவே, தஞ்சம் அடைந்தோரைத் தாங்கும் தகைமை சான்றது; அஞ்சேல் என்று ஆதரிக்கும் அருமை வாய்ந்தது. ஆதலால் பெற்றோரையும் உற்றோரையும் பற்றி யில்லாது பற்றற்ற பரம்பொருளையே பற்றுக என்று பாடியுள்ளார் திருநாவுக்கரசர்.

" எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம், ஏவர் நல்லார்
செத்தால் வந்து உதவுவார் ஒருவர் இல்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய், நீடு பொன்னித்
திருஆனைக் காவுடைய செல்வா, என்தன்
அத்தா,உன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டம் கொண்டு அடியேன்
என்செய் கேனே "

[அல்ல கண்டம் - துன்பம்]

என்பது அப்பர் திருவாக்கு.


காவிரியாற்றின் நடுவே அமைந்த திரு நிலத்தில் சிவனும் மாலும் சேர்ந்து காட்சி தருகின்றார்கள். திரு ஆனைக்காவிற்கு அண்மையில் "தென்னாடும் வடநாடும் தொழ நின்ற திரு அரங்கம்" அமைந்துள்ளது. இவ்வண்ணமே காவிரியாற்றின் முதல் அரங்கமாகிய சிரங்கப்பட்டணத்திலும் அரங்கநாதன் கோயிலுக்கு அருகே கங்காதரனுக்கு உரிய சிவாலயம் ஒன்று உண்டு. காவிரியின் இடை அரங்கமாகிய சிவசமுத்திரத்திலும் சோமநாதன் கோயிலுக்கு அருகே அரங்கநாதன் ஆலயம் உள்ளது.


இவ்வாறு காவிரித்தாய் அரனும் அரியும் ஒன்றே என்று தன் மூன்று அரங்கங்களிலும் ஐயந்திரிபற அறிவிப்பினும் மக்களின் மதவெறியால் சமயப் பிணக்கம் நேர்ந்ததும் உண்டு. மாதா சேர்த்து வைத்த மதக் குடும்பத்தை மக்கள் பிரிக்க முயன்றனர்.

திருவானைக்காவில் வாழ்ந்த காளமேகம் இத்தகைய பூசல் ஒன்றைக் கண்டார்; அதன் காரணத்தையும் கூறினார்.

" சீரங்கத் தாரும் திருவானைக் காவாரும்
போரங்க மாகப் பொருவதேன்—ஓரங்கள்
வேண்டாமிந் தெல்லாம் விகற்பம் தெரியாதோ
ஆண்டாரும் தாதருமா னால் "

என்ற பாட்டால் அடியார் என்று பெயர் படைத்தவர்களாலேயே 'அடிபிடி' நிகழ்கின்றது என்பது நன்கு விளங்குகின்றது.


ஹத்திபாயின்
தராசு மார்க்
உத்திரவாதமான
ஸ்டெய்ன்லஸ்
ஸ்டீல்
பாத்திரங்கள்
உயர்ந்த ரகம்-நேர்த்தியான தயாரிப்பு
ஹத்திபாய் துள்ஸிதாஸ் அண்டு ஸன்ஸ், பம்பாய்-2


FS. 482
முறையான
உடைகள்
அல்லது
சாதாரண
உடைகள்
எதுவாயிருப்பினும்
டாடா 501 ஸ்பெஷல்
அவைகளை
சிறப்பாக
சலவை செய்கிறது
501
SPECIAL SOAP
FOR DELICATE MATERIALS
TATA PRODUCT
சுதேசிப் பொருள்களை
வாங்கி இந்தியத் தொழில்
களை ஆதரியுங்கள்.
டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்



அத்தியாயம் 27

மனம் குழம்பிற்று

அய்யாக்குட்டி என்னை விடுவதாக இல்லை. நான் எத்தனையோ காரணங்கள் கூறி மறுத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அவர் மேலும் மேலும் என்னைத் தேடிக் கொண்டு வந்து பேசிப் பேசி என் உறுதியைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்த்தி வந்தார். நான் வேண்டுமானால் அவருடன் சண்டை பிடித்துக் கொண்டு முகத்தில் விழிக்க வேண்டாம் என்று சொல்லி இருக்கலாம். ஆனால் அவ்விதம் ஏனோ நான் செய்யவில்லை. அவர் என்னுடன் பேசும்போது நான் தடுக்கவில்லை.

அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று என் தந்தை அவருக்கு எழுதிய கடிதம். இன்னொன்று என் தனிமை. அந்தக் கடிதத்தின் மூலம் இன்னும் என் தந்தை உயிரோடு இருக்கிறார் என்பதை நான் அறிந்து கொண்டேன். அந்த இன்பமான செய்தியைக் கொண்டு வந்த மனிதரிடம் கடுமையாக நடந்து கொள்ள மனம் எனக்கு இடங் தரவில்லை.

தவிரவும் என் உள்ளத்தில் தனிமை உணர்ச்சி விசுவரூபம் எடுத்து வளர்ந்திருந்தது. கவுண்டரும் அவரது மனைவியும் என்னிடம் எவ்வளவோ பிரியமாக இருந்த போதிலும், (இருவரும் மன்னிப்பார்களாக) ஏதோ பாலைவனத்தில் தன்னந்தனியே இருப்பது போன்ற உணர்ச்சிதான் எனக்கு இருந்து வந்தது. என் இதய தாபங்களை வெளியிட்டுக் கொள்ள யாரும் இல்லை. எனக்குச் சொந்தமான இதயம் என்று ஒன்று இருப்பதைக் கவுண்டர் தெரிந்து கொள்ளவில்லை. அவருக்கு எப்படி என் உணர்ச்சிகள் விளங்க முடியும்? எனக்குப் பொழுது போகவும் அங்கே வழி இருக்கவில்லை. அந்தத் தனிமையை என்னால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

அந்தச் சமயத்தில்தான் அய்யாக்குட்டி ஓரளவுக்கு இந்தத் தனிமையைப் போக்கடித்து வந்தார். அவரிடம், என் அன்னை தந்தையைப் பற்றியும், என்னுடைய அருமைத் தகப்பனாரான மந்திர மூர்த்தியைப் பற்றியும், முக்கியமாக ரங்கதுரையைப் பற்றியும் பேசுவதில் ஒரு ஆறுதல் கிடைத்தது.



திரும்பத் திரும்ப, “ரங்கதுரை திரும்பி வந்து விடுவாரா?” என்று அவரிடம் கேட்டுக் கொண்டிருந்தேன்.

ஒருநாள் அவர் “இந்து! ரங்கதுரை நிச்சயமாகத் திரும்பி வந்து விடுவார்” என்று கூறினார்.

“திடீரென்று எப்படி அவ்வளவு நிச்சயமாகத் தெரிந்து விட்டது?” என்று கேட்டேன்.

“நேற்று கோயமுத்தூரில் ஒருவரிடம் ஆருடம் கேட்டேன், இந்து. அவர் சொன்ன வாக்கு என்றுமே பொய்த்ததில்லை என்று எல்லோரும் சொல்கிறார்கள். எங்கள் பட முதலாளிகூட அவரைக் கேட்டுத்தான் படம் எடுப்பது வழக்கம். அவருடைய படம் ஒன்று கூட ஓடாமல் இருந்ததில்லை” என்று கூறினார்.

நான் கலகல வென்று சிரித்தேன்.

அய்யாக் குட்டியும் சிரித்துக் கொண்டே, “இன்னொன்று கூடக் கேட்டேன், இந்து. நீ கட்டாயம் சினிமாவில் சேர்ந்து பிரமாதப் புகழ் அடையப் போகிறாய் என்று ஜோஸியர் சொல்லி விட்டார்” என்றார்.

“அப்படியானால் நான் நிச்சயம் சினிமாவில் நடிக்க மாட்டேன்” என்றேன் நான்.

“நீ இந்த ஜோஸியத்துக்காக ஒரு காரியமும் செய்ய வேண்டாம். கொஞ்சம் உன் புத்தியைச் செலவழித்து யோசனை செய்து காரியம் செய்தால் உபயோகமுண்டு.”

“நான் புத்தியைச் செலவழிப்பதில்லை என்று சொல்லி என்னிடம் ஒரு காரியத்தைச் சாதித்துக்கொள்ள உங்களால் முடியுமா?

“விளையாட்டு கிடக்கட்டும், இந்து! இவ்வளவு புத்திசாலியான உனக்கு இந்தக் கலையின் பெருமை ஏன் தெரிய மாட்டேனென்கிறது? அதிலுள்ள குறைகளை மாத்திரம் பெரிய பூதக் கண்ணாடி வழியாகப் பார்க்கிறாயே? குறைகள் எங்கும்தான் இருக்கிறது. ஆனால் இந்தக் கலையின் உயர்வு உனக்கு ஏன் புரியவில்லை?”

“அடாடா! எங்கே? நீங்கள் அதன் பெருமைகளைச் சொல்லுங்கள், பார்ப்போம்” என்றேன்.

“எல்லாக் கலைகளுக்கும் சினிமாவில் இடமிருக்கிறது. கதை எழுதுவது,

நடிப்பு, பாட்டு, சித்திரம், சிற்பம், சகலமும் சினிமாவில் அடங்குகிறதா இல்லையா? அதைத் தவிர படம் பிடிப்பதற்கு காமிராவை ஓட்டுவது, விளக்குகள் போடுவது முதலியவைகளும் ஒரு தனி கலையாக்கும். அமெரிக்கா போன்ற நாடுகளில் இதையெல்லாம் கற்றுக் கொள்வதே பெருமை. நம்ம ஊர்தான் அலாதி. உலகத்திலுள்ளதையெல்லாம் மட்டமானது என்று நினைக்கும் அபூர்வமான இடம்."

"மட்டமானது என்று சொல்வதற்குக் காரணம் இருக்கத்தானே வேண்டும்? நெருப்பு இல்லாமல் புகையுமா?"

"என்ன காரணம்? கெடுதலும் நல்லதும் உலக முழுதும்தான் கலந்து இருக்கின்றன. எவ்வளவோ உயர்வென்று போற்றும் இடங்களில் கூடத்தான் ஊழல் இருக்கிறது. சினிமா உலகத்தில் எதற்குமே விளம்பரம் அதிகம். அதனால் அப்படி அதிகமாகத் தெரிகிறது. முன்பே நான் சொன்னதுபோல் நல்லவர்கள் அதிகமாக இத் துறையில் ஈடுபட்டு அதைப் பரிசுத்தமாக்க வேண்டியது அவசியம். சினிமா பொது ஜனங்களின் வாழ்க்கையை மிகவும் பாதிக்கிறது. அதில் சந்தேகமே இல்லை. ஆகவே அதை நல்ல வழியில் உபயோகித்து நன்மையைப் பரப்ப வேண்டும்" என்று ஆவேசமாகப் பிரசங்கம் புரிந்தார்.

"ஆகவே கெடுதலும் இருக்கிறதென்று நீங்கள் ஒப்புக் கொள்ளத்தானே செய்கிறீர்கள்?"

"ஏன், இந்து! ஒரு நல்ல சந்யாசி இருந்தால் பத்து போலி சந்யாசிகளும் இருக்கிறார்கள். அதனால் சந்யாச ஆசிரமமே தவறென்று சொல்வதா? இந்தச் சின்ன விஷயம் ஏன் உனக்குப் புரியமாட்டேனென்கிறது?"

அய்யாக்குட்டி பேசிய விஷயத்தைவிட அவருடைய குரலில் இருந்த உறுதி எனக்கு ஆச்சரியமாக இருந்தது. என்னையறியாமலேயே என் மனம் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்ந்து வந்தது. சினிமாவில் நடித்தால்தான் என்ன? அருணா தேவியின் படத்தைப் பார்த்து நான் விரும்பியதெல்லாம் நினைவுக்கு வந்தது. சுலோசனாவுடன் படப் பிடிப்பைப் பார்த்தது நினைவுக்கு வந்தது. சுலோசனா



அருணா தேவியை எப்படிப் புகழ்ந்தான்! படித்தவர்கள் நடிகைகளைப் பாராட்டத்தான் செய்கிறார்கள். நான் தான் ஏதோ கௌரவக் குறைவு என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். அருணா தேவியின் கௌரவம் உயர்ந்துதான் இருக்கிறது. என்ன குறைந்து விட்டது?

மேலும் ஈசுவரமூர்த்தியும் பத்மநாபனும் என்னைத் தேடிக் கொண்டு தான் இருப்பார்கள். ஒருநாள் நான் இருக்கும் இடம் தெரிந்து என்னை அவர்களுடன் வரும்படி கூறுவார்கள். பத்மநாபன் சட்டப்படி எனக்குக் கார்டியனானபடியால் நான் அவர் சொன்னபடி கேட்டு ஆக வேண்டி யிருக்கும். அவர்களுடன் எதிர்த்துப் போராடுவதற்கு நான் என்னைத் தயாராக்கிக் கொள்ள வேண்டும். அதற்கு புலிசாமி கவுண்டரை நம்பிப் பயனில்லை. அவரால் பெரிய வக்கீலுக்குச் சமமாக நிற்க முடியுமா? கொஞ்சம் பணம், செல்வாக்கு இரண்டும் இருந்தால் ரங்கதுரை திரும்பி வரும் வரையில் எப்படியேனும் காலந் தள்ளி விடலாம். அதன் பிறகு அது அவர் பொறுப்பு. அப்படியே ரங்கதுரை என்னை நிராகரித்து விட்டாலும் நானாக வாழ்வதற்கு இது உதவியாக இருக்கும். இன்னொருவரை நம்பியே வாழ்வது எப்படி சாத்தியம்?

என்னுடைய நிராதரவான நிலையில் படத்தில் நடிப்பதன் மூலம், சுதந்திரமாக வாழ இடமிருக்கிறது. அய்யாக்குட்டியின் நல்ல எண்ணம் இருப்பதால் பத்மநாபனைக் கூட எதிர்த்துப் போராடும் சக்தியை நான் இதன் மூலம் அடையக்கூடும். ஈசுவரமூர்த்தியின் கொடிய பிடியிலிருந்து தப்புவதற்கு இந்தத் தொழில் ஒரு அரிய சந்தர்ப்பத்தை அளிக்கிறது. ஒருவேளை கடவுளே இப்படி நடக்க வேண்டுமென்று தான் அய்யாக்குட்டியை நான் சந்திக்கும்படி செய்திருக்கிறாரோ என்னமோ?

நான் இதுவரை ஒரு காரியத்தையும் யோசித்து முடிவு செய்தது கிடையாது. சந்தர்ப்பங்களுக்குத் தலை குனிந்தே வந்திருக்கிறேன். அதன் மூலம் மேலும் துன்பம் என்னைத் தொடர்ந்தே வந்திருக்கிறது. எத்தனை விதமான கஷ்டங்களைப் பட்டாகி விட்டது? யாரை என்னுடைய வாழ்வின் சூரியன் என்று நினைத்தேனோ, அவர் நான் இருக்கிறேனா செத்தேனா என்று கூட விசாரித்ததாகத் தெரியவில்லை. ஒருவேளை அவர் திரும்பி வந்து கூட இருக்கலாம். என்னைத் தேடுவதற்கு முயற்சியே செய்யாமலிருக்கலாம். என்னை அடியோடு மறந்திருக்கலாம். ஆனால் என் கஷ்டத்தை அவரால் உணர முடியுமா? ஒருவர் பின் ஒருவராக என் அன்புக்கு உரியவர்களை இழந்தேன். இருந்த பணத்தை இழந்தேன். நண்பர்களை இழந்தேன். உணவுக்கும் இப்போது கஷ்டப்படுகிறேன். என்னைப் பார்த்துப் பரிதாபப்பட யார் இருக்கிறார்கள்?

சினிமாவில் சேர்ந்தால் நாலு பேர் நாலு விதமாகப் பேசுவார்கள் என்பதற்காகப் பயந்து கொண்டு சும்மா இருப்பதா? எதைச் செய்தாலும்தான் யாராவது ஏதாவது சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார்கள். நான் குற்றமே செய்தறியாதபோது குற்றம் சுமத்தி என்னைப் படுகுழியில் தள்ளப் பார்க்க வில்லையா? அதற்குப் பயப்பட்டு என்ன பயன்?

ஆனால் ரங்கதுரை என் மீது வைத்திருந்த அன்பு மாறாமலிருந்து, நான் சினிமாவில் நடிப்பதனால் அவர் உள்ளம் கசந்து போய் விட்டால் அதை என்னால் தாங்க முடியுமா? எப்படிப்பட்ட பயங்கரமான விஷயம். வேண்டாம்! வேண்டாம்!! சினிமாவே வேண்டாம். என்ன கஷ்டப்பட்டாலும் சரி; இது வேண்டவே வேண்டாம்!

ஆனால் அவருடைய மனம் மாறாமலிருந்தால், அன்பு உண்மையாக இருந்தால், என்னை ஏற்றுக் கொள்வதற்கு இது ஒரு தடையாக இருக்க முடியுமா? தூய்மையான அன்புக்கு முன்னால் இதெல்லாம் அற்ப விஷயமல்லவா?

இப்படிப்பட்ட குழப்பமான எண்ணங்களுடன் போராடிப் போராடிக் களைத்துப் போனேன். என்ன செய்வதென்று புரியாத தர்ம சங்கடமான நிலையில் தவித்தேன்.

இன்னும் இரண்டு நாட்கள் கழிந்தன. யோசித்துயோசித்துஎனக்கு முடிவு காணவே முடியவில்லை. சாதகமாக ஒரு எண்ணம் தோன்றினால், பாதகமாக நான்கு தோன்றின.

எல்லாவற்றையும் விட என் தந்தை உயிரோடிருக்கிறார் என்ற எண்ணம் எனக்கு ஒரு உற்சாகத்தை அளித்துக் கொண்டிருந்தது. அவரைப் பற்றிய உணர்ச்சிகளில் அதிசயந்தான் எல்லாவற்றையும் மிஞ்சி நின்றது. அவர் எப்படி இருப்பார்? எப்படி வாழ்கிறார்? இத்தனை நாள் என்ன செய்து கொண்டிருந்தார் என்றெல்லாம் கேள்விகள் அடுக்கடுக்காக எழுந்தன. அவர் எழுதிய கடிதத்தின் மூலம் எனக்கு அய்யாக்குட்டியின் பாதுகாப்புக் கிடைத்திருக்கிறதல்லவா?

அவரோடு பேச வேண்டியதில்லை. அவரைப் பார்க்க வேண்டியதில்லை. அவருடைய யோசனைகூட வேண்டியதில்லை. அவர் இருக்கிறார், என்னைக் கவனிக்கிறார் என்ற எண்ணமே எனக்குப் போதுமானதாக இருந்தது. அய்யாக்குட்டி அவருக்குப் பயந்து கொண்டாவது சரியாக நடந்துகொள்வார் அல்லவா?

அய்யாக்குட்டி நல்ல எண்ணத்துடன் நடந்து கொண்டால் சினிமாவில் சேர்வது கூடத் தப்பில்லை. வருகிற பணத்தைக் கொண்டு இவர்களுடைய கஷ்டத்தையாவது போக்கலாம். சும்மா இருந்துகொண்டிருந்தால் பைத்தியமே பிடித்துவிடும்.

இப்படிக் குழம்பிக் கொண்டே இருந்த சமயத்தில் நான் ஒரு முடிவுக்கு வர வேண்டிய நிர்ப்பந்தம் நேரிட்டது. ஒரு நாள், கவுண்டர் கடன் வாங்கியிருந்த செட்டியார் இரண்டு ஆட்களை அழைத்துக் கொண்டு வந்தார். வீட்டிலுள்ள சாமான்களையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்து அவர்கள் வண்டியில் ஏற்றத் தொடங்கினார்கள்.

அத்தியாயம் 28

நெருக்கடி நிலைமை

வாழ்க்கையில் நாம் எதிர்பாராத சில சம்பவங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. அந்தச் சமயத்தில் நாம் அந்தக் கஷ்டத்தையோ, நஷ்டத்தையோ, தலைவிதியே என்று சகித்துக் கொள்கிறோம். ஆனால் பிற்காலத்தில் எண்ணிப் பார்க்கும்போது அதே சம்பவம் ஏதோ முன்பே திட்டம் வகுக்கப்பட்டு நடந்தமாதிரிதோன்றுகிறது.

செட்டியார் அன்று வந்து அப்படி நெருக்கியிருக்காவிட்டால் நான் ஒருவேளை சினிமாத் துறையில் ஈடுபட்டிருக்கவே மாட்டேன் என்று நினைக்கிறேன். ஆனால் அதையுந்தான் நிச்சயமாக எப்படிச் சொல்ல முடியும்? என்னுடைய மனோநிலை எனக்கே சில சமயம் புரியமாட்டேனென்கிறது. ஒன்று நிச்சயம். நான் நடிகையாவதற்கு அப்போது ஏற்பட்டிருந்த நெருக்கடியான நிலைமை ஒரு முக்கியமான காரணமாகும்.

* * * *

செட்டியார் கவுண்டரிடம், "வீட்டை ஏலம் போடப் போகிறோம். உடனே வெளியில் போய் விடுங்கள்" என்று கூறினார். முனிசாமி கவுண்டர் தலையில் கையை வைத்துக் கொண்டு வெளியே மரத்தடியில் உட்கார்ந்து விட்டார். வள்ளியும், பாட்டியும் அழத் தொடங்கினார்கள்.

எனக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

ஆனால் கோபத்தை யாரிடம் காட்டுவது? கோபத்தினால் பயனில்லை என்று நன்றாகத் தெரிந்திருந்தது. அந்தக் கணத்தில் நான் சினிமாவில் சேர்ந்து நடித்துக் கவுண்டர் குடும்பத்தினுடைய துன்பத்தைத் தீர்ப்பது என்று தீர்மானித்தேன். அவர்களுடைய கஷ்டம் தீருவதற்காக ஒரு படத்தில் நடிப்பது, பின்னர் விட்டுவிடுவது என்று தீர்மானித்துக் கொண்டு செட்டியார் நின்ற இடத்துக்குச் சென்றேன்.

"தாங்கள் நான் சொல்வதைத் தயவு செய்து கேட்க வேண்டும்" என்றேன் அவரிடம்.

"சொல்லுங்கள்" என்றார்.

"இந்த யாதிரி காரியம் செய்யாதீர்கள். உங்களுக்கு எவ்வளவு பணம் சேர வேண்டுமோ, அதை வட்டியும் முதலுமாக அடுத்த மாதம் நான் செலுத்தி விடுகிறேன்" என்றேன்.



"ஆனால் எப்படி...?" என்று இழுத்தார் செட்டியார்.

"நான் கையெழுத்துப் போட்டுத் தருகிறேன். அவ்வளவுதானே? உங்களுக்கு அவர்களைத் துன்புறுத்தும் நோக்கம் இல்லையே? எதற்காகத் தயங்குகிறீர்கள்?" என்று கேட்டேன்.

என் குரல் கடுமையாக இருந்தது. நான் பேசிய விதம் எனக்கே அளவில்லாத வியப்பை அளித்தது.

வெகு நேரம் தர்க்கம் செய்த பிறகு செட்டியார் நான் கூறியதற்கு இணங்கினார். என் மீது அவருக்கு இரக்கம் ஏற்பட்டதாகத் தோன்றியது. ஆனால் அதற்காக மட்டும் அவர் இணங்கிவிடவில்லை. இந்த சமாசாரம் அதற்குள் பரவிச் சேரி ஜனங்களெல்லாரும் வந்து விட்டார்கள். அவர்களும் முனிசாமி கவுண்டரைத் துன்புறுத்தக் கூடாது என்று கேட்டுக் கொண்டார்கள். அவருக்காகப் பரிந்து பேசினார்கள். ஒரு முரட்டுவாலிபன், "சாமி! நீ அவர்களைத் துரத்திவிட்டா பிறகு என்ன ஆகும்னு எனக்கே தெரியாது. ஜாக்கிரதை!" என்று மிரட்டினான். அதில் அவர் சற்றுப் பயந்து விட்டார் என்று தோன்றியது.

கடைசியில் ஒரே ஒரு மாதம் தவணை தருவதாயும், அதற்குள் திருப்பித் தராவிட்டால் வீட்டை ஜப்தி செய்து விடுவதாயும் கூறினார். அதற்கு நான் சரியென்று சொல்லவே சாமான்களையெல்லாம் மறுபடியும் வீட்டினுள் வைக்கச் சொன்னார்.

நான் என்ன எண்ணத்துடன் கூறியிருக்க வேண்டுமென்று ஊகித்துக் கொண்ட முனிசாமி கவுண்டர், "குழந்தே! உனக்கு நாங்கள் என்னமாய் நன்றி செலுத்தப் போகிறோம்?" என்று நாத் தழுதழுக்கக் கூறினார்.

"இப்படியெல்லாம் சொல்லாதீர்கள், தாத்தா! எனக்குப் பிடிக்காது" என்று சொன்னேன்.

அரை மணி நேரத்தில் செட்டியார் காலி வண்டியுடன் திரும்பிச் சென்றார்.

இந்தச் சம்பவங்கள் நடந்த இரண்டு நாட்களுக்கெல்லாம் அய்யாக்குட்டி வந்தார். நான் அவரிடம் நடந்ததையெல்லாம் விவரமாகச் சொன்னேன். அவருக்கு நான் எப்படியோ சம்மதித்து விட்டேன் என்பதில் மிக்க மகிழ்ச்சி. அந்த சந்தோஷத்தில் செட்டியாரை வாழ்த்தக் கூடச் செய்தார் என்றால் பாருங்களேன்.

"நீங்கள் இவ்வளவு சந்தோஷப்படுவதைப் பார்க்கும்போது எனக்கு மறுபடியும் கவலையாக இருக்கிறது" என்று கூறினேன்.

உடனே அவர் முகம் கன்றிப்போய் விட்டது. "இந்துமதி! என் மனத்தில் சிறிதுகூடத் தப்பெண்ணம் கிடையாது. என்னுடைய வார்த்தையில் உனக்கு நம்பிக்கையில்லாவிட்டாலும், உன்னுடைய தந்தை உயிருடன் இருக்கிறாரே. அவரிடமுள்ள பயத்தினாலாவது நான் சரியாக நடந்து கொள்ள மாட்டேனா?" என்றார்.

"கடிதம் அவர் எழுதினார் என்பது என்ன நிச்சயம்? எல்லாமே உங்கள் கற்பனையாக இருந்தால் ......?"

அய்யாக்குட்டி உடனே தமது சட்டைப் பையிலிருந்து பர்ஸை எடுத்தார். அதிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுத்தார். "நீ இப்படிச் சொல்லலாம் என்று நான் எதிர்பார்த்துத்தான் இதைக் கொண்டு வந்தேன்" என்று கூறினார்.

அதை ஆவலுடன் வாங்கிப் பார்த்தேன். அது அப்பாவின் கையெழுத்து என்றே தோன்றியது. அவருடைய கையெழுத்தை நான் பார்த்திருக்கிறேன். போட்டோ ஆல்பங்களில், ஒவ்வொரு புகைப்படத்துக்கும் கீழே, இன்னின்ன இடத்தில் எடுத்தது என்று எழுதியிருக்கும். அது அவரே எழுதியது என்று என் அன்னை கூறியிருக்கிறாள். ஆகவே இதைப் பார்த்தவுடன் அந்தக் கையெழுத்துத்தான் என்று தோன்றியது. அதைப் பார்த்து விட்டு அய்யாக்குட்டியிடம் திருப்பிக் கொடுத்து விட்டேன்.

"என்ன நினைக்கிறாய், இந்து?" என்று கடிதத்தைக் கையில் வாங்கிக் கொண்டே கேட்டார் அய்யாக்குட்டி.

"அது அப்பாவின் கையெழுத்து என்று தான் தோன்றுகிறது. ஆனால் இதற்கும் சினிமாவில் நடிப்பதற்கும் என்ன சம்பந்தம்?"

"ஏன் சம்பந்தமில்லை? நான் உனக்கு உதவியாக இருப்பதை உன் தந்தை விரும்புகிறார் என்பது இந்தக் கடிதத்திலிருந்து தெரியவில்லையா? ஆகையால் என் யோசனையின்படி நீ நடப்பது அவருக்குச் சந்தோஷம் அளிக்குமென்றே நான் நினைக்கிறேன். நமக்குத் தெரியாமல் உன் தந்தை உன்னைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார். அதில் சந்தேகமே யில்லை."

"திரும்பத் திரும்ப இப்படிப் பேசுவானேன்? நான் ஒரு படத்தில் நடிக்க ஒப்புக் கொள்கிறேன். செட்டியாருக்குக் கவுண்டர் பணம் கொடுக்க வேண்டும். அதைக் கொடுப்பதற்காகத்தான் நான் நடிப்பதாகச் சொல்கிறேன். ஒரு படத்துக்குமேல் நடிக்கச் சொல்லி என்னை நீங்கள் வற்புறுத்தக் கூடாது. இந்த வாக்குறுதியை எனக்கு அளியுங்கள்" என்றாள் இந்துமதி.

"நீ சொல்வது எதற்கும் நான் மாறாக ஒன்றும் சொல்ல மாட்டேன். சரிதானே?" என்றார் அய்யாக்குட்டி.

• • •

அன்று அவர் கொடுத்த வாக்குறுதியை இன்றுவரை காப்பாற்றி வருகிறார். எந்த விஷயத்திலும் சென்ற நான்கு வருஷ காலமாக நான் சொன்னதை மீறி அவர் நடந்ததில்லை. என்னைக் கலந்து கொள்ளாமலும் எதுவும் செய்ததில்லை. எத்தனையோ உதவிகளும் செய்திருக்கிறார். அதனாலேயே எனக்கு அவர் செய்ததை மன்னித்து அவரைக் காப்பாற்றிவிட வேண்டுமென்று தோன்றிற்று. அந்தக் காரணத்தினால்தான் அவருடைய பெயரை நான் உச்சரிக்கவே யில்லை. நான் சிறைக்கு வந்த பிறகுகூட எனக்கு வேண்டியதை யெல்லாம் அவர் வெளியில் செய்து கொண்டு தான் இருக்கிறார். என் தந்தை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற பயத்தினாலா அல்லது என்மீது உள்ள சுயநலமற்ற பிரியத்தினாலா என்பது மாத்திரம் இன்னும் விளங்கவில்லை.

• • •

"இப்போது என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள்" என்று அய்யாக்குட்டியைப் பார்த்துக் கேட்டேன் நான்.

"எல்லாம் தயாராக இருக்கிறது. உன்னை அவர்கள் பேட்டி காண வேண்டியதுதான் பாக்கி."

"அப்படி யென்றால்......?"

"அன்று பாதியில் ஷூட்டிங் நின்று போனது உனக்குத் தெரியுமல்லவா? அந்த நடிகை கடைசியில் வரமாட்டேனென்று சொல்லி விட்டாள். டைரக்டருக்கும் அவளுக்கும் பெரிய சண்டையாய்ப் போய் விட்டது. யாராலும்



சமாதானப் படுத்த முடியவில்லை. இதனால் பட முதலாளிக்கு ரொம்ப வருத்தம். அவருக்கல்லவா நஷ்டம்? அவர் என்னிடம் இதைச் சொல்லி வருத்தப்பட்டார்.

"'என்ன ராஜாராம்? இப்படி இவர்கள் எலியும் 'பூனையும் மாதிரி சண்டை போட்டுக் கொண்டு என் படத்தைக் குட்டிச் சுவராக்குகிறார்களே? இவளை வைத்துப் படம் எடுக்கவும் முடியாது போலிருக்கிறது. வேறு புது நடிகையை எடுத்துக் கொள்வதாக இருந்தால் ஏகப்பட்ட செலவாகுமே? எடுத்ததையெல்லாம் திரும்ப எடுக்க வேண்டியிருக்குமே?' என்றார் பட முதலாளி.

"நான் அந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு, 'நான் ஒரு யோசனை சொல்கிறேன், ஸார். எனக்குத் தெரிந்த ஒரு அழகான பெண் இருக்கிறாள். கிட்டத்தட்ட இந்த நடிகை மாதிரியே இருப்பாள். இன்னும் கூட அழகாக இருப்பாள். காமிராவுக்கு ஏற்ற முகம், ஸார். அவளை நீங்கள் எடுத்துக் கொண்டால் 'க்ளோஸ்-அப் ஷாட்டு'களை மாத்திரம் திருப்பி எடுத்தால் போதும். 'லாங் ஷாட்டு'களை அப்படியே வைத்துக் கொள்ளலாம். புதிதாக இருப்பதால் நீங்கள் அவளுக்குப் பாதிப் பணம் முதலில் கொடுத்தால் போதும். படம் வெற்றிகரமாக ஓடினால் பாக்கியைக் கொடுத்தால் போதுமானது' என்று கூறினேன். அவரும், 'அப்படியென்றால் அழைத்துக் கொண்டு வா. எப்படியிருக்கிறாள் என்று பார்ப்போம். போட்டோ எடுத்துப் பார்த்து விடுவது. பாடத் தெரியா விட்டால்கூடப் பாதகமில்லை. ஏற்கெனவே பதிவாகியிருப்பதை வைத்துக்கொண்டு 'மானேஜ்' பண்ணி விடலாம்' என்றார்.

"'இல்லை ஸார்! பிரமாதமாகப் பாடுவாள். நீங்கள் வேண்டுமானால் அவளை எல்லாவிதத்திலும் பரீட்சை பண்ணிப் பாருங்கள். அவள் கட்டாயம் இந்தப் பாத்திரத்துக்கு மிகவும் பொருத்தமானவள்' என்றேன். உன்னை அழைத்துக் கொண்டு வரச் சொல்லி விட்டார். நீ என்ன சொல்லப் போகிறாயோ என்றுதான் பயந்து கொண்டு வந்தேன். நல்ல வேளையாக நீயும் பெரிய மனது பண்ணி சம்மதித்து விட்டாய்" என்றார் அய்யாக்குட்டி.

"இவ்வளவு தூரம் ஏற்பாடு செய்து விட்டீர்களா? எப்போது போக வேண்டும்?" என்று கேட்டேன்.

"நாளைக்கு நாள் நன்றாக இல்லை. அதற்கு அடுத்த நாள் புதன்கிழமை. பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காதாம். நீ புதன்கிழமை காலையில் தயாராக யிரு. நான் கார் கொண்டு வந்து உன்னை அழைத்துப் போகிறேன்" என்று கூறினார்.

"ஆனால் இன்னொரு கஷ்டம் இருக்கிறதே. நான் படத்தில் நடித்தால் என் பெயர் விளம்பரங்களில் வெளியாகுமே? அதைப் பார்த்து நான் எங்கே இருக்கிறேனென்று உடனே வக்கீல் பத்மநாபன் கண்டு பிடித்து விட மாட்டாரா?"

"இது என்ன பிரமாதம் இந்து? அழகான பெயர் ஒன்று கிடைக்காமலா போய்விடும்? அதைப் பற்றிப் பின்னால் யோசிக்கலாம்."

"பின்னால் யோசிப்பானேன். இப்போதே சொல்லுங்கள். அங்கே எல்லோருக்கும் என்னை இந்துமதி என்றா அறிமுகம் செய்து வைக்கப் போகிறீர்கள்?" என்று கேட்டேன்.


"தற்சமயத்துக்கு விமலா என்று சொல்லுகிறேன். நட்சத்திரப் பெயர் ஏதாவது யோசித்துப் புது மாதிரியாக வைத்துக் கொள்ளலாம்."

"அப்படியே செய்யலாம். இதை மறந்து விடாதீர்கள். விமலா என்று நானும் சொல்லிப் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் எனக்கே மறந்து விடும்."

"போய் விட்டு வருகிறேன் விமலா! நீ புதன் கிழமை தயாராக இரு" என்று சொல்லி விட்டுச் சென்றார் அய்யாக்குட்டி.


நான் உடனே வள்ளியைக் கூப்பிட்டு "இனி மேல் என்னை 'விமலா அக்கா' என்று கூப்பிடு" என்று உத்தரவு போட்டேன்.


அவளுக்கு வேடிக்கையாக இருந்தது. "சரி இந்து...இல்லே விமலா அக்கா" என்றாள் அவள். (தொடரும்)





பிரும்மாண்டமான எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளை நிர்மாணித்தவர்கள், அவற்றில் வேலை செய்வோரின் நலன்களிலும் சிரத்தை கொண்டு ஜாகை வசதியும் செய்து தந்திருக்கிறார்கள். 1. வேலைக்குப் பிறகு உல்லாசமாக இருக்கும் ஒரு எஸ். வி. ஓ. ஸி. குடும்பம். 2. எல்லா வசதிகளும் பெற்ற சமையலறை. 3. எஸ். வி. ஓ. ஸி. இந்தியப் பகுதிக்கு மானேஜராக இருந்த ஸி. பி. மார்ஷல், இப்பொழுது டைரக்டர்களின் உதவித் தலைவர். 4. ஜான் ஆர். சூமான், இவரும் ஒரு உதவித் தலைவர். 5. ஸ்டான்வாக் சுத்திகரிப்பு ஆலையின் மானேஜிங் டைரக்டர் வில்லியம்ஸ் ஏ. வில்லியம்ஸ். 6. ஆலையில் மணிக்கு 54,000 டன் நீராவியை உற்பத்தி செய்யும் 'பாய்லர்' யந்திரங்கள். 7. எண்ணெய் தேக்கி வைக்கப்படும் கிணறுகள்.





பூமியை வெட்டிக் குடைகிறார்கள்! பெட்ரோலியம் எடுத்துக் குவிக்கிறார்கள்!



7. விஞ்ஞான வித்தை

உலகத்தில் நாம் காணும் எந்த வஸ்துக்களும் பல அணுக்களின் கூட்டம் என்பதை எல்லாரும் அறிந்திருக்கலாம்.

கண்ணுக்குத் தெரியாத பல அணுக்கள் காற்றில் கூடக் கலந்து இருக்கின்றன. அந்த அணுக்களின் கூட்டம்தான் காற்று. அப்படிப்பட்ட அணுக்களின் கூட்டம் நம் மீது படும் போதுதான் நாம் காற்றை உணர முடிகிறது.

பனிக்கட்டியில் சூடு ஏற்றினால் வாயுவாகி விடும். இது போல, இரும்பு, செம்பு, தங்கம் முதலிய எந்தக் கடினமான பொருளிலும் சூடு ஏற்றினால் திரவமாக உருப்பெற்று விடும். அந்தத் திரவப் பொருளில் சூடு ஏற்றினால் வாயுவாகி விடும். இவ்வாறு உலகில் உள்ள அத்தனைப் பொருள்களையும் வாயு நிலைக்குக் கொண்டு வந்து விடலாம்.

இந்த வாயு பல பௌதிக அணுக்களைக் கொண்டது. அந்த அணுக்கள் ஒவ்வொன்றுக்கும் விஞ்ஞானிகள் பல பெயர் வைத்திருக்கிறார்கள். உதாரணமாகத் தண்ணீரை எடுத்துக் கொள்ளலாம். அது ஜலவாயுவும் பிராண வாயுவும் கலந்த ஒரு கலவைதான். அதாவது அந்த இரண்டு வாயுக்களும் கலந்த பரமாணுக்களின் கூட்டம் தான் தண்ணீர். இரண்டு ஜலவாயு அணுக்களும் ஒரு பிராணவாயு அணுவும் சேர்ந்தால் தண்ணீராக மாறி விடும்.

அதேமாதிரி ஜலவாயு அணுக்களும் கரி அணுக்களும் சேர்ந்தால் "ஹைட்ரோ கார்பன்கள்" ஆகிவிடுகின்றன. மண்ணெண்ணெய், பெட்ரோல், டீஸல் எண்ணெய் முதலியவைகளில் பலவிதமான ஹைட்ரோ கார்பன்களின் கலவை அடங்கி இருக்கின்றன. பெட்ரோலில் இத்தனை கன அளவுள்ள ஹைட்ரோ கார்பன்கள் இருக்கின்றன என்பதைக் கணக்கெடுத்து வைத்திருக்கிறார்கள். அதே அளவு கனமுள்ள ஹைட்ரோ கார்பன் அணுக்கள் கலவை வரும்படி இதர கனரக எண்ணெய்களைப் பிரிக்கின்றனர். அதாவது கனரக எண்ணெயில் உள்ள ஹைட்ரோ கார்பன்களின் பெரிய



பரமாணுக்களை, பெட்ரோல் எண்ணெயில் உள்ளது போன்று சிறிய ஹைட்ரோ கார்பன் அணுக்களாக உடைத்துப் பிளந்து மாற்றுகிறார்கள். இப்படிச் செய்வதற்கு உதவி புரியும் விஞ்ஞான வித்தையைத்தான் பிளப்பு முறை என்று சொல்லுகிறார்கள். இதுபோல் ரஸாயன உதவியால் மாற்றப்பட்ட பெட்ரோலைப் "பிளக்கப்பட்ட பெட்ரோல்" என்கிறார்கள்.

இதனால் உலகத்தில் உள்ள கார்களுக்குத் தேவையான அளவு பெட்ரோல் எண்ணெயை, எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகளில் உற்பத்தி செய்துவிட முடிகிறது. அத்துடன் இந்தப் பிளப்பு முறை பெட்ரோலை மோட்டார் கார்களுக்கு உபயோகித்தால், கார்களின் இயந்திரங்கள் சுகமாக இயங்குவதற்கும் சத்தம் இல்லாமல் நீண்ட நேரம், நெடுந்தூரம் ஓடுவதற்கும் வசதியாக இருக்கிறதாம்.

இவ்வாறு எண்ணெய் சுத்தம் செய்து பிரிக்கப்படுவதற்கு, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் இருக்கும் இடத்துக்குப் பண்படா எண்ணெயைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டுமல்லவா! அதை எப்படிக் கொண்டு வந்து சேர்ப்பது! எதன் மூலம் கொண்டு வருவது!

8. குழாய் மார்க்கம்

பண்படா எண்ணெய் மற்றப் பொருள்களைப்போன்றது அல்ல. ஆவியாகமாறும் இயல்புடையது. விரைவில் தீப்பற்றிக் கொள்ளக் கூடிய தன்மை வாய்ந்தது. ஆகையால் பெட்ரோலியத்தை எடுத்துச் செல்லும் சாதனம் விரைவில் தீப்பற்றிக் கொள்ளக் கூடாததாகவும், ஆவியாக மாறிவிடாதபடி விசேஷ பாதுகாப்புடையதாகவும் இருக்க வேண்டும். ஆகவே பெட்ரோலியம் எண்ணெய்ப் பொருள் பூமியிலிருந்து எடுத்து எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்குச் சென்று சுத்தப்படுத்தப்பட்டு நம்முடைய உபயோகத்துக்கு வருவதற்குள் நீண்டதொரு பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

முன்பெல்லாம் அதாவது ஆரம்ப காலத்தில் பண்படா எண்ணெயை மரப் பீப்பாய்களுக்குள் அடைத்து எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளுக்குக் குதிரை வண்டிகள் மூலமாகத்தான் கொண்டு சென்றிருக்கிறார்கள். எண்ணெய்க் கிணறுகள் அதிகமாகத் தோண்டத் தோண்ட ஏராளமான மரப் பீப்பாய்களும், குதிரைகளும் வேண்டியிருந்தன. அப்படி அதிகமான குதிரைகளும், மரப் பீப்பாய்களும் கிடைப்பது கஷ்டமாகத் தொடங்கியது. அத்துடன் ஏராளமான எண்ணெய்ப் பொருள்கள் சேதமடையத் தொடங்கின. சில அபாயங்களும் ஏற்படத் தொடங்கின. இந்த அநுபவங்களையெல்லாம் கொண்டு பண்படா எண்ணெயை எடுத்துச் செல்லும் முறையை மாற்றத் தொடங்கினர்.

குழாய்கள் மூலமாக எண்ணெய் எடுத்துச் செல்லும் முறையைக் கண்டு பிடித்து அதன் மூலம் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு எடுத்துச் செல்லத் தொடங்கினர். இன்றைய தினம் நூற்றுக் கணக்கான மைல்கள் குழாய் மார்க்கமாக பெட்ரோலியம் எண்

ணெய்ப் பொருள்கள் கொண்டு போகப்படுகின்றன. பல ஆண்டுகளின் அனுபவத்தாலும் ஆராய்ச்சியாலும் குழாய் மார்க்கம் நல்லமுறையில் முன்னேறியிருக்கிறது.

பூமிக்கு மேலும், பூமிக்குக் கீழும், பாலைவனத்திலும், காட்டு மத்தியிலும், கடலிலும் பெட்ரோலியம் குழாய் மார்க்கம் செல்கின்றன.


அமெரிக்காவில் உள்ள பெட்ரோலியம் குழாய் மார்க்கம் மட்டும் உலகத்தையே பதின் மூன்று முறை சுற்றி வரும் அளவு நீளம் உடையதாம். அப்படியானால் பெட்ரோலியம் குழாய் மார்க்கம் எவ்வளவு நீளம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஈராக் தேசத்தில் உள்ள கிர்கக் என்னும் இடத்திலிருக்கும் எண்ணெய்க் கிணற்றிலிருந்து மத்தியதரைக் கடற்கரை ஓரமாக உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்குச் சுமார் 620 மைல் நீளம் குழாய்கள் போட்டுப் பெட்ரோலியத்தை அனுப்புகிறார்கள். இன்னொரு குழாய் மார்க்கம் சவுதி அரேபியாவிலிருந்து மத்தியதரைக் கடற்கரையில் இருக்கும் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்குப் போட்டிருக்கிறார்கள். அதன் நீளம் 1,100 மைல்களாகும். தமிழ் நாட்டின் தெற்கெல்லையான குமரி முனையிலிருந்து இந்தியாவின் தலைநகரமான புதுடில்லி வரையில் உள்ள நீண்ட நெடுந் தூரத்துக்கு அதை ஒப்பிடலாம்.

பெட்ரோலியம் எண்ணெய் இவ்வளவு தூரம் குழாய்களில் பிரயாணம் செய்யும் போது நடுவில் அதன் ஓட்டம் தடைப்படலாம். இன்னும் ஏதாவது அடைப்புகள் ஏற்பட்டுத் தாமதம் ஆகலாம். அவ்வாறெல்லாம் ஏற்படாமல் ஆற்று நீர்போல் ஜிலு ஜிலு வென்று பெட்ரோலியம் எண்ணெய் குழாய்க்குள் ஓடிக்கொண்டிருக்க வேண்டுமல்லவா! அதற்கு வசதியாக நடு நடுவே குழாய்களில் உள்ள பெட்ரோலியத்தை அது போக வேண்டிய இடத்தை நோக்கி அடித்துத் தள்ளும் இயந்திர சாதனங்களைப் பொருத்தி பெட்ரோலியம் எண்ணெயை அடித்துத் தள்ளுகிறார்கள். இது இல்லாமல் கப்பல் மூலமாகவும், ரயில் மூலமாகவும் கொண்டு செல்கிறார்கள்.

சுத்தம்செய்து எண்ணெய்களை இனம் வாரியாகப் பிரித்தாகிவிட்டது. பிரிக்கப்பட்ட எண்ணெய்களைத் தனித் தனியாக ஒரு இடத்தில் வைக்க வேண்டாமா! அந்த எண்ணெய், நெல் அரிசி முதலிய தானியங்களைப் போல ஒரு இடத்தில் மூட்டையாகக் கட்டிப் போடக் கூடிய பொருளா! இல்லையே! பெட்ரோலியம் எண்ணெய்களுக்குத் தீயினால் ஆபத்து நேராமலும், ஆவியாக மாற முடியாமலும் வைத்துக் கவனமாகக் காப்பாற்ற வேண்டுமே. அதை எப்படிச் செய்கிறார்கள்!

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னால் பிஸ்ஸி மாமாவும் கர்னல் டிரேக்கும் கண்டு பிடித்த எண்ணெய் இப்பொழுது எவ்வளவோ வழிகளில் சீர்திருந்தி எத்தனையோ நல்ல காரியங்களுக்கு உபயோகமாகி வருகிறது. ஒவ்வொரு கடற்கரையை ஒட்டிய நகரங்களிலும் வெள்ளியால் செய்யப்பட்டது போன்று பளபள வென்று மின்னும் பெரிய இரும்புத்தொட்டிகள் கம்பீரமாகக் காட்சி யளிப்பதை நேயர்களில் பலர் பார்த்திருக்கலாம். அந்தப் பெரிய தொட்டிகளுக்குள் எல்லாம் என்ன இருக்கிறது தெரியுமா! மண்ணெண்ணெய், பெட்ரோல் எண்ணெய் முதலிய பெட்ரோலியம் எண்ணெய்ப் பொருள்கள் தான் இருக்கின்றன.



பாரதத்தில் பர்மா ஷெல் கம்பெனியார் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தொடங்க அனுமதிக்கும் ஒப்பந்தத்தில் பர்மா ஷெல் கம்பெனி பிரதிநிதிகளும், பாரத சர்க்கார் பிரதிநிதிகளும் கையொப்பமிட்டனர்.

அந்தத்தொட்டிகள் தீயினால் பாதிக்கப்படக் கூடாததாகவும், அதற்குள் இருக்கும் எண்ணெய்கள் ஆவியாக மாறி விடாதபடியும் விசேஷ முறையில் அமைக்கப்பட்டவை. பல ஆண்டுகள் பல வித அனுபவங்கள் பெற்று வளம் பெற்ற தொட்டிகள் அவை. இருந்தாலும் இன்னும் அந்தத் தொட்டிகளின் சீர்திருத்தம் பற்றி நிபுணர்கள் ஆராய்ந்து கொண்டே இருக்கிறார்கள்.

நாம்பெரும் பெட்ரோலையும்மண்ணெண்ணெயையும் பற்றி ஒருகணம் சிந்தித்துப் பார்த்தால் வியப்பாக இருக்கிறது. எத்தனை ஆயிரம் மைல்களுக்கு அப்பால், எத்தனை மாதங்களுக்கு முன் உற்பத்தியாகி எவ்வளவு நீண்ட நெடுந்தூரம் பிரயாணம் செய்து நம் கைக்குக் கிடைக்கின்றன. அடாடா! அந்த எண்ணெய்கள் தான் எத்தனை உருவங்கள் எடுத்துப் பிரயாணம் செய்கின்றன! சிறிய டின்கள், பெரிய டின்கள், டிரம்கள், எண்ணெய் லாரிகள், எண்ணெய்த் தொட்டிகள் பொருந்திய ரயில்கள், கிராமத்தில் உள்ள படகுகள், மாட்டுவண்டிகள்

இப்படி எத்தனையோ விதமான உருவங்களில் பிரயாணங்கள் செய்கின்றன !

9. எண்ணெய் விநியோகம்

நகரத்தின் ரயில்வே நிலையங்களின் ஓரமாகப் பளபள வென்று வெள்ளி போல் மின்னும் எண்ணெய்த் தொட்டிகளைப் பலர் பார்த்திருப்பார்கள். ஊர்தோறும் உள்ள இந்த எண்ணெய்த் தொட்டிகளில் எண்ணெயைச் சேமித்து வைத்திருப்பவர்கள் யார் ! நமக்கு எண்ணெய் விநியோகம் செய்யும் உரிமை பெற்ற எண்ணெய்க் கம்பெனிக்காரர்கள் தான்.



பர்மா ஷெல் மானேஜிங் டைரக்டர் எச்.ஜே. ட்ரோ

இந்தியாவில் இப்படி பெட்ரோலியம் எண்ணெய்களை விநியோகம் செய்யும் கம்பெனிகள் பல இருக்கின்றன. ஸ்டாண்டர்டு வாக்குவம் எண்ணெய்க் கம்பெனி, பர்மாஷெல் எண்ணெய்க் கம்பெனி, கால்டெக்ஸ் எண்ணெய்க் கம்பெனி ஆகிய மூன்று முக்கியமான ஸ்தாபனங்கள் எண்ணெய் விநியோகம் செய்து வருகின்றன. நல்ல முறையில் அவை மக்களுக்குத் தொண்டாற்றி வருகின்றன. அவற்றுள் ஸ்டாண்டர்டு வாக்குவம் எண்ணெய் ஸ்தாபனம், பர்மாஷெல் எண்ணெய் ஸ்தாபனம் ஆகிய இரு ஸ்தாபனங்களும் எண்ணெய் விநியோகம் செய்யும் தொண்டை மிகச் சிறந்த முறையில் செய்து வருகின்றனர்.

ஸ்டாண்டர்டு வாக்குவம் எண்ணெய் ஸ்தாபனம் உலகத்தில் உள்ள எண்ணெய் ஸ்தாபனங்களுக்கெல்லாம் முதன்மையானது ! முதல் எண்ணெய்க் கிணறு தோண்டிய மூன்று வருஷங்களுக்குள்ளாகவே அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்தாபனம். அது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து கொண்டு வந்து இன்று உலகம் பூராவும் எத்தனையோ கிளை ஸ்தாபனங்களுடன் திகழ்கிறது.

மேற்படி ஸ்தாபனத்தார் 1893ம் ஆண்டு முதன் முதலில் இந்தியாவுக்கு மண்ணெண்ணெய் கொண்டு வந்தனர். நியூயார்க்கிலிருந்து சுமார் ஐந்து மாதங்கள் அலைக்கும் பெரிய கடலில் மண்ணெண்ணெய் பிரயாணம் செய்து கொண்டு கல்கத்தா துறைமுகத்துக்கு வந்தது. இந்தியாவில் மண்ணெண்ணெய்க்கு நல்ல கிராக்கி ஏற்படவே இந்தியாவில் உள்ள எல்லா பெரிய துறைமுகங்களிலும் ஸ்டாண்டர்டு வாக்குவம் எண்ணெய்க் கம்பெனியார் எண்ணெய்க் கிடங்குகள் வைத்து வியாபாரம் செய்ய ஆரம்பித்தனர்.

முதன் முதலில் 1901-ம் ஆண்டு ஸ்டாண்டர்டு வாக்குவம் எண்ணெய் ஸ்தாபனத்தார் கல்கத்தா நகரில் எண்ணெய்க் கிடங்குகள் கட்டினர். அது இன்றைய தினம் முப்பத்து மூன்று ஏக்கர் நிலப் பரப்பில் விஸ்தாரமாக வளர்ந்து ஸ்டாண்டர்டு எண்ணெய் ஸ்தாபனத்தாரின் புகழைப் பரப்பி வருகிறது.

மேற்படி கம்பெனியார் எண்ணெய் வியாபாரத்துடன் நிற்காமல் இந்தியாவின் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டு அதன் வளர்ச்சியிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தித் தொண்டாற்றி வருகின்றனர். இந்தியாவில் எண்ணெய்க் கிணறுகள் கண்டு பிடிக்கும் முயற்சியில் வெகு தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர். அவர்களுடைய முயற்சிகளில் ஒன்று தான் பம்பாய் நகருக்கு அருகில் உள்ள டிராம்பே தீவில் அமைந்துள்ள எண்ணெய்சுத்திகரிப்பு ஆலை. அதன் திறப்பு விழாதான் சென்ற ஆண்டு சிறப்பாக நடைபெற்றது.

வங்காளத்தின் கடற்கரையை ஒட்டியுள்ள பிரதேசங்களில் சுமார் 73,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள நிலப் பரப்பில் எண்ணெய்க் கிணறு கிடைக்குமா என்ற சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் முயற்சி மட்டும் பலன் அளித்தால் இந்தியாவில் எண்ணெய்ச் செல்வம் பெருகுவதற்கு மேற்படி ஸ்தாபனம் மிகச் சிறந்த முறையில் தொண்டாற்றும்.

இந்தக் கம்பெனியின் கிளைகள் உலகம் முழுவதும் பரந்து கிடக்கின்றன. உலகில் பல பாகங்களிலுமாக இந்த ஸ்தாபனத்தில் சுமார் நாற்பதினாயிரம் சிப்பந்திகள் தொண்டாற்றி வருகின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டு மக்களையே தங்கள் சிப்பந்திகளாக எடுத்துக் கொண்டு அவர்களுக்கு வேலை கொடுத்து உதவுவதுடன் எண்ணெய்த் தொழில் சம்பந்தமான நுணுக்கங்களையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்து வருகின்றனர்.

இன்னும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு ஸ்டாண்டர்டு எண்ணெய் ஸ்தாபனம் எத்தனையோ வழிகளில் அற்புதமான முறையில் தொண்டாற்றி வருகிறது.

*　　　*　　　*


பர்மாஷெல் எண்ணெய் ஸ்தாபனத்தின் பெயரைக் கேள்விப் படாதவர்கள் நம்மில் யாரும் இருக்க முடியாது. பிரசித்தி பெற்ற அஸ்ஸாம் எண்ணெய்க் கம்பெனியாரின் துணையுடன் ஷெல் ஸ்தாபனத்தார் ஒரு பெரிய சாதனை புரிந்திருக்கின்றனர். சமீப காலத்தில் அஸ்ஸாமில் புதிதாக ஒரு எண்ணெய்க் கிணற்றைத் தோண்டி அதில் வெற்றி கண்டிருக்கின்றனர். ஆரம்ப முதல் எண்ணெய்க் கிணறு தோண்டி முடியும் வரையில் அவர்கள் பட்ட கஷ்டங்களை அதிசயமான வர்ணப் படமாக எடுத்திருக்கின்றனர். அந்தப் படத்தைச் சமீபத்தில் பார்க்க நேர்ந்தது.

இந்த எண்ணெய்க் கிணற்றின் சரித்திரத்தை ஆரம்பத்திலிருந்து சுவை குன்றாமல் படம் பிடிப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. நடிகர்களை ஸ்டுடியோக்களுக்குள் வைத்துப் படம் எடுப்பது போன்ற காரியம் அல்ல.

மிகுந்த அபாயகரமான நிலைகளில் இருந்தெல்லாம் படம் எடுக்க வேண்டும். இந்த அரிய காரியத்தை அஸ்ஸாம் எண்ணெய்க்

கம்பெனியார் சிறந்த முறையில் செய்து வெற்றி பெற்றிருக்கின்றனர்.

மனித சஞ்சாரமில்லாத, வன விலங்குகள் நிறைந்த அஸ்ஸாம் காட்டுக்குள் எண்ணெய்க் கிணற்று வேட்டையில் ஈடுபடும் நில ஆராய்ச்சி நிபுணர்களின் திறமையையும், பிறகு அங்கு கிணறு தோண்ட அவர்கள் படும் கஷ்டத்தையும், தோண்டிய எண்ணெய் கிணற்றில் இருந்து எண்ணெய் எடுக்கும் முறையையும் பார்க்கும் போது ஏதோ இந்திர ஜாலங்கள் நடப்பது போன்ற பிரமை உண்டாகிறது. அடாடா! எவ்வளவு பெரிய காரியத்தை எத்தனை கஷ்டங்களுக்கு இடையில் சாதித்திருக்கிறார்கள் என்ற வியப்பும் ஏற்படுகிறது. இதற்காகக் கோடிக் கணக்கான ரூபாய்களை வாரி இறைத்திருக்கும் மேற்படி அஸ்ஸாம் எண்ணெய் ஸ்தாபனத்தாரின் தைரியத்தையும் திறமையையும் வியந்து பாராட்டாமல் இருக்க முடியவில்லை.



(1) எண்ணெய் ஊற்று (2) எண்ணெய்த் தேக்கம் (3) குழாய்களில் அனுப்புதல் (4) க்ரூட் ஆயில் (5) பிரிக்கும் தொட்டி (6) நிலக்கரி வாயு (7) காஸொலின் வாயு (8) கெரோஸின் (9) காஸ் எண்ணெய் (10) வியூம் (11) வாயுக்களைக் குளிரப்பண்ணித் திரவப் பொருளாக மாற்றுகிறது. (12) சுத்தப்படுத்துமிடம் (13) கலவை (14) ரசாயன முறையில் பிரித்தல் (15) காடலிக் முறையில் வாயுக்களைப் பிரித்தல் (16) விசேஷ முறையில் சுத்தம் செய்தல் (17) தார் செய்ய உபயோகமாகும் பொருள் (18) எரிந்த நிலக்கரித் தூள்கள் (19) குளிரப் பண்ணும் இயந்திரம் (20) வடிகட்டப்படுகிறது.

மக்களுக்கு வேண்டிய எண்ணெய்ச் செல்வத்தை அளிக்கப் பாடுபட்டிருக்கும் தொழில் ஸ்தாபனங்களுக்கு மக்கள் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஷெல் ஸ்தாபனத்தாரின் அடுத்த பெரிய முயற்சிதான், பம்பாய் நகரத்துக்கு அருகில் உள்ள டிராம்பே தீவில் அமைத்துள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை. அந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைதான் சென்ற பிப்ரவரி மாதம் கோலாகலமாகத் திறக்கப் பட்டது. இந்தியாவில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளில் இதுதான் மிகப் பெரியது.

ஷெல் ஸ்தாபனத்தாரும் வியாபார நோக்கம் ஒன்றையே கருதாமல் நம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு தொண்டாற்றி வருகின்றனர். மக்களுக்குக் காலா காலத்தில் எண்ணெய் கிடைக்கும்படி செய்வதைப் பெரிய தேசத் தொண்டாகவே செய்து வருகிறார்கள்.

இந்திய மக்களின் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் பங்கெடுத்துக் கொண்டு எல்லாவித மான துறைகளிலும் ஷெல் ஸ்தாபனம் தொண்டாற்றி வருவது பிரசித்தம். பள்ளிக்கூடங்களில் உள்ள இந்திய மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்குச் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது.

அறிவு வளர்ச்சி தரும் அருமையான செய்திப் படங்களை ஷெல் ஸ்தாபனத்தார் தயாரித்திருக்கின்றனர். பள்ளிக்கூடங்களுக்கு அவைகளை யெல்லாம் இலவசமாகவே வழங்கிக் குழந்தைகளுக்குக் காண்பிக்க உதவி செய்கின்றனர்.

மேல் நாடுகளுக்குச் சென்று இந்திய மாணவர்கள் பல துறைகளில் நிபுணர்களாக விளங்கு

வதற்காக உபகாரச் சம்பளங்கள் அளித்து வருகின்றனர். ஆண்டு தோறும் அம்மாதிரி உபகாரச் சம்பளங்கள் பெற்றுப் பல மாணவர்கள் பயனடைந்திருக்கின்றனர்.


குறிப்பாக அவர்கள் சித்திரக் கலை வளர்ச்சிக்குச் செய்யும் தொண்டு சிறப்பானதாகும். இந்தியாவின் சித்திரக் கலை வளர்ச்சிக்காக ஏராளமான ரூபாய்களைச் செலவழித்து வண்ண ஓவியங்கள் மூலம் பெட்ரோலியம் எண்ணெய்ச் செல்வத்தின் பெருமையை மக்கள் உணரச் செய்து வருகின்றனர்.

இந்தியாவில் உள்ள பெரிய எண்ணெய் விநியோக ஸ்தாபனம் பர்மா ஷெல். உலகில் உள்ள சிறந்த எண்ணெய்க் கம்பெனிகளுக்குள் முக்கியமானது. இந்த ஸ்தாபனத்துக்குச் சொந்தமான பெட்ரோலியம் எண்ணெய்க் குழாய் மார்க்கத்தின் நீளம் 7,400 மைல்கள் ஆகும். மேலும் 4,200 மைல் நீளமுள்ள பெட்ரோலியம் எண்ணெய்க் குழாய் மார்க்கங்களுக்குப் பங்கு உரிமையும் பெற்றிருக்கிறார்கள்.

நம் நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் கஷ்டம் இல்லாமல் நியாயமான வழியில் குறித்த நேரங்களில் எண்ணெய் கிடைத்து வருவதற்காக ஷெல் ஸ்தாபனத்தார் சுமார் பதினாறாயிரம் சிப்பந்திகள் மூலம் மிகச் சிறந்த முறையில் தொண்டாற்றி வருகின்றனர்.

இந்தியாவில் எட்டு முக்கிய இடங்களில் ஷெல் ஸ்தாபனத்தாரின் எண்ணெய்க் கிடங்குகள் அதாவது 'இன்ஸ்டலேஷன்'கள் இருக்கின்றன. சென்னைக்கு அடுத்த தண்டையார்ப் பேட்டையில் பளபள வென்று வெள்ளிபோல் மின்னும் மிகப் பெரிய தொட்டிகள் கம்பீரமாக நிற்பதை நேயர்கள் பலர் பார்த்திருக்கலாம். அந்தத் தொட்டிகள் இருக்கும் இடத்தை நேரில் ஒரு முறை பார்த்தால் மூக்கின்மேல் விரலை வைத்துப் பிரமித்துப் போய்விட வேண்டியது தான். ஒரு சிறு எண்ணெய்த் தொட்டிகளின் நகரமே அங்கு உருவாகி இருக்கிறது. சேமிப்பு ஸ்தலமே இப்படி மலைப்புத் தட்டும்படி இருந்தால் டிராம்பே தீவில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைந்துள்ள இடம் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்.

தண்டையார்ப்பேட்டை இன்ஸ்டலேஷனிலிருந்து நூற்றுக்கணக்கான சிறு சிறு பர்மா ஷெல் டிப்போக்களுக்கும், பெட்ரோல் பங்குகளுக்கும் பெட்ரோல், மண்ணெண்ணெய் முதலியவைகளைக் கொண்டு செல்லுவதற்கு நூற்றுக்கணக்கான லாரிகள் ஓய்ச்சல் ஒழிவின்றி ஓடிக் கொண்



(1) பர்மா ஷெல் சுத்திகரிப்பு ஆலையில் அசுத்தமாயுள்ள குருட் ஆயிலைச் சுத்தம் செய்யும் யந்திரம். (2) சுத்திகரிப்பு ஆலையின் மற்றொரு தோற்றம். (3) தூரத்தில் வட்டம் வட்டமாகத் தெரிவது தான் சுத்தம் செய்யப்பட்ட வெண்ணிற எண்ணெய் தேக்கி வைக்கப்பட்டுள்ள தொட்டிகள்.

டிருக்கின்றன. ஷெல் ஸ்தாபனம் இவ்வாறு கண்ணும் கருத்துமாகத் தொண்டாற்ற விட்டால் எண்ணெய் கிடைப்பதே கஷ்டமாகி விடும். அதனால் ஏற்படும் பல காரியங்கள் நின்றுவிட ஏதுவாகும்.

10. மழைகால சேவை

இது எல்லாவற்றையும் விட மேற்படி எண்ணெய் விநியோக ஸ்தாபனங்கள் மழை காலத்தில் செய்யும் சேவை மகத்தானது. மழை காலங்களுக்கு வேண்டிய எண்ணெய்களின் அளவை முன்கூட்டியே தெரிந்து கொண்டு அந்தந்த இடங்களுக்கு வேண்டிய அளவு சேமித்து வைப்பதுதான்.

மழை காரணமாகப் பல காரியங்கள் நடக்காமல் இருக்கலாம். அதனால் நமக்கு ஒன்றும் பெரிய கஷ்டங்கள் ஏற்பட்டு விடாது. கடைகள் திறக்காமல் இருக்கலாம். சினிமாக் கொட்டகைகளில் படம் காண்பிக்காமல் இருக்கலாம். இன்னும் பல வேலைகள் நடக்காமல் இருக்கலாம். ரயில்கள் நடக் காலம் தாழ்த்தி வரலாம். ஆனால் கிராமங்களில் உள்ள வீட்டுக்கு இரவில் விளக்கு வேண்டாமா! அதற்கு மண்ணெண்ணெய் வேண்டுமே! அவசரமாக நாம் காரிலோ பஸ்ஸிலோ செல்ல வேண்டுமானால் அதற்குப் பெட்ரோல் வேண்டாமா! ஆகையால் இரவு பகல் எந்த நேரமும் பர்மா ஷெல் எண்ணெய் ஸ்தாபனம் மக்களுக்குத் தொண்டாற்றுவது போலவே, மழை பெய்தாலும், புயல் அடித்தாலும், இடி இடித்தாலும் மக்களுக்குக் கடமை தவறாமல் தொண்டாற்றி வருகிறது! உலகில் உள்ள எத்தனையோ ஸ்தாபனங்களுக்கு விடுமுறை நாட்கள் உண்டு. ஆனால் எண்ணெய் விநியோகம் செய்யும் பர்மாஷெல் எண்ணெய் ஸ்தாபனம், ஸ்டாண்டர்டு வாக்குவம்எண்ணெய் ஸ்தாபனம், கால்டெக்ஸ் எண்ணெய் ஸ்தாபனம் போன்ற ஸ்தாபனங்களுக்கு விடுமுறை என்பதே கிடையாது.

நமது நாட்டில் பல கிராமங்கள் இருக்கின்றன. மழை பெய்து விட்டால் வண்டியிலோ, காரிலோ, நடந்தோ எந்த வழியிலும் செல்ல முடியாதபடி அவை தண்ணீரால் துண்டிக்கப் பட்டு விடும். அப்பேர்ப்பட்ட கிராமங்களுக்கும் ஸ்டாண்டர்டு வாக்குவம் எண்ணெய் ஸ்தாபனம், பர்மா ஷெல் எண்ணெய் ஸ்தாபனம் ஆகிய எண்ணெய் விநியோக ஸ்தாபனங்கள் அந்தந்தக் கிராமத்து மக்களுக்குத் தவறாமல் எண்ணெய் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கின்றன. கோடை காலத்திலேயே அந்த அந்தக் கிராமத்தில் எண்ணெய் ஏஜண்டுகளுக்கு அதிகமான மண்ணெண்ணெய், பெட்ரோல் முதலியவைகளை முன்கூட்டியே கொடுத்துச் சேமித்து வைக்க ஏற்பாடு செய்கிறார்கள்.



பண்டித ஜவாஹர்லால் நேரு சமீபத்தில் ஸ்டான்வாக் சுத்திகரிப்பு ஆலையைப் பார்வையிட்டார்.

இப்பொழுது தெரிகிறதல்லவா எண்ணெயின் அவசியம்! நமது வாழ்க்கை எப்படியெல்லாம் பெட்ரோலிய எண்ணெயோடு பின்னிக் கிடக்கிறது என்பதைப் பார்த்தீர்களா! அதிலிருந்து பெட்ரோலியத்தை விட்டு நம்மால் இனிமேல் பிரிந்தே வாழ முடியாது என்பது தெரிகிறதல்லவா! அந்த நிலைமைக்கு பெட்ரோலியம் எண்ணெய்ப் பொருள்கள் நம் வாழ்க்கையில் ஒன்றிக் கலந்து விட்டன. அப்படிப்பட்ட எண்ணெய்ப் பொருளை மக்களுக்கு வழங்கும் எண்ணெய் ஸ்தாபனங்களுக்கு மக்கள் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறார்கள். ஒருகணம் கண்ணை மூடிக் கொண்டு மேற்படி எண்ணெய்ப் பொருள்கள் எல்லாம் வருவது நின்று விட்டதாகக் கற்பனை செய்து பாருங்கள். அதனால் எத்தனை விதமான காரியங்கள் செயலற்று ஸ்தம்பித்துப் போய்விடும் என்பதைச் சிந்தனை செய்து பாருங்கள்.

மோட்டார், பஸ், லாரி ஒன்றும் ஓடாது; ரயில் ஓடாது; கப்பல் செல்லாது; விமானம் பறக்காது. இன்னும் எத்தனை எத்தனையோ வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் எல்லாம் கிடைக்காமல் நின்று போகும். சுருக்கமாகச் சொன்னால் வெறும் காட்டு மனிதர்களின் வாழ்க்கையை மேற்கொள்ளும் படியான துர்ப்பாக்கிய நிலைமையைத்தான் அடைய நேரிடும்.

இப்பேர்ப்பட்ட கற்பனை செய்து பார்க்க முடியாத அவல நிலைமை நமக்கு வர வேண்டாம். அப்படிக் கற்பனை கூடச் செய்து

பார்க்க வேண்டாம். அதனால் மனச் சஞ்சலத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம்.

ஆகவே நம்முடைய வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா வளங்களும் பெருகுவதற்கு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையும், பெட்ரோலியம் எண்ணெய் ஸ்தாபனங்களும் எவ்வளவு முக்கியம் என்று தெரிகிறதல்லவா!

முடிவுரை

உலகத்திலேயே ஆதி காலத்தில் இருந்து இந்தியா அறிவுக்கும் ஆற்றலுக்கும் பெயர் போன தேசமாக விளங்கி வந்திருக்கிறது. இன்றைய தினமும் அதைப் பல வழிகளில் காண்பித்து வருகிறது. ஆனால் உலகத்தில் எண்ணெய்க் கிணறுகள் தோண்டி அது வளர்ந்து விரிந்து வந்த சென்ற நூறு ஆண்டு காலமாக இந்தியா அன்னிய ஆட்சியில் அடிமைப் பட்டுக் கிடந்து விட்டது. மக்கள் தேச விடுதலை ஒன்றிலேயே கவனம் செலுத்தி வந்தார்கள். அதனால் பெட்ரோலியம் தொழில் துறையில் இந்திய மக்கள் ஏராளமாக ஈடுபட்டு உழைக்க முடியாமல் போய் விட்டது. இன்று நிலைமை மாறி விட்டது. தேசம் சுதந்திரம் பெற்று விட்டது. சுதந்திரம் பெற்ற ஏழு ஆண்டுகளுக்குள்ளாகவே பம்பாயில் மிகப் பெரிய எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலைகளை நிர்மாணித்தாகி விட்டது. அஸ்ஸாமில் இப்பொழுதுள்ள எண்ணெய்க் கிணறுகளுடன் நகர்கட்டியா என்னும் இடத்தில் புதிய எண்ணெய்க் கிணறுகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதனால் நமது நாட்டின் பெட்ரோலியம் எண்ணெய்ச் செல்வம் மேலும் பெருகும்; பொருளாதார நிலை நல்ல முறையில் சிறந்து வளரும். விரைவில் இந்த பெட்ரோலியம் துறையில் அதிசயமான இந்திய நிபுணர்களும் தோன்றுவார்கள். அவர்கள் மேதையைப் பார்த்து உலகம் வியக்கத்தான் போகிறது!

வெட்டுக் கனிகள் செய்து
    தங்க முதலாம்
வேறு பல பொருள்களும்
    குடைந் தெடுப்போம்;
எட்டுத் திசைகளிலும்
    சென்றிவை விற்றே
எண்ணும் பொருள் அனைத்தும்
    கொண்டு வருவோம்! —பாரதியார்

டி. கே. சி. யின் கடிதங்கள்

திருக்குற்றாலம்
14—7—45

உண்மை அனுபவத்தோடு ஒரு விஷயம் குடும்பத்துக்குள் வந்து தங்கி விடுமானால் அது வீட்டை விட்டு அகலாது. வீட்டுக்கு ஒரு விளக்காய் நின்று பிரகாசிக்கும். அத்தகைய வீடு ஒன்றுக்காக, ஒரு காடு தவம் செய்யலாம்.

வீட்டுக்கும் உதவாது, ஊருக்கும் உதவாதுபோன விஷயங்கள் தனக்கும் உதவாத காரியந்தான். பள்ளிப் படிப்பு, யுனிவர்சிட்டிப் படிப்பெல்லாம் யாருக்கும் பயனில்லாமல் போன காரியந்தானே!

இரண்டு மாசத்துக்கு முன் திருநெல்வேலி ஹிந்துகாலேஜில் "டோனர்ஸ் டே" என்ற விழா நடந்தது. இரண்டு லக்ஷ ரூபாய் நன்கொடை கொடுத்த ஸ்ரீமதி பொன்னம்மாள் மதுரையில் இருந்து வந்திருந்தார். அந்த விழாவில் பேசுவதற்காக என்னைச் சொல்லியிருந்தார்கள். நானும் பேசினேன். பேசும்போது மாணவர்களைப் பார்த்துச் சொன்னேன். "எத்தனையோ விஷயங்களை வருஷம் வருஷமாய்க் கற்கிறீர்கள். அவைகளை இந்த அம்மாள் அனுபவிக்கும்படி சொல்ல முடியுமானால் நீங்கள் படித்த படிப்பு ஜீரணித்த தாகும்" என்று சொல்லி, கணக்கு, சயன்ஸ் முதலிய பாடங்களிலிருந்து உதாரணமாகச் சில விஷயங்களை எடுத்துச் சொன்னேன். ஷேக்ஸ்பியரிலிருந்தும் பக்தி ரஸமான விஷயம் ஒன்றையும் எடுத்துச் சொன்னேன். எல்லாரும் என்னை அங்கீகரித்தார்கள். பொன்னம்மாள் ரொம்பவும் அனுபவித்தார். எப்படி? என்னை மதுரைக்கு அழைத்துப் போவதாகச் சொன்னார். அவர் இரண்டு லக்ஷ ரூபாய் செலவழித்துக் கட்டுகிற கோயிலைப் போய்ப் பார்ப்பதற்காக.

எல்லாவற்றையும் சொல்லி விட்டு ஷேக்ஸ்பியரையும் சொல்லி விட்டு இந்தப் பாடலையும் விளக்கம் கொடுத்துப் பாடினேன்.

சொக்கர் உண்டு
    துணை என்றிராய்!—அவர்
பக்கல் அன்பு
    பழுத்த தென்றேர்கிலாய்!
மக்கள் என்றும்
    மனைஎன்றும் வாழ்வென்றும்
ஒக்கல் என்றும்
    உருகும்என் நெஞ்சமே.

[அவர் பக்கல் அன்பு பழுத்தது-நம்மை எல்லாம் உணவளித்துக் காக்கும் தாய்த் தத்துவமாகிய பார்வதி தேவி இடது பக்கத்தில்தான் இருக்கிறாளே என்று எண்ணிக் கவலை அற்றுத்தான் இரேன்; ஒக்கல்—சுற்றத்தார்.]

இரண்டாவது அடியிலுள்ள அற்புதமான உண்மையை எடுத்து விளக்குவதற்கான கல்வியோ, கருவியோ சென்னைப் பல்கலைக் கழகத்தில் இல்லை!

டி. கே. சிதம்பரநாதன்

என்னைத் தூக்கிக்கொள், அப்பா!





குழந்தைக்கு இன்னும் பேசவராது — ஆனால் பேச்சுக்கு இங்கே அவசியமில்லை — தனது சின்னஞ்சிறு கைகளை அப்படி நீட்டி நீட்டி குழந்தை சமிக்ஞை செய்வதன் பொருள் உங்களுக்கு விளங்காமலா போகும்; உங்கள் சின்ன ராஜாவின் கட்டளையை நிறைவேற்றுவதில் உங்களுக்கு எவ்வளவு பெருமை, ஆனந்தம்!

ஆனால் உண்மையில் குழந்தையின் நிலை பரிதாபமானது. அவனுடைய தேவைகள் ஒவ்வொன்றையும் நீங்கள்தான் அன்புடன் கவனிக்க வேண்டியிருக்கிறது — முக்கியமாக அவனுடைய தளிர்போன்ற சருமத்திற்கு விசேஷ பராமரிப்பு அவசியம். ஜான்ஸன்ஸ் பேபி பௌடர் அவனுடைய சருமத்தை மென்மையாக, மழமழப்பாக வைத்திருப்பதுடன், எரிச்சலின்றி பாதுகாக்கவும் செய்யும்.

டாக்டர்கள் ஜான்ஸன்ஸ் பேபி பௌடரை 70 ஆண்டுகளுக்கு மேலாக சிபாரிசு செய்கின்றனர்.

Johnson's BABY POWDER

Regd. Trade Mark

ஜான்ஸன்ஸ் பேபி பௌடர்

சருமத்திற்கு ஹிதமளிப்பதில் உலகிலேயே நிகரற்ற பௌடர்

இலவசம் குழந்தை பராமரிப்புப் புத்தகத்தின் இலவச பிரதிக்கு எழுதுங்கள் — குழந்தையை சரியான முறையில் எப்படி பேணி வளர்ப்பது, பல் முளைக்கும்போது என்ன செய்ய வேண்டும், அவனை குளிப்பாட்டும் முறை, எப்படி நல்ல பழக்க வழக்கங்களை கற்றுக்கொடுப்பது முதலிய, பெற்றோருக்கு உபயோகமான, அநேக விஷயங்கள் இதில் அடங்கியிருக்கிறது. இவ்விலாசத்திற்கு எழுதவும்:

ஜான்ஸன் & ஜான்ஸன் (கிரேட் பிரிட்டன்) லிட்., டிபார்ட்மெண்ட் 21(டி), த. பெ. 1976, பம்பாய்



ரவிசந்திரிகா

12. அல்லாஹ் பேரில் ஆணை !

டாக்டர் சுரேஷ் தமது பங்களாவுக்குள்ளே ரவீந்திரனைக் கைத் தாங்கலாக அழைத்துச் சென்றாரல்லவா? அப்படிச் சென்றவர் அவனைச் சாய்வு நாற்காலியில் அமர்த்திவிட்டு, வழக்கம்போல் ஒரு கண்ணாடித் தம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்துக் குடிக்கச் சொன்னார்.

"குளிர்ந்த தண்ணீரைப் போலச் சிறந்த மருந்து இந்த உலகில் வேறு எதுவுமே இல்லை. இதைக் குடியுங்கள், மிஸ்டர் ரவீந்திரன். உங்கள் படபடப்பு அடங்கட்டும்!" என்றார் டாக்டர்.

தண்ணீரைக் குடித்ததும் ரவீந்திரனுடைய முகத்தில் மெதுவாகத் தெளிவு உண்டாக ஆரம்பித்தது.

"சரி; சொல்லுங்கள். என்ன விபரீதம் நடந்து விட்டது? ஏன் இப்படி அவசரம் அவசரமாக ஓடி வந்தீர்கள்?" என்று கேட்டார் சுரேஷ்.

உள் மனத்தில் எத்தனை ஆவலும் பதற்றமும் அவருக்கு இருந்தபோதிலும் வெளியே அவற்றைக் காட்டிக் கொள்ளவில்லை டாக்டர்!

ரவீந்திரன் மெதுவாக விஷயத்தைச் சொன்னான். டாக்டர் மனத்துக்குள்ளே கொஞ்சம் குழம்பினாரென்றாலும், வெளியே சிரித்துக் கொண்டார்.

"சரி; ஆண் குரல் கேட்டது. அதனால்?" இப்படி ரவீந்திரனிடம் கேட்டுக் கொண்டே தம்முடைய மூளைக்குள்ளே தாமே அந்தக் கேள்வியை யோசித்துப் பார்த்தார்.

ரவீந்திரனோ டாக்டரின் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. அவனுக்கே அவனுடைய சந்தேகத்தை வெளியிட்டுச் சொல்லக் கூச்சமாக இருந்தது!

"மிஸ்டர் ரவீந்திரன்! ஒன்று சொல்கிறேன். கோபித்துக் கொள்ளாதீர்கள். இந்தக் கலைஞர்களே எப்பொழுதும் இப்படித்தான். சர்வ சந்தேகப் பிராணிகள்! சட்டென்று அவர்களுக்குக் கற்பனை பலமாக வேலை செய்து விடும். வேறு யாருக்குமே தோன்றாத முறையிலெல்லாம் அவர்கள் பிறரைச் சந்தேகிக்க ஆரம்பித்து விடுவார்கள்! அதிலும் அன்பு யாரிடம் அதிகமாக இருக்கிறதோ அந்த மனிதர்களிடத்திலேதான் அதிகமாகச் சந்தேகப் படுவார்கள்—உங்களை மாதிரி!"

இவ்வாறு ரவீந்திரனைச் சிரிக்கப் பண்ணுவதற்கு முயன்றார் சுரேஷ். ஆனால் அவனோ சிரிப்பதாகக் காணோம்.

"மிஸ்டர் ரவி, வேடிக்கைப் பேச்சு ஒருபுறம் இருக்கட்டும். வாஸ்தவமாகவே கேட்கிறேன், சொல்லுங்கள். மாடியிலே உங்கள் உறவினர் யாராவது வந்திருக்கக் கூடாதா? அல்லது சந்திரிகாவின் அண்ணனோ தம்பியோ வந்திருக்கக் கூடாதோ?"



"அவளும் ஒரு அனாதைதான் டாக்டர், என்னைப் போல!" என்றான் ரவீந்திரன்! அந்தக் குரலிலே தான் எத்தனை விரக்தி!

சுரேஷுக்கு ரவீந்திரனுடைய மன நிலை புரிந்தது. சொன்னார்:

"மிஸ்டர் ரவி, இன்றிரவு ஆஸ்பத்திரியிலே என்னைச் சந்தித்ததிலிருந்து நான் சொல்கிறபடியே ஓரளவு கேட்டு நடந்து விட்டீர்கள். இனிக் குறையும் கேட்டு விடுங்கள். என்னோடு இப்பொழுதே கிளம்புங்கள். நேரே உங்கள் வீட்டுக்குப் போவோம். உங்களுடைய சந்தேகம் தெளிந்தால் ஒழிய உங்களுக்கு நிம்மதி இராது. அதைத் தெளிய வைத்தால் ஒழிய எனக்கும் நிம்மதி இராது!"

இப்படி டாக்டர் சொன்னபோது, உண்மையில் அவருக்குமே அந்த சந்தேகத்தைத் தெளிவித்துக் கொள்ள வேண்டும் என்று ஆவலாக இருந்தது!

ரவீந்திரனும் டாக்டர் சுரேஷும் காரிலே கிளம்பித் தாயுமானவர் தெருவை அடைவதற்கும், அப்புலிங்கமும் ராமநாதனும் ரவீந்திரன் வீட்டினுள் நுழைவதற்கும் சரியாக இருந்தது!

வீட்டினுள் ரவீந்திரன் அடியெடுத்து வைத்ததுமே சந்திரிகா 'கோ' என்று கதற ஆரம்பித்து விட்டாள். அதைப் பார்த்ததும், ரவீந்திரனுக்கு உள்ளம் எல்லாம் அப்படியே கரைந்து போய் விட்டது. எழுந்து போய் உள் அறையில் அவளுக்கு அருகே நின்று கொண்டான்.

"சந்திரிகா! ஏனம்மா இப்படி அழுகிறாய்? என்பேரில் உனக்குக் கோபமா?" என்று கேட்டான் ரவீந்திரன்.

இந்த இடத்தில் டாக்டருக்குச் சிரிப்பு வந்தது! ஆனாலும் அதை அடக்கிக் கொண்டு, 'கோபப்பட்டு அப்படியே 'விசிச்'சென்று திரும்பி நடந்த அதிசய மனிதனை இப்பொழுது இப்படிக் கேட்கிறான்! பாசந்தான் எத்தனை விநோதமானது!' என்று எண்ணிக் கொண்டார் அவர்.

ஐந்து நிமிஷத்தில் நடப்புக்கள் எல்லாம் வெட்ட வெளிச்சம் ஆயின. ரவீந்திரனுக்கு ஒன்றுமே ஓடவில்லை. பிரமை பிடித்தாற் போல் அப்படியே உட்கார்ந்து விட்டான் அவன்!

டாக்டர் சுரேஷும் அப்புலிங்கமும் அன்றிரவு நடந்த சம்பவங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். ராமநாதன் இடையிடையே நாகரத்தினத்தைப் பற்றிய அனுபவத்தைச் சொல்லிக் கொண்டிருந்தான். முடிவில் டாக்டருக்கு அப்புலிங்கம் கூறிய யோசனை பிடித்திருந்தது. உஸ்தாத் மீரானைப் பற்றி அவருக்குத் தீர்க்கமாகத் தெரியும். அவர் வந்து விட்டால் திருடனே பிடிபட்ட மாதிரித் தான் என்று அவர் நன்றாக அறிவார். எனவே அவர் சொன்னார்:

"மிஸ்டர் அப்புலிங்கம்! என்னுடைய காரை வேண்டுமானாலும் நீங்கள் எடுத்



துக் கொண்டு செல்லலாம். தோட்டக்காரன் இங்கேயே காவலாக இருக்கட்டும். நீங்களே போய் அவரைக் கையோடு அழைத்து வாருங்கள். பிறகு பேசிக்கொள்வோம்!" என்றார் டாக்டர் சுரேஷ்.

தாயுமானவர் தெருவில் இத்தனை பேச்சு நடந்து கொண்டிருந்தபோது, உஸ்தாத் மீரான் வீட்டிலோ ஒரு எதிர்பாராத சம்பவம் நடந்துவிட்டது!

* * *

உஸ்தாத் மீரானுக்கு ஆமினா என்று ஒரு மகள். அவளைப் பெற்றெடுக்கும் போதே, அவளுடைய தாயாருக்கு ஜன்னி கண்டு இருபத்து நான்கு மணி நேரத்திலெல்லாம், அவள் இந்த உலகை விட்டுப் பிரிந்தாள். அந்த வினாடியிலிருந்து மீரானே தாயும் தகப்பனுமாக இருந்து எத்தனையோ பிரயாசைப்பட்டு அந்தச் சிசுவை வளர்த்தார்.

இது காரணமாக அவருடைய உள்ளத்தில் பிள்ளைப் பாசம்



என்பது ஒரு தாயின் அன்பைப் போல அத்தனை தீவிரமாக இருந்து வந்தது.

உஸ்தாத் மீரான் இயற்கை அறிவு நிரம்பியவர். இங்கிலீஷ் படிப்புப் படித்திருந்தால் ஒரு கல்லூரியின் பிரின்ஸிபலாக விளங்கி யிருக்க வேண்டியவர். ஆனாலும் ஜாதகம் பொய்த்தா போய் விடும்? இன்றைக்கும் அந்த குரு ஸ்தானத்துக்கு யாதொரு குறைவுமின்றி நித்திய நிரந்தர "உஸ்தா"தாகவே அவர் விளங்கி வந்தார்.

என்றாலும் மீரானுக்கு மனத்துக்குள்ளே ஒரு பெரிய குறைதான்! அந்தக் காலத்தில் பள்ளிக்கூடத்திலே படிக்காமல் புத்தியைக் கடன் கொடுத்து விட்டோமே என்று எண்ணி வருந்துவார். அதற்குப் பிராயச்சித்தமாக இப்பொழுது அவருக்கு ஒரு மகன் மட்டும் இருந்தால் அந்த மகனை நிச்சயம் ஒரு பெரிய கலாசாலைப் பேராசிரியராகவே ஆக்கி விட்டுத்தான் கண்ணை மூடுவார். ஆனால் பாவம்! அல்லாஹ் அவருக்கு அந்தப் பாக்கியத்தை அருளவில்லை. ஒரு மகளைத்தான் கொடுத்தான். மகனுக்காக வேண்டி இப்பொழுது இன்னொரு 'நிக்காஹ்' செய்து கொள்ளலாம் என்றால், மகளை வளர்த்து ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவர முடியாமற் போய் விட்டால்?...இரண்டாவது மனைவி எப்படி நடந்து கொள்வாளோ? என்ன சொல்ல முடியும்?

இதையெல்லாம் உத்தேசம் பண்ணியே, மீரான் தம்முடைய மனைவி இறந்த பின் இரண்டாவது 'நிக்காஹ்' செய்து கொள்ளவில்லை. மகன்தான் இல்லை, தனக்கு வருகிற மருமகனாவது ஒரு கலாசாலை 'ப்ரொபஸரா'க இருக்க வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார். இந்த ஆசையை, பருவம் வந்த பிறகு தம்முடைய மகளிடம் கூட வெளிப்படையாகச் சொன்னார் உஸ்தாத் மீரான்!

ஆமினா நல்ல அழகி. கண்டினால் ரத்தம் வந்து விடும். அத்தனை மெல்லிய செம்மேனி அவளுக்கு. கூந்தலோ கருன் கருளாகக் 'கரு கரு' என்று அடர்ந்து அந்தச் சிவப்பு முகத்தின் அழகை இன்னும் எடுப்பாகக் காட்டும். இப்படிப்பட்ட அழகியின் மனத்தில் இருந்த ஆசை?......

தன்னுடைய 'பாவா' நினைப்பதில் பிசகில்லை. அன்பினால் அப்படி நினைக்கிறார். ஆனால், தான் 'நிக்காஹ்' செய்து கொள்ளப் போவது ஒரு வாலிபனையா, அல்லது அவனுடைய உத்தியோகத்தையா?...

உஸ்தாத் மீரானுடைய சிலம்பப் பள்ளிக்கூடத்தில் அப்துல் மஜீத் என்று ஒரு வாலிபன் இருந்தான். நல்ல உயரமான இளைஞன். பெரிய நிலைமையிலிருந்து க்ஷீணித்துப் போன ஒரு கண்யமான பட்டாணிக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அரபு நாட்டின் சுந்தரக் கலை சொட்டுகிற முகம். அதைப் பார்த்துக் கொண்டே யிருக்கலாம். பசி எடுக்காது. ஆனால் அவன் ஒரு கலாசாலைப் பேராசிரியர் இல்லை! உண்மையில் அவனுடைய படிப்பு எல்லாம் எட்டாவது வகுப்போடு சரி. அவனுடைய தாதா ஒரு ஹாபீஸ். அவர் அவனுக்குத் திருக் குர் ஆன் முழுதும் நன்றாகச் சொல்லி வைத்திருந்தார். இசையோடு அவன் அதை ஓதுவதைப் பார்த்து ஹேமரும், பக்கீரும், மௌலவிகளும் மூக்கின் மேல் விரல் வைத்து அதிசயிப்பார்கள். அவனுடைய குரலில் இயல்பாகவே ஒரு உருக்கம் உண்டு. அந்த உருக்கமான ஒலியோடு அவன் குரானை ஓதும்போது, கல் நெஞ்சங் கூடக் கரைந்து விடும்.

ஆமினாவுக்கு மஜீதிடம் ஒரு விவரிக்க ஒண்ணாத பிரியம். அவனை 'நிக்காஹ்' செய்து கொள்ள வேண்டும் என்று அவள் விரும்பினாள். ஆனால் உஸ்தாத் மீரானோ அவளுக்குக் கல்லூரி மாணவர்களிலே ஒரு மாப்பிள்ளை அகப்பட மாட்டானா என்று தான் தேடிக் கொண்டிருந்தார்!

ஆமினா தன்னுடைய தகப்பனாரிடம் மறைமுகமாகவும் சில சமயங்களில் வெளிப்படையாகவும் கூடத் தன்னுடைய மனத்தைச் சொல்லிப் பார்த்தாள். ஆனால் பாவா அசையவில்லை!

ஒரு நாள் அப்துல் மஜீதும் ஆமினாவும் தனியாக மீரான் வீட்டுத் தோட்டத்தில் சந்தித்தார்கள். தகப்பனாருடைய சம்மதம் பெற்று 'நிக்காஹ்' நடப்பது என்பது முடியாத காரியம் என்று அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். ஆனால் இதயங்களோ ஐக்கியப்பட்டு நின்றன. இந்த நிலையில் என்ன செய்வது?

அப்துல் மஜீதுக்கு ரங்கூனில் ஒரு 'சாச்சா' இருந்தார். மஜீத் சொன்னான்: "நாம் இருவரும் ரகசியமாக 'நிக்காஹ்' செய்து கொண்டு யாருக்கும் தெரியாமல் இங்கிருந்து ரங்கூனுக்கு ஓடிப் போய் விட்டால் என்ன?"

இந்த யோசனை முதலில் ஆமினாவுக்குப் பயங்கரமாக இருந்தது. ஆனாலும் அவளுடைய மனத்தில் மஜீத்துக்காகப் பொங்கிப் பெருகிய அன்போ, ஓரே வெள்ளமாக இருந்தது! அவள் சொன்னாள்:

"ஓடிப்போய் விடலாம். ஆனால் பாவா என்ன செய்வார்?"

மஜீத் ஒன்றும் பேசவில்லை. மௌனமாக ஐந்து நிமிஷம் இருந்து விட்டுப் பிறகு அவன் சொன்னான்:

"ஆமினா! எனக்கு மட்டும் அவரிடம் மரியாதை இல்லையா? உனக்கு பாவா



என்ற பிரியம். எனக்கு என்னுடைய உஸ்தாத் என்ற பிரியம். ஆனால் நம் இருவருக்கு மத்தியிலும் இருக்கிற பிரியமோ இந்த இரண்டையும் கடந்து விட்டதே!"

ஆமினா பலமாக யோசனை செய்தாள். சொன்னாள் :

"ரங்கூனிலேயே போய் நிக்காஹை முடித்துக் கொண்டு விடலாமே!"

'பளிச்'சென்று பதில் சொன்னான் மஜீத்:

"ஆமினா! நிக்காஹ் ஆகாத ஒரு பெண்ணோடு ஓடிப் போனவன் என்ற பழி எனக்கு உண்டாவதை மட்டும் நான் விரும்ப மாட்டேன். எத்தனையோ மௌல்விகளும், ஹாபீஸ்களும் பிறந்த குடும்பம் என் குடும்பம். என் தாதா எனக்குச் சொல்லிக் கொடுத்த திருக் குர் ஆனுக்கு விரோதமான ஒரு காரியம் நான் செய்யவே கூடாது!"

ஆமினா ஒரு மானைப் போல மருண்டு மருண்டு பார்த்தாள். அவள் நிலையை உணர்ந்து மஜீத் சொல்லுவான் :

"பீவி, ஒன்று சொல்கிறேன், கேள். இந்த ஊர் காஜியாரிடம் நம்முடைய நிக்காஹ் பதிவாகுமானால் அதிகக் கஷ்டம் இல்லை. அவருக்கும் நான் குர்ஆன் ஓதுவதைக் கேட்டதிலிருந்து என்னிடம் ஒரு பிரியம். இதை விட்டு விட்டு ரங்கூன் போன்ற அயல் இடத்தில் போய் இருந்து கொண்டு, 'ரியால்' பலகைக்கு முன் நின்று 'தஸ்தகத்' புஸ்தகத்தில் நம்முடைய பெயரைப் பொறிப்பது என்றால் அது மிக மிக இடைஞ்சலான காரியம். ஆயிரம் கேள்விக்கு இடம் உண்டாகும்!"

மஜீத் சொன்ன இந்த சமாதானம் ஆமினாவுக்கு நியாயம் என்று பட்டது.

பண்டிகை நாள் அது. மீரான் இரவு முழுதும் கோதாவிலே கழிக்கிற சமயம். எனவே, இரவுக்கு இரவே இருவரும் வீட்டிலிருந்து கிளம்பி, வைகறைக்கு முன்னால் காஜியாரைப் போய்ப் பார்த்துச் சம்மதம் பெற்றுவிடுவது என்று தீர்மானித்தார்கள்.

காஜியார் எளிதில் ஒப்புக் கொண்டு விடுவாரா? அதிலும் உஸ்தாத் மீரானுடைய மகள் என்று தெரிந்தால், எத்தனை கேள்விகள் போடுவார்? பெண்ணின் 'பாவா' அங்கீகரிக்க வில்லை யென்றால், சிற்றப்பா அல்லது தாய்மாமன் யாராவது உடன் இருக்க வேண்டுமே?

மஜீதுக்கு உள்ளூரிலும் ஒரு 'சாச்சா' இருந்தார். முற்போக்கான மனிதர் என்று தம்மைச் சொல்லிக் கொள்வதிலும், புரட்சிகரமான செயல்களில் ஈடுபட்டு முடித்து வைப்பதிலும் ஒரு திருப்தி உடையவர் அவர்! மஜீத் தன்னுடைய யோசனைக்கு அவருடைய அங்கீகாரத்தை வாங்கி விட்டான்!

கோதாவில் இரவு நெடு நேரம் இருந்து களைத்துப் போனவராக, வீட்டுக்குள்ளே சென்று தேயிலை குடித்து வரலாம் என்று போன மீரான் அப்படியே திகைத்துப் போய் நின்றார்! உள்ளே கூடத்தில் பாயிலே படுத்திருந்த அவருடைய மகளைக் காணவில்லை!

"ஆமினா ஆமினா..." என்று இரண்டு முறை கூப்பிட்டுப் பார்த்தார். பதில் இல்லை. அவருக்கு உடம்பெல்லாம் சினம் பொங்கி ஓடியது. ஆனாலும் சிஷ்யப் பிள்ளைகள் யாரிடமும் வெளியிட்டு விட்டால் அவமானம் என்று எண்ணி, கோதாவுக்குத் திரும்பி வந்து, வழக்கம் போல் ஏதோ திடீர் அவசர காரியமாய் வெளியே போவதாகச் சொல்லி விட்டு, மாடிக்கு வந்து 'பிச்சுவா'வை மட்டும் எடுத்து இடுப்பிலே சொருகிக் கொண்டு விறு விறு என்று நடந்தார் மீரான். நேரே அப்துல் மஜீதின் சாச்சா வீட்டுக்குத்தான் வந்தார்.

சாச்சாவை வீட்டிலே காணோம். அவ்வளவுதான். கள் குடித்துப் போதை ஏறிய ஒரு மூர்க்கனைப் போலத் தெருவெல்லாம் நடந்தார். சந்து பொந்துகளில் எல்லாம் படர்ந்தார். சுமார் ஒரு மணி நேரம் மதம் கொண்ட யானையாக, திருச்சிப் பாலக்



கரைத் தெருக்களில் எல்லாம் புகுந்து புகுந்து வந்தார் உஸ்தாத் மீரான்!

வானம் தெளிகிற சமயம் அது. மசூதியி லிருந்து முஸ்லிம்களைத் தொழுகைக்குக் கூப்பிடுகிற உருக்கமான ஓசை காற்றிலே மிதந்து வந்தது. களைப்பும் வேதனையும் குழப்பமுமாகத் தெருவிலே நின்ற மீரான் ஒரு விநாடி அந்தப் பரிசுத்தமான பிரார்த் தனைக் குரலிலே வசமாகி நின்றார்.

திக்கற்ற மனிதர்களுக்கு வழி காட்டு கிறேன் என்று வரவேற்கிற புனிதமான குரல்! இருள் சூழ்ந்த இந்தக் கண்ணற்ற உலகில் கைவிளக்குத் தருகிறேன் என்று கூப்பிடுகிற தெய்வத்தின் அழைப்பு அது!

மீரான் ஓரே இறக்கத்தோடு பள்ளிவாச லுக்குள்ளே நடந்தார். ஆனால் என்ன ஆச்சரியம்! அது காஜியாரின் பேச்சுக் குரல் மாதிரியல்லவா இருக்கிறது! மீரான் ஒரு விநாடி நின்று கேட்டார்.

"தம்பீ! என்னதான் உன்னுடைய சாச்சா சம்மதித்தாலும், பெண்ணுக்கு உறவினர்கள் ஒருவரும் வேண்டாமா? விருப்பப்படுகிற ஒரு ஆணையும் பெண்ணை யும் தடை செய்யக் கூடாதுதான். ஆனா லும் உன்னை நம்பி ஒரு பெண் கடல் கடந்து வருவதற்குத் தயாராக இருக் கிறது என்றால், அதை ரட்சிக்க வேண்டி யது என்னுடைய கடமையல்லவா? நீ அதைக் கைவிட மாட்டாய் என்று நான் எப்படி நம்புவது?" என்று உணர்ச்சி யுடன் கேட்டார் காஜியார்.

சற்று நேரத்துக்கு முன்பு தெய்விக அழைப்பிலே இறங்கி நின்ற மீரானுக்கு இப்பொழுது சினம் தலைக்கு ஏறிற்று. அப்படியே குரல் வந்த திசையை நோக்கி எட்டிப் பார்த்தார்.


துரோகம்! பாவாவுக்குத் துரோகம் செய்த மகள் — எத்தனை பிரியத்தோடு அவளை வளர்த்தார்! உஸ்தாதுக்குத் துரோகம் செய்யும் சீடன்—எத்தனை பிரி யத்தோடு அவனுக்கு வித்தை கற்பித்தார்!

மீரானுக்குத் தலை சுற்றியது. அப்படியே 'பிச்சுவா'வை இடுப்பிலிருந்து உருவிக் கொண்டே பாய்ந்தார் மீரான்! ஆனால் இதென்ன? ......

"இது மசூதி. அல்லாவின் பேரில் ஆணை யாகச் சொல்லுகிறேன். கத்தியை விடு!"

இவ்வாறு சொல்லிக் கொண்டே மீரா னின் கையைப் பிடித்தார் காஜியார்.

இந்த நேரத்திலேதான் டாக்டர் சுரேஷின் காரை வீதியெங்கும் ஓட்டிக் கொண்டே உஸ்தாத் மீரானைத் தேடித் தேடி அலைந்து கொண்டிருந்தான் அப்பு லிங்கம்! (தொடரும்)


பரிபூர்ண மாக நம்புவ தற்க்கும்...
கவர்ச்சிகர மான அமை ப்புக்கும்...
உட்பூச்சுக்கு ம்,வெளிப்பூச் சுக்கும்...
நேர்த்தியான வர்ணவேலைக ளுக்கும்...
அதைப்பற்றி சந்தே கமே இல்லை...அதுதா ன் எல்லோரும் விரும் பும் நேர்த்தியான ஸிந் தடிக் எனமல்...
ஷாலிமார் ஸுபர்லாக்
ஸிந்தடிக் எனமல்
ப்ரஷ்ஷினால் பூசலாம், தோய்த்துப்பூசலாம், அல்லது ஸ்பிரே பண்ணலாம். பல தடவைகள் கழுவுவதற்கு ஏற்றது. 38 விதமான பளபளப்பான கலர்களில் கிடைக்கின்றது.



"டேய் முருகா, நீ என்ன பச்சைக் குழந்தையடா? பதினறு வயதாகிறது. படிப்புத்தான் இல்லை. வேலை வெட்டியாவது செய்யக் கூடாதா?" என்று புத்திமதி கூறினார் முருகனின் அப்பா கந்தசாமி.

உடனே முருகன், "போ, அப்பா, நீயும் தான் கோழி கூவு முன்னாலே வயலுக்குப் போகிறாய். விளக்கு வைக்கிற வரை வேலை பார்க்கிறாய். என்ன பிரயோசனம்? உன்னாலே பணக்காரராக முடிகிறதா? மணி வீட்டாரைப் போலே நாமும் பணக்காரராகி விட்டால் அப்புறம் இந்த ஏரும் கலப்பையும் எதற்கு அப்பா?" என்றான்.

"டேய், நிறுத்துடா. எல்லோரும் பணக்காரராகி விட்டால் அப்புறம் யார் தான் உழைக்கிறதாம்? வயலிலே விளையாமல், எந்தப் பணக்காரரும் சாப்பிட முடியாது, தெரியுமா? பாடு பட்டால் தான் பலன் கிடைக்கும்."

"என்னவோ அப்பா, எனக்கு இப்படிக் கஷ்டப்பட்டு வேலை பார்க்கிறது கொஞ்சங்கூடப் பிடிக்கவே இல்லை."

"அடேயப்பா! பெரிய துரை! சீமையிலிருந்து இறங்கி வந்திருக்கிறார்! போடா, தூங்குமூஞ்சிப் பயலே!"

உடனே முருகன், "அப்பா, அப்பா! எனக்கு ஒரு யோசனை தோணுதப்பா" என்று ஆரம்பித்தான்.

"அது என்னடாப்பா யோசனை?"

"கேளப்பா. காட்டுக்குள்ளே ஒரு வன தேவதை இருக்கிறதாம். அது புதையல் இருக்கிற இடத்தைக் காட்டுமாம். தேவதையின் உதவியினால் அப் புதையலைப் பெற்று நான் இங்கே ஓடி வருவேன். அப்புறம் ஒரு பெரிய பங்களா! பலே ஜோரான மோட்டார்...!"

"டேய், போதும். வாயை மூடுடா. இந்தக் கதையெல்லாம் எதற்குடா?"

"என்னப்பா, நான் சும்மாவா சொல்லுகிறேன். ஒரு விறகுவெட்டிக்கு இப்படித்தான் பெரிய புதையல் கிடைத்ததாம்! மூன்றாவது பாடப் புத்தகத்திலே கூடப் போட்டிருந்தது."

"போடா புத்திகெட்டவனே, அதெல்லாம் புத்தகத்திலேதான் புதையல் கிடைக்கும். நிஜமாக ஒருகாலும் கிடைக்காது" என்று கூறி விட்டுக் கந்தசாமி போய் விட்டார்.

கந்தசாமி நல்ல உழைப்பாளி. உழவுத் தொழில் செய்து குடும்பத்தை நடத்தி வருகிறார். அவருக்கு ஒரே பிள்ளை. எப்படியாவது அவனை நன்றாகப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டுவர ஆசை. ஆனால், முருகனுக்குப் படிப்பு என்றால் பாகற்காய்! தூக்கம் என்றால் சொர்க்கலோகம்தான்! ஐந்தாவது வயதில் அவனை முதல் வகுப்பில் சேர்த்து விட்டார் அவன் அப்பா.

மூன்றாவது வகுப்பைக் கடப்பதற்குள் வயது பதின்மூன்று முடிந்து விட்டது. அதனால் தான் பையனின் படிப்பை நிறுத்தி விட்டார். முருகனுக்குப் படிப்புத்தான் ஏறவில்லை; வேலையாவது செய்ய மாட்டானா என்று நினைத்தார் அவர். ஆனால், அவனாலே யாருக்கும் பிரயோசனம் இல்லை. எந்நேரமும் தூங்கிக் கொண்டே யிருப்பான்.

அன்று காலை நேரம். முருகன் தீவிரமாக ஏதோ யோசனை செய்தான். கடைசியில் திடீரென்று எழுந்தான். விறுவிறு என்று நடந்தான். அவன் எங்கே போகிறான்? ஊருக்கு ஒரு மைல் தூரத்திலுள்ள காட்டுக்குத்தான்!

எதற்காக? வன தேவதையைத் தேடிக் கண்டு பிடிக்க! கண்டு பிடித்துப் புதையல் எடுக்க!

காட்டுக்குள்ளே முருகன் சிறிது தூரம் சென்றான். அதற்கு மேல் அவனால் நடக்க முடியவில்லை. களைத்துப் போய் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான்.

சிறிது நேரம் சென்றது.

திடீரென்று பிரகாசமான ஒரு ஒளி தெரிந்தது. உடனே முருகன் நிமிர்ந்து பார்த்தான். எதிரே அழகான ஒரு தேவதை நின்றது. தேவதையைப் பார்த்ததும் முருகனுக்கு ஒரே ஆனந்தம். உடனே அவன் எழுந்தான். தேவதையின் காலடியில் விழுந்தான். பிறகு, "அம்மா வனதேவதையே! உன்னைத் தேடித்தான் இங்கே வந்தேன். எனக்கு ஒன்றே ஒன்று வேண்டும். தயவு செய்து தருவாயா?" என்று பணிவோடு கேட்டான்.

"குழந்தாய், உனக்கு என்ன வேண்டும்? தயக்கம் வேண்டாம். விரும்பியதைக் கேள்."

"எனக்கு ஒரு புதையல் வேண்டும்."

"குழந்தாய், உனக்குப் புதையல் தானே வேண்டும்? சரி, என் பின்னாலேயே வா" என்று கூறி விட்டு முன்னால் சென்றது வனதேவதை. முருகன் பின்னால் சென்றான்.

வழியிலே சதுரமான ஓர் இடம் இருந்தது. அங்கு வந்ததும், தேவதை நின்றது. முருகனும் நின்றான்.

"குழந்தாய், இந்த இடத்தில் தான் புதையல் இருக்கிறது. அதோ அங்கே கிடக்கும் மண் வெட்டியை எடுத்துத் தோண்டிப் பார்" என்றது தேவதை.

உடனே முருகன் ஆசை ஆசையாக அங்கே கிடந்த மண் வெட்டியை எடுத்தான். தேவதை காட்டிய இடத்திலே தோண்டினான். ஆனால், அவன் நினைத்தபடி உடனே புதையல் கிடைக்கவில்லை. மேலும் தோண்டினான். சிறிது நேரம் தோண்டிய பிறகு முருகன் ஏமாற்றத்துடன் தேவதையைப் பார்த்தான்.

"குழந்தாய், இந்த இடத்தைத் தோண்டிப் பார்" என்று இரண்டடி தூரத்தில் இன்னொரு இடத்தைக் காட்டியது தேவதை. அந்த இடத்தையும் முருகன் தோண்டினான். அங்கும் அவனுக்குப் புதையல் கிடைக்கவில்லை.

"இந்தச் சதுரத்துக்குள் தான் புதையல் இருக்கிறது. எந்த இடம் என்று சரியாகத் தெரியவில்லை. மறந்து போய் விட்டேன். முழுவதையும் தோண்டிப் பார்த்தால் தெரிந்து விடுகிறது. அதற்குள் களைத்துப் போய் விட்டாயே!" என்றது தேவதை.

"இல்லை, இல்லை. நான் களைத்துப் போகவில்லை. இந்தச் சதுரம் முழுவதையும் ஒரே மூச்சில் தோண்டிப் பார்த்து விடுகிறேன்" என்றான் முருகன், தொடர்ந்து வேலை செய்து கொண்டே.

அப்போது மழை வந்து விட்டது. 'சோ' என்று பெய்தது.

"குழந்தாய், மழை பெய்கிறதே! தோண்டுவதைச் சற்று நேரம் நிறுத்தக் கூடாதோ?" என்று கேட்டது தேவதை.

"பரவாயில்லை. மழை பெய்தால் நல்லதுதான். பூமி ஈரமாயிருந்தால் சுலபமாகத் தோண்டலாம் போலிருக்கிறது" என்று கூறிக் கொண்டே மேலும் மேலும் தோண்டினான். ஒரு வழியாக அந்தச் சதுரம் முழுவதையும் தோண்டிப் பார்த்து விட்டான். ஆனாலும், புதையல் கிடைக்கவில்லை. ஏக்கத்தோடு பார்த்தான்.

"குழந்தாய், கவலைப்படாதே. இதோ புதையலை வரவழைக்கிறேன்" என்று கூறி அங்கிருந்த கோணிப் பையை எடுத்தது தேவதை. "குழந்தாய், கண்கள் இரண்டையும் இறுக மூடிக் கொண்டு இதற்குள் கையை விடு. கையிலே அகப்படுவதை எடுத்து, நாலு திசையிலும் நன்றாகத் தெளிக்க வேண்டும். பை காலியாகிற வரை இப்படிச் செய்தால்தான் புதையல் கிடைக்கும். அதுவரை கண்களைத் திறக்கவே கூடாது. ஜாக்கிரதை!" என்று எச்சரித்தது தேவதை.

'சரி' என்று கூறி விட்டுத் தேவதை சொன்னது போல் செய்தான் முருகன். பிறகு கண்களைத் திறந்து பார்த்தான். திறக்கும் போது அங்கே புதையல் இல்லை. ஆனாலும் 'மள மள' என்று ஏதோ பச்சையாக வளர்வது போல் தெரிந்தது. கூர்ந்து பார்த்தான். எல்லாம் நெற் பயிர்



ஒரு குருவி தெரிகிறதா? திருப்பிப் பாருங்கள்? மாடு தெரியும்.

பதினைந்தாவது அகில இந்திய காதி, கைத்தறி, சுதேசி &

கைத்தொழில் பொருட்காட்சி, சேலம் - 1955

(சேலம் நகரசபையாரால் நடத்தப்படுவது)

★

7 - 8 - 55 முதல் 31 - 8 - 55 முடிய

ஆண்டுதோறும் நடைபெறும் ஸ்ரீ மாரியம்மன் திருவிழாவின்போது பொருட்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறபடியால் சுற்றுப்புற தாலூக்காக்களிலிருந்து ஏராளமான ஜனத்திரள் கூடுகிறது.

பஸ் ஸ்டாண்டு, போஸ்ட் ஆபீஸ், பாங்குகள், சினிமா தியேட்டர்கள், ஹோட்டல்கள் இவற்றிற்குச் சமீபமாக, நகரின் மத்தியிலுள்ள விஸ்தாரமான போஸ் மைதானத்தில் நடைபெறும்.

இசை, நடன, நாடக நிகழ்ச்சிகள் தலைசிறந்த கலைஞர்களைக் கொண்டு தினந்தோறும் ஏற்பாடு செய்யப்படும்.

விவரங்களுக்குக் காரியதரிசிக்கு உடனே எழுதவும் :

எம். கோவிந்த மேனன்

கமிஷனர் & காரியதரிசி, பொருட்காட்சி கமிட்டி

இந்தியன் பாங்க், லிமிடெட்

(ஸ்தாபிதம் :  1907)

தலைமை ஆபீஸ் : "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்", வடக்கு பீச் ரோடு, மதராஸ்-1

தென் இந்தியாவில் எல்லா முக்கிய இடங்களிலும், பம்பாயிலும் புது டில்லியிலும் சப் ஆபீஸ்கள், கிளைகள் இருக்கின்றன.

மூலதனம்

அங்கீகரிக்கப்பட்டது	...	ரூ.	1,00,00,000
வழங்கப்பட்டது	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்டது	...	ரூ.	57,80,000
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ.	76,50,000
டெபாஸிட்டுகள் (31-12-54-ல்)	...	ரூ.	24·85 கோடிகள்

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் செய்யப்படும்

என். கோபால அய்யர், செக்ரடரி

சிறுவர்கள்
சித்திரப்போட்டி



கள்! அந்தப் பயிர்களில் முற்றிய நெல் மணிகள் இருப்பதைக் கண்டான்.

"பூ, இது என்ன? புதையலைக் காணோமே!" என்று கூறிக் கொண்டே தேவதை நின்ற பக்கம் பார்த்தான். அங்கே தேவதையைக் காணோம்! தேவதை நின்ற இடத்தில் யாரோ ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவர் கையில் ஒரு பெரிய பை இருந்தது.


"தம்பி! இங்கே விளைந்திருப்பதை எனக்குக் கொடுத்து விடு. பதிலுக்கு இதை வைத்துக் கொள்" என்று கூறித் தமது கையில் வைத்திருந்த பையை அவனிடம் நீட்டினார், அந்த மனிதர்.

உடனே முருகன் அலட்சியமாக அந்தப் பையைப் பறித்தான். அப்போது அதிலிருந்து 'கல கல' வென்று கீழே விழுந்தன வெள்ளி ரூபாய்கள்! ரூபாயைப் பார்த்ததும், "ஆ! புதையல்! புதையல்!" என்று கத்தினான் முருகன். அதே சமயம், 'கீ, கீ' என்று மரத்திலிருந்து ஒரு கிளி கத்தியது.

உடனே முருகன் விழித்துக் கொண்டான். சுற்றிலும் பார்த்தான். பணமும் இல்லை; புதையலும் இல்லை! கண்டதெல்லாம் வெறும் கனவு என்பதை அறிந்தான். "புதையலாவது; வனதேவதை கொடுப்பதாவது! எல்லாம் கட்டுக் கதை. அந்த விறகு வெட்டிக்குக் கூட இப்படித் தான் கனவில் புதையல் கிடைத்திருக்கும். அப்பா சொன்னது சரி. பாடுபட்டால்தான் பலன் கிடைக்கும். அதைத்தான் அந்த வன தேவதை நமக்குக் கனவிலே கற்றுக் கொடுத்தது" என்று நினைத்தான். உடனே 'விருட்'டென்று எழுந்தான். வேகமாக அப்பா வேலை பார்க்கும் வயலுக்கு ஓடினான். மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க நடந்தவை எல்லாவற்றையும் அப்பாவிடம் கூறினான். பிறகு, "அப்பா, இனிமேல் நான் பழைய தூங்குமூஞ்சி இல்லை. சுறுசுறுப்பாக வேலை பார்க்கப் போகிறேன். உங்களுக்கு உதவியாக இருப்பேன், அப்பா" என்றான்.

"உன் மனம் மாறியதே எனக்குப் பெரிய புதையல் கிடைத்த மாதிரிதான்" என்றார் முருகனின் அப்பா கந்தசாமி. அன்று அவர் அடைந்த ஆனந்தத்துக்கு அளவே இல்லை!


1. ஆர். ஜெயலக்ஷ்மி, வயது 11½, ஷெண்பாக்கம், வேலூர். 2. கே. சேவியண்ணல், வயது 12, கோலாலம்பூர், மலாயா. 3. எஸ். டி. கௌரி சங்கர், வயது 11, ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்.


நான்கு
மருந்துகள்
ஒரு டாக்டரின்
குறிப்பைப்
போன்றது



WILL NOT UPSET THE STOMACH
DOES NOT HARM THE HEART
ANACIN
TABLETS
FOR HEADACHE, COLDS, FEVER, TOOTHACHE, & MUSCULAR PAIN
DOSAGE
CONTENTS
GEOFFREY MANNERS & COMPANY LIMITED
MAGNET HOUSE, DOUGALL ROAD, BOM
WHITEHALL PHARMACAL COMPANY
ANNAS
INDIA




ஹாஸ்யக் களஞ்சியம்



"உங்கள் பையன் முன்பெல்லாம் மருந்துக்குக் கூடப் படிக்க மாட்டானே இப்ப என்ன பண்ணுகிறான்?"
"மருந்துக்குப் படிக்கிறான்."




"சாதம் சாப்பிடாதீங்கோ, சுண்டைக்காய் அளவு லேகியம் சாப்பிட்டு வாருங்கள்"
"அது எந்த வேளைக்கு, அதுலே பசி அடங்குமா?"




"சங்கீதத்தைப் பற்றி ஏதேனும் உமக்குத் தெரியுமா?"
"ஏதோ கொஞ்சம் தெரியும் ஏன்?"
"அவா! இப்பொழுது என்ன வாசித்துக் கொண்டிருக்கிறார்?"
"நாதஸ்வரம் வாசிக்கிறார்."





"கீழே உட்கார்ந்து கொண்டு
தின்றால் பக்ஷணத்திற்கு எறும்பு
வந்து என் மேல் மொய்த்து
விடுகிறது அதற்குத்தான்"


அம்மா கொஞ்சம்
தண்ணீர் கொடுங்கள்
1
2
3

சாமா


"இந்த நோயாளிக்கு
எவ்வளவு பெனிசிலின்
கொடுத்தாலும்
போதவில்லை!"


கூந்தல் வளரும்
தைலம்
1
2


"ஆபீஸில் மாடு மாதிரி உழைத்து
விட்டு வழியில் பருத்திக்
கொட்டையும் பிண்ணாக்கும்
வாங்கிக் கொண்டு, வீட்டுக்குப்
போகிறேன்."

<u>இரவிலும்</u> <u>பகலிலும்</u> இவ்வாச்சரியப் பாதுகாப்பு சாதனத்தால்

உங்கள் சருமத்தை அழகாயும் நேர்த்தியாகவும் வைத்துக் கொள்ளுங்கள்

செழுமையான பாண்ட்ஸ் கோல்டு க்ரீம் மற்றும் பனியைப் போன்ற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள் சருமத்தை பாதுகாத்து அதை மிருதுவாயும் அழகாயும் வைக்கின்றன.



மிருதுத்தன்மையும் சுத்தத்தையு மளிக்க ஒரு இராக்கால க்ரீம்

நீங்கள் படுக்கப் போகுமுன் செழுமையான பாண்ட்ஸ் கோல்டு க்ரீம் உபயோகிக்கவும். சில செகண்டுகளில் இது உங்கள் சருமத்திற்கு புத்துணர்ச்சியைக் கொடுக்கிறது—இயற்கையான எண்ணெச்சத்து அளித்து வறட்சியை அகற்றி உங்கள் சருமத்தின் யௌவனத்தையும் வனப்பையும் நிலைக்கச் செய்கிறது.

பாண்ட்ஸ் கோல்டு க்ரீம் ஒரு ஆச்சரியமான சுத்திகரிப்பு சாதனமென்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும். உங்கள் சருமத்தினுள்ள கண்ணுக்குத்தென்படாத துவாரங்கள் பெரிதாகாமல் தடுத்து உங்கள் சருமத்தை களங்கமற்றும் அழகுடனுமிருக்கச்செய்கிறது.







பாதுகாப்பிற்கும், சௌந்தர்யத்திற்காகவும் ஒரு பகல் நேர க்ரீம்

பனியைப்போன்ற பிரகாசமான வானிஷிங் க்ரீமின் ஒரு நேர்த்தியான சன்னப்பூச்சு பகல் நேரத்தில் உங்கள் சௌந்தர்யத்தை அதிகப்படுத்துகிறது. இதன் சாசுவதமான பாதுகாப்புத்தன்மை, வனப்புள்ள சருமத்தின் வைரியான தூசி, வெயில் மற்றும் வறட்சிக் காற்று முதலியவற்றின் தாக்குதலிலிருந்து காப்பாற்றுகிறது. அளவுக்குமிஞ்சிய எண்ணெச்சத்து சருமத்தின் துவாரத்தில் படிந்து கெடுதலைத்தரும். இவ்விதம் அதிக எண்ணெ வழியும் சருமத்திற்கு, பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் ஒரு குணமளிக்கும் ஆச்சரிய சாதனம்.

பாண்ட்ஸ்

கோல்டு க்ரீம்

வானிஷிங் க்ரீம்

அழகிய நங்கையர் எங்கிருப்பவர்களாயினும் தங்கள் சௌந்தர்யத்திற்கு இச்சுலபமான இருவிதப் பாதுகாப்பையே நம்பியுள்ளனர். அவர்கள் உதாரணத்தையே நீங்களும் பின்பற்றுங்கள்—இரவில் பாண்ட்ஸ் கோல்டு க்ரீமையும் பகலில் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமையும் உபயோகியுங்கள். உங்கள் பிரகாசமான—அழகிய வதனத்தைக்கண்டு நீங்களே குதூகலமடைவீர்கள்.

P. 1548



புரியாத புதிர்

ரா.வீ.

பற்பல ஜீவராசிகளையும் அலுப்புச் சலிப்பின்றிப் படைத்த பிரும்ம தேவனுக்கு ஒரு சமயம் அவனையும் மீறி எல்லையற்ற அலுப்புத் தட்டி விட்டது. ஒரே காரியத்தைத் திரும்பத் திரும்பத் 'தோசைத் திருப்பல்' கதையாகச் செய்து கொண்டிருந்தால் யாருக்குத்தான் அலுப்பு ஏற்படாது! அதுவும் எத்தகைய காரியம்! சிருஷ்டிக்கும் ஜீவராசிகளில் ஒன்று இன்னொன்றைப் போல் இருக்கக் கூடாது என்பதற்காக அவன் எடுத்துக் கொண்ட சிரமங்கள் கொஞ்சமா, நஞ்சமா! அவன் கண் குத்திப் பாம்பாக அல்லவா தன் காரியங்களைக் கவனித்து வந்தான்!

'இத்தனை சிரமங்கள் நமக்கு எதற்கு!' என்று அவன் சிறிது அஜாக்கிரதையை மேற்கொண்டிருந்தால் எத்தனை சிரமங்கள் ஏற்பட்டிருக்கும்! எத்தனை தடுமாற்றங்கள் உண்டாகியிருந்திருக்கும்! ஒருவரை யொருவர் அடையாளம் கண்டு கொள்ள முடியுமா! புரிந்து கொள்ளத்தான் முடியுமா! ஒரு கணங்கூட ஓய்வே இல்லாமல் காரியத்திலேயே கண்ணும் கருத்துமாயிருந்த அவனுக்கு அன்று ஏனோ தெரியவில்லை, சிறிது சலனம் ஏற்பட்டு விட்டது.

இருந்தாலும் அலுப்புக்கு ஆற்றமாட்டாமல் அந்தநேரத்தில்தான் அவன் காமத்தையும் காதலையும் படைத்தான். அலுப்பு காரணமா அல்லது அஜாக்கிரதையா, தெரியாது! அவை இரண்டுக்கும் ஒரே நிறத்தையும் ஒரே உருவத்தையும் கொடுத்து விட்டான். அவனுடைய பழகிய கரங்களாவது அவன் பெயருக்குப் பங்கம் விளையாமல் சிறிது வேறுபாடு வைத்து அவற்றைச் சிருஷ்டித்திருக்கலாம். அசாத்தியக் களைப்பினாலும் அசதி மறதியினாலும் தானோ என்னமோ, அவையும் அந்த நேரத்தில் ஒத்துழைக்க மறுத்து விட்டன.

படைத்து முடிந்ததும் தான் பிரும்மதேவனுக்குத் தன் தவறு புலனாகியது. சிருஷ்டித் தொழிலுக்கே அதி தேவதையான அவன் தவறு இழைக்கலாமா! அல்லது இழைத்த தவறுதான் தவறாக முடியுமா! தவற்றைத் திருத்திக் கொள்ளும் அபாரத் திறன் படைத்த அவன் எதற்குக் கலங்கப் போகிறான்! ஒரு கிஷணம் யோசித்தான். பளிச்சென்று ஒரு யோசனை புலனாகியது. தான் செய்த தவற்றையும் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளத் திட்டமிட்டு விட்டான்.

எனவே, காமத்துக்கும் காதலுக்கும் ஏறக்குறைய ஒரே மாதிரியான ஆடையை அளித்தான். அதோடு, "இந்த ஆடைகள் ஒரு விசேஷ சக்தி வாய்ந்தவை. நீங்கள் இந்த ஆடைகளையே எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும் உடுத்திக் கொள்ளலாம். என்றென்றும் இவை புதுமை மாறாமல் கருக்கு அழியாமல் இருக்கும். இந்த ஆடைகளை உடுத்திக் கொண்ட பின் நீங்கள் மாற்றுடை தேடி அவற்றை உடுத்திக் கொள்ள வேண்டிய தேவை கூட ஏற்படாது!" என்று சொன்னான்.

அதைக் கேட்டதும் அவ்விரண்டுக்கும் பரம திருப்தி உண்டாகி விட்டது. அவற்றின்மேல் கருணை கூர்ந்து அவற்றை ஒரேமாதிரி சிருஷ்டித்தது போலவே, அவற்றுக்கு உடுத்திக் கொள்ளவும் ஒரே மாதிரியான ஆடை கொடுத்து விட்டான் அல்லவா பிரும்மன்!

அவை இம்மாதிரி சந்தோஷப் பட்டுக் கொண்டிருக்கும் பொழுது பிரும்மன் இன்னொரு சமாசாரத்தையும் சொல்லி அவற்றை வெளியேற முடியாத மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி விட்டான். "இன்று நீங்கள் இருவரும் என்னிடம் விடைபெறப் போகும் நன்னாள். என் அன்புக்குப் பாத்திரர்களான உங்களுக்கு ஒரு வரம் அளிப்பதாகத் தீர்மானித்திருக்கிறேன். இத்தனை காலமும் ஜீவராசிகளைச் சிருஷ்டிக்கும் பொறுப்பை நானே வகித்து வந்தேன். இன்று முதல் அந்தப் பொறுப்பை உங்களிடம் விட்டு விடுவதாக இருக்கிறேன். இனி ஜீவராசிகளைச் சிருஷ்டிக்கும் பொறுப்போ, சிருஷ்டித்த அந்த ஜீவராசிகளுக்கு இன்பம் அளிக்கும் பொறுப்போ உங்கள் இருவரிடமுமே தான் இருக்கும்!" என்றான். ஆகா! எத்தனை சாமர்த்தியமாகத் தான் சிருஷ்டித்த சிருஷ்டியிடமே அவன் தன் பொறுப்பைத் தட்டிக் கழித்து விட்டான்!

விடை கொடுத்தனுப்பும் பொழுது, "நீங்கள் இருவரும் தனித்தனியானவர்களாகவே இருந்த பொழுதிலும் இணைபிரியாத நண்பர்களாகச் சேர்ந்தே வாழக் கடவீர்கள்!" என்று ஆசிர்வதித்தும் அனுப்பினான்.

வரம்பெற்ற காதலும் காமமும் மகிழ்ச்சி தாண்டவமாடும் மதி முகத்துடன் மண்ணுலகை நோக்கிப் புறப்பட்டன. இரண்டுக்கும் வழி நடைக்களைப்பே தெரியவில்லை. 'நமக்குக் கிடைக்கக் கூடும்!' என்று கனவிலும் கருதாத உயர் பதவி ஒருவருக்குக்



கிடைத்து விட்டால் உணவு செல்லுமா! களைப்புத் தெரியுமா! தலைகால்தான் புரியுமா! அதேபோல் மறந்த மெய்யுடன் அவை மண்ணுலகில் அடி எடுத்து வைத்தன.

அப்பொழுது மாலைக் கதிரவன் மலைவாயில் விழுந்து கொண்டிருந்தான். இருள் தன் கரிய போர்வையை எடுத்து உலகத்தின்மீது போர்த்திக் கொண்டிருந்தது. சிறிது நேரத்துக் கெல்லாம் எங்கு பார்த்தாலும் இருளின் ஆட்சி! இருளின் ஆதிக்கம்!

இந்தக் கும்மிருட்டில் எங்கே போவது என்று எண்ணிய காதலும் காமமும் பக்கத்தில் இருந்த பர்ணகுடியில் இரவுப் பொழுதைக் கழிப்பது என்று முடிவு செய்தன.

இரவு முதல் ஜாமம் கழிந்தது. காமத்தின் கண்கள் கிறங்கின. நித்ரா தேவி ஆட்கொள்ளத் தொடங்கினள். தான் உடுத்தியிருக்கும் புத்தம் புதிய ஆடையுடனேயே தூங்க யாருக்குத்தான் மனம்வரும்! காமம் தன் ஆடையைக் களைந்து வைத்து விட்டு உறங்குவதற்கென்றே தன்னோடு கொண்டு வந்திருந்த மாற்றுடையை உடுத்திக் கொண்டு படுத்தது. அதோடு, "இப்படி உட்கார்ந்தபடி தூங்கினால் ஆடை கசங்கி வீணாகி விடும். நீ உடுத்தியிருக்கும் ஆடையைக் களைந்து வைத்து விட்டு மாற்றுடை கட்டிக் கொண்டு நன்றாகப் படுத்துத் தூங்கு. இனி காலையில்தானே நம் பிரயாணம்!" என்று கூறிக் காதலையும் களைய வைத்தது.

காதலும் 'ஆம்' என்று ஆமோதித்துக் காமம் சொன்ன பிரகாரமே, தான் உடுத்தியிருந்த ஆடையைக் களைந்து வைத்து விட்டு மாற்றுடை தரித்துக் கொண்டு படுத்தது.

பேசியவாறே படுத்திருந்த காதலும் காமமும் எப்பொழுது கண் உறங்கினவோ, தெரியாது! விடிய ஒரு ஜாமம் இருக்கும். காமம் கலக்கத்துடன் புரண்டு படுத்தது. இரவு முழுவதும் அதற்கு ஏதேதோ கனவு; ஏதேதோ நினைவு. அதற்கு நல்ல தூக்கமே இல்லை. அதனால் காதல் கண் விழிப்பதற்கு முன்பாகவே, காமம் கண் விழித்துக் கொண்டு விட்டது.

இக்காலும் ஒருவர் பொருளை இன்னொருவர் இச்சிப்பதுதானே இந்த உலகத்தின் இயல்பாக இருந்து வருகிறது! எனவே, மண்ணை மிதித்து விட்ட காமத்துக்கும் அத்தகைய எண்ணம் ஏற்பட்டு விட்டது.

"காதல் கண் விழித்து எழுவதற்கு முன்பாக நாம் இதன் ஆடைகளை எடுத்து அணிந்து கொண்டு, இந்த உலகத்தின் மீது ஆதிக்கம் செலுத்த முற்பட்டு விட்டால் என்ன!" என்ற எண்ணம் காமத்தின் கலக்க முற்ற நெஞ்சிலே எழுந்தது. அவ்வளவுதான் தாமதம்; அடுத்த கணமே 'எண்ணித் துணிக கருமம்!' என்னும் முதுரைக்குத் தானாகவே கற்பித்துக் கொண்ட பொருளை அது செயலாக்கிக் காட்டி விட்டது.

அதன் உடலைக் காதலின் ஆடைகள் அலங்கரித்தன. அதன் ஆடைகள் காதலின் பக்கத்தில் இருந்தன. பலபல வென்று பொழுது விடியும் முன்னரே பட்டணப் பிரவேசத்துக்குப் புறப்பட்டு விட்டது காமம்!

கண் விழித்த காதல் தன் ஆடைகளைப் பற்றி அவ்வளவாக அக்கறை செலுத்தவில்லை. அக்கறை செலுத்துவதென்றாலும் அதற்கு, 'இது தன்னுடையது, இது தன்னுடையதல்ல!' என்று பிரித்து அறியும் திறன் வேண்டாமா! எனவே, தான் உடுத்திக் கொள்ளும் ஆடை தன்னுடையது என்றே அது யதார்த்தமாக நம்பி விட்டது.

அதுமுதல் காமம் காதலின் ஆடைகளை அணிந்தவாறே இந்த உலகத்தில் நடமாடி வருகிறது. காதல் காமத்தின் ஆடைகளை அணிந்தவாறு நடமாடி வருகிறது. எனவேதான், இன்றும் எத்தனையோ பேர் காமத்தைக் காதல் என்றும் காதலைக் காமம் என்றும் கருதி மோசம் போகின்றனர். உண்மைக் காதல் எத்தனை பேர் கண்களுக்கு வெறும் காமமாகத் தோன்றுவதில்லை! வெறும் காமம் மெய்க் காதலாகப் படுவதில்லை!

பிரும்மன் கொடுத்த வரம் பொய்யாகுமா! பொய் ஆகும் என்றால் காதலையும் காமத்தையும் இனங் கண்டு தனித் தனியே பிரித்துப் புரிந்து கொள்வது என்பது இந்த உலகத்துக்கு ஏன் சிரமமாயிருக்கிறது! இந்தப் புரியாத புதிரைச் சிக்கறுக்கும் திறன் வாய்ந்தவர்கள் யாராவது இருந்தால் முன்வரட்டும்!

ஒரு கோடை யோசனை ...

ஐஸ் டீ

1. புது நீரைக் கொதிக்கவைத்துத் தேயிலையை ஊறவைக்கவும்.
2. டம்ளரில் ஐஸ் தூளைப் போட்டு, வடிகட்டி மூலம் டீ கரைசலை விடவும். பால் சேர்க்கவேண்டாம்.
3. ருசியைப்பொறுத்து, சர்க்கரையும், எலுமிச்சம் பழத் துண்டுகளையும் சேர்க்கவும்.
4. குளிரும்வரை சிலநிமிஷங்கள் காத்திருங்கள். கலக்கிப் பரிமாறவும்.




என்ன இதம்!

என்ன மதுரம்!

என்ன தெம்பு!

தெம்பூட்டும் குளிர் பானம்



காலம் கடப்பதற்கு முன்

இப்பொழுதே இன்ஷ்யூர் செய்யுங்கள்

PANDYAN INSURANCE COMPANY LIMITED

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

நெருப்பு - கப்பல் - விபத்து

ஆஸ்திகள் : ரூ. 1 கோடிக்கு மேல்

தலைமைக் காரியாலயம் : பாண்டியன் பில்டிங் : மதுரை

கிளைகள் : பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை, நாகபுரி, ஷோலாப்பூர், பெங்களூர், திருவனந்தபுரம், கோயம்புத்தூர், கொச்சி

5

அரித்து, எரிந்து, கொப்பளிக்கும் எக்ஸிமா 10 நிமிஷத்தில் குணமடைகிறது


நிக்ஸோடெர்ம் (Nixoderm) கண்டு பிடித்தது முதல் யாரும் எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டி ஆகிய சரும வியாதிகளால் அவதியுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடெர்ம் (Nixoderm) உதவியால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அனுபவசமாக வைத்துக் கொண்டு பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் தராதீர்.

ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் உபயோகித்த இதர களிம்பைப் போன்றதல்ல. பிசுக்கற்றது. மேலே தடவும் போதே ஒரு பவுடரைப்போல உணருவீர்கள். சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தை தாக்குகிறது. நிக்ஸோடெர்ம் (Nixoderm) மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது : (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைக் கொல்லுகிறது. (2) அரிந்து, எரிந்து வெந்து போவதை 7 முதல் 10 நிமிஷத்தில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றி, சுத்தமாக மிருதுவாகப் பட்டுப் போல வழவழப்பாகவும் ஆக்குகிறது.

விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடெர்ம் (Nixoderm) மற்றதைவிட சீக்கிரம் வேலை செய்கிறது. நமைச்சல், எரிச்சலை சில நிமிஷத்தில் நிறுத்தி விரைவில் சருமத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழவழப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங்களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். தேடிய சஞ்சீவி - தாடிய வைத்தியம் கிடைத்ததை உணர்வீர்கள். நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஆயிரக்கணக்கானவர்களது சருமத்தைச் சுத்தமாக்கி



புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் R. K. கூறுகிறார். "12 வருஷமாக நமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்துகளுக்குப் பிறகு நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித்தேன். 10 நிமிஷத்தில் நமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற்றத்தின் மாறுதலைக் கண்ட நண்பர்கள் ஆச்சரியமடைந்தனர்.

திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாகாதவரை நிக்ஸோடெர்ம் (Nixoderm) மதிப்பை இழக்கிறது. இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். தோற்றத்தில் ஏற்படும் அபிவிருத்தியைக் காண ஆச்சரியப் படுவீர்கள். ஒரு வாரத்துக்கு உபயோகித்தால் சருமம் வழவழப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் வசீகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். அதளித்த உத்தரவாதமே உங்களுக்கான உறுதி.



மணிப்புயல்

ரா. பாலகிருஷ்ணன்

“மாமாவுக்கு மாணிக்கம் வணக்கத்துடன் எழுதிக் கொள்ளுவது.

இவ்வளவு நாட்களுக்குப் பிறகு நான் தங்களுக்குக் கடிதம் எழுதுவது ஆச்சரியமாயிருக்கும். எங்கள் கம்பெனிக்குச் சேர வேண்டியதொகை நானூற்றைம்பது ரூபாயை நேற்று சினிமாக் கொட்டகை நிர்வாகி வழக்கம் போல் என்னிடம் கொடுத்துப் பாங்கியில் கட்டச் சொல்லியிருந்தார். அந்தப் பணம் பறிபோய் விட்டது. இன்னும் ஒரு வாரத்துக்குள் நான் அந்தப் பணத்தை எப்படியாவது பாங்கியில் கட்டாவிட்டால் என் நிலைமை விபரீதமாகி விடும். தயவு செய்து உடனே நானூற்றைம்பது ரூபாய் தந்தி மணியார்டர் செய்யவும். இதைக் கடனாக வாவது கொடுத்து உதவக் கோருகிறேன். விரைவில் திருப்பிக் கொடுத்து விடுகிறேன், வட்டியுடன். இந்த நிலைமையில் எனக்குத் தங்களை விட்டால் வேறு கதியில்லை. பழைய சங்கதிகளை மறந்து, என் விஷயத்தில் கருணை காண்பிப்பீர்கள் என்று நம்புகிறேன். தங்கள் இஷ்டம் போல் நடந்து கொள்ளத் தயார்.

அன்புடன்,
மாணிக்கம்.”

கடிதத்தைப் படித்த மருதவாணம் பிள்ளை பற்களை ‘நற நற’ வென்று கடித்தார். அவர் கண்கள் ஒரு நொடியில் சிவப்பேறித் தீப்பிழம்புகளாக ஜொலித்தன. “என் ஜெயிலுக்குத் தான் போகட்டுமே! நேற்று என்ன வீறாப்போடு கிளம்பிப் போனான்! என் மகளைக் கட்டிக்கொள்ள இஷ்டமில்லை — என் பணம் மாத்திரம் வேண்டுமாக்கும்! கடிதாக எழுதி விட்டான், மானங் கெட்டவன்! எக்கேடாவது கெட்டுப் போகட்டும்! இந்த நன்றி கெட்டவனுக்குக் காலணாக்கூடக் கொடுத்து உதவக் கூடாது. என் இஷ்டம் போல நடந்து கொள்ளத் தயாராமே! அந்தப் புத்தி இப்போது வந்து என்ன பிரயோசனம்! என் பெண்ணுக்கு இந்தப் பயலை விட்டால் வேறு நல்ல இடம் கிடைக்காதா, என்ன! இவன் தலைகீழாக நின்றால்கூட இனிமேல் கல்யாணியைப் பற்றி நினைக்கவே இடம் கொடுப்பதில்லை!” என்ற முடிவுக்கு வந்தார், மருதவாணம் பிள்ளை.

எந்தப் ‘பழைய சங்கதிகளை’ மறந்துவிட வேண்டுமென்று மாணிக்கம் எழுதியிருந்தானோ, அதே எண்ணங்கள் அவர் மனக் கடலில் அலை பாய்ந்தன. அது மட்டுமல்ல—மாணிக்கத்தின் கற்பனைக்கும் எட்டாத மிகப் பழைய சம்பவங்கள் சிலவும் அவர் நினைவுக்கு வந்தன. நினைக்க, நினைக்க மனத்தில் வீசிய புயலின் வேகம் அதிகரித்துக் கொண்டே வந்தது.

* * *

ஆரம்பப் பாடசாலையில் மூன்று வருடங்கள் படித்ததோடு படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டார், மருதவாணம் பிள்ளை. தம் இருபதாவது வயதில் கப்பலேறி ரங்கூன் போய்ச் சேர்ந்தார், பிழைப்புக்காக. போலி வைரங்கள் வியாபாரம் செய்து வந்த சோமசுந்தரம் பிள்ளை, மருதவாணம் பிள்ளையைத் தம் கடையில் சொற்ப சம்பளத்தில் குமாஸ்தாவாக அமர்த்திக் கொண்டார். ஏழு வருடங்களுக்குப் பின் கொஞ்சம் பணத்துடன் திரும்பி வந்த மருதவாணம், தங்கை ரங்கம்மாவின் கல்யாணத்தை முடித்து விட்டு, அதே கையோடு மரகதத்தின் கழுத்தில் தாலியைக் கட்டி அவளையும் தம்மோடு அழைத்துக் கொண்டு மறுபடியும் கப்பலேறி விட்டார்.

ரங்கம்மாவின் கணவனுக்குப் பூர்வீக சொத்து ஏது மில்லாவிட்டாலும், கொஞ்சம் படித்திருந்தான். தபாலாபீஸில் குமாஸ்தா வேலை. தன் மைத்துனன் படித்தவன், சர்க்கார் உத்தியோகத்தி லிருப்பவன் என்பது குறித்து மருதவாணம் பிள்ளைக்கு உள்ளூரக் கட்டுக் கடங்காத பெருமை.

இந்தப் பெருமையைக் குலைக்கவே போன்று, கல்யாணமான மூன்றாவது வருடமே அவன்

வைசூரி கண்டு இறந்து விட்டான். அப்போது ரங்கம்மாளின் மகன் மாணிக்கத்துக்கு ஒரு வயது இருக்கும். மருதவாணம் பிள்ளை இந்தச் செய்தி யறிந்து எல்லையற்ற துயரமடைந்தார். ரங்கம்மாளின் குடும்பத்தை நிர்வகிக்கும் பொறுப்பும் அவர் தலைமீது சுமந்தது. பிரதி மாதமும் இயன்ற அளவு தங்கைக்குப் பணம் அனுப்பி வந்தார். இடையில் அவருக்குக் கல்யாணியும் பிறந்தாள்.

பதினைந்து வருடங்களுக்குப் பிறகு அவர் குடும்பத்துடன் கும்பகோணம் திரும்பி, அங்கேயே சொந்தத்தில் ஒரு வீடு கட்டிக் கொண்டு தங்கினார். சுவாமி மலைக்கருகில் இருபது ஏக்கர் நிலம் வாங்கினார். பாங்கியிலும் ஏராளமாகப் பணம் இருந்ததாக வதந்தி.

ஆண் வாரிசு இல்லாத மருதவாணம் பிள்ளை தம் சொத்து அயலாரிடம் போய்விடக் கூடாது என்பதற்காக மாணிக்கத்தை பி. ஏ. வரையில் படிக்க வைத்து அவனிடமே தம் மகள் கல்யாணியை ஒப்படைத்து விட வேண்டும் என்று திட்டமிட்டார்.

மாணிக்கத்தின் படிப்பு முடிந்ததும் மருதவாணம் வெளிப்படையாகவே தம் மகளின் கல்யாண விஷயத்தைப் பிரஸ்தாபிக்கலானார். ரங்கம்மாளுக்கு அந்தச் சம்பந்தத்தில் சம்மதந்தான். ஆனால் மாணிக்கத்தின் போக்குத்தான் பிடிபடாமல் இருந்தது. அதற்கேற்றாற்போல் ஒருநாள் மாணிக்கம், தான் எங்கேயாவது ஒரு வேலையில் அமர்ந்துவிட விரும்புவதாகக் கூறவே, மருதவாணம் துணுக்குற்றார்.

"என்ன தம்பி, இது! நீ ஏன் வேலைக்குப் போகணும்! நமக்கு இருக்கிற நிலபுலன்களைக் கவனிக்கவே ஆள் போடவேண்டி யிருக்கிறது! நீ ஏன் ஒருத்தர்கிட்டப் போய்க் கை கட்டிச் சேவகம் செய்யணும்! அதெல்லாம் வேண்டாம், தம்பி!" என்று பரிவுடன் கூறினார்.

"அதனாலே என்ன, அண்ணா! படிச்ச பையன் பாருங்க! வீட்டோடு இருக்கப் பிடிக்கல்லே. போகட்டுமே!" என்று தன் பிள்ளைக்குச் சாதகமாகப் பேசினாள் ரங்கம்மா.

"சரிதான், போ! அவன்தான் சிறு பையன்; அறியாமல் பேசுகிறான், நீயும் அவனுக்குச் சப்பைக் கட்டு கட்டறியே! அவன் வேலைக்குப் போகும்படியாக இப்போ என்ன வந்தது!" என்றார் மருதவாணம். ஆயினும் சினிமாப் படங்களை விநியோகம் செய்யும் கம்பெனி ஒன்றில் உத்தியோக மேற்றான் மாணிக்கம்.

அன்று மாணிக்கம் மாமாவின் வீட்டுக்குள் நுழைந்தபோது, மருதவாணம் பிள்ளை மட்டும் வீட்டிலிருந்தார். மேஜை யருகில் அமர்ந்து ஏதோ கணக்கு வழக்குகளைப் பரிசீலனை செய்து கொண்டிருந்தவர் தயங்கிய வண்ணம் உள்ளே நுழைந்த மாணிக்கத்தைப் பார்த்து, "வா, தம்பி! உட்காரு! எங்கே இப்படி அபூர்வமாக வந்தே! ரங்கம்மா சௌக்கியமா!" என்றார்.

"சௌக்கியந்தான், மாமா! மாமி, கல்யாணி எல்லோரும் எங்கே! காணோமே!" என்றான். கல்யாணியைப் பற்றிக் குறிப்பாக அவன் விசாரித்ததில் மருதவாணம் பிள்ளைக்குத் திருப்தி. மாணிக்கம் மனம் மாறிவிட்டான் போலும் என்று தீர்மானித்தார்.

"கோயிலுக்குப் போயிருக்காங்க. இதோ வந்து விடுவாங்க. உம்...உன் வேலை எப்படி இருக்கு! ரொம்ப இளைச்சுப் போயிருக்கிறியே! ஏன் தம்பி, இந்த வீண் அலைச்சல் உனக்கு! சுகமாகச் சாப்பிட்டுக் கொண்டு வீட்டோடு இருக்காமே......"



"மாமா! ... நான் ...எனக்கு..."

மாணிக்கத்தை உற்று நோக்கிய மருதவாணம், "ஏன் தம்பி, தயங்கறே! ஏதாச்சும் பணம் வேணுமா! வேணுமானால் கேளேன்! உனக்கு இல்லாத பணமா! இது எல்லாமே உன் சொத்துத்தானே! கல்யாணி உன் பெண்சாதியாகிற வரைக்கும் நான் இந்தச் சொத்துக்கெல்லாம் வெறும் காவற்காரன் தானே!" என்றார்.

சொல்ல நினைத்ததைச் சொல்லிவிட நாவெழ வில்லை, மாணிக்கத்துக்கு. உடலெல்லாம் 'குப்' பென்று வியர்த்தது.

"பணமில்லை, மாமா! உம்...கல்யாண விஷயம்..." என்று இழுத்தான்.

"இதைச் சொல்லவா இவ்வளவு தயக்கம்! தை பிறக்கட்டும்னு தானே காத்திருக்கேன், நான்! இனைற்று ஜலம் எங்கே போயிடுது!" என்றார் மருதவாணம் உற்சாகம் நிறைந்த குரலில்.

மாமா அவசரப்பட்டுத் தவறான கற்பனையில் ஈடுபட்டு விட்டாரே, தன் தயக்கத்துக்குத் தவறான அர்த்தம் கற்பித்துக் கொண்டு விட்டாரே என்று ஒரு கணம் அவருக்காக அனுதாபம் கொண்டான் மாணிக்கம்.

தண்ணீரில் மூழ்கி இருக்கிறவன் கடைசி முறையாகத் தெம்பு முழுவதையும் பிரயோகித்துக் கை, கால்களை உதைத்துக் கொண்டு மேலே வர முயற்சிப்பது போல, தான் இழந்து கொண்டே வந்த தைரியத்தையும் உறுதியையும் மீண்டும் வரவழைத்துக் கொள்ள அரும்பாடு பட்டான் மாணிக்கம்.

"எனக்குத் தெரிந்த ஒரு ஏழைப் பெண் இருக்கிறாள். நான் இருக்கிற தெருவிலேயே தான் அவள் வீடும்..."

மருதவாணம் பிள்ளை திடுக்கிட்டார். "என்ன சொல்லறே !" என்றார் மாணிக்கத்தை விறைக்கப் பார்த்துக் கொண்டே.

"அவளை நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன், மாமா ! அதற்குத் தங்கள் உத்தரவு வேண்டும்." இதைச் சொல்லி முடிப்பதற்கே மூச்சு வாங்கியது மாணிக்கத்துக்கு. நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

மருதவாணம் பிள்ளை புதைவாணம் போல் சீறினார். "என்ன சொன்னே ! மாணிக்கம் ! நீதானா பேசறே ! அட, பாவி மகனே ! இதுக்குத் தானா நான் உன் படிப்புக்காகப் பணத்தைத் தண்ணீர்போல வாரி இறைத்தேன் ! இத்தனை வருஷமாக உன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தேனே — அதற்குப் பிரதிபலனா இது ! 'மாணிக்கம், மாணிக்கம்'னு கல்யாணி உன் பேரிலே உயிரையே வைச்சிருக்காளே— அதை நினைத்துப் பார்த்தாயாடா! அவள் மனசு எப்படித் துடிக்கும், இதைக் கேட்டால் :" தீப்பிழம்பு போன்ற வார்த்தைகளைக் கக்கினார் மருதவாணம் பிள்ளை.

மாணிக்கம் சிலை போல் நின்றான். தன் குடும்பத்துக்காக அவர் செய்திருக்கிற உதவியை அவன் மறந்து விடவில்லை. ஆனால், அதற்காகக் கல்யாணியை மனைவியாக ஏற்க அவன் மனம் இடந்தரவில்லை.

"மாமா ! கல்யாணியிடம் எனக்கு அன்பு இல்லாமலில்லை. அந்த அன்புக்கு நீங்கள் தவறாக அர்த்தம் கற்பித்துக் கொண்டு விட்டீர்கள். கல்யாணியை என் தங்கையாகவே பாவிக்கிறேன். அவளுக்குத் தகுந்த கணவனைத் தேடிப்பிடித்துக் கல்யாணம் செய்வது என் பொறுப்பு" என்றான் மாணிக்கம்.

காய்ந்த எண்ணெயில் தண்ணீரைத் தெளித்தது போலப் படபடத்தார் அவன் மாமா.

"போடா, முட்டாள் ! உனக்கு இஷ்டமிருந்தால் பேசு ; இல்லாதபோனால் விட்டுத் தள்ளு. வெளியிலே என் பெண்ணுக்கு மாப்பிள்ளை தேட எனக்குத் தெரியாமல்தான் உன்னைக் கேட்டேனாக்கும் ! பெரிய பொறுப்பைக் கண்டு விட்டான் ! பிச்சை யெடுத்து அலைய வேண்டிய குடும்பத்தைக் கௌரவமாக வைத்துக் காப்பாற்றினேன், பாரு — அதற்கு நீ இதுவும் பேசுவே, இன்னமும் பேசுவேடா !" என்று கர்ஜித்தார்.


"நீங்கள் செய்து வந்திருக்கிற உதவிக்கு நான் மிகவும் கடமைப்பட்டவன்தான். ஆனால் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் என்னை என் இஷ்டப்படியே விட்டு விடும்படி கேட்டுக் கொள்கிறேன், மாமா !" என்று பணிவுடன் சொன்னான் மாணிக்கம்.

"மாமா என்று என்னை அழைக்காதேடா! இனிமேல் நான் உன் மாமனும் இல்லை ; நீ மருமகனும் இல்லை. என் உப்பைத் தின்று வளர்ந்தவன் என்னிடமே இப்படிப் பேசறயே! உம், இதோடு போய் விடு ! இனி இந்த வீட்டுப் பக்கமே எட்டிப் பார்க்க வேண்டாம் !" என்று தீர்மானமாகக் கூறி விட்டார் மருதவாணம்.

மருதவாணம் பிள்ளையின் மனம் பழைய குப்பைகளையே கிளறிக் கொண்டிருந்தது. அந்தக் குழப்பத்திலிருந்து அவரால் விடுபடவே முடியவில்லை. இரவு வெகுநேரமாகியும் அவருக்கு உறக்கமே வரவில்லை.

ரங்கூனில் போலி வைரங்கள் வியாபாரம் செய்துவந்த சோமசுந்தரம் பிள்ளை, கடையில் சில அசல் வைரங்களையும் ரகசியமாக வைத்திருந்தார். அவை பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்த இடம் மருதவாணம் பிள்ளைக்கும் தெரியும். ஒரு நாள் கடையின் பின்புறம் உட்கார்ந்து கணக்கு எழுதிக் கொண்டிருந்த மருதவாணம், சோமசுந்தரம் தம்மை அழைப்பதைக் கேட்டு கல்லாப் பெட்டியிருந்த இடத்துக்கு விரைந்து சென்றார்.

சோமசுந்தரம் மூச்சுவிட முடியாமல் திணறிக் கொண்டிருந்தார். வழக்கமாக வரும் மார் அடைப்புத்தான் என்பதைக் கண்டு கொண்டார். தண்ணீர் வேண்டும் என்று சோமசுந்தரம் ஜாடை காட்டியவுடன் கடையிலிருந்த ஒரு பையனை அழைத்து அவசரமாக ஒரு சோடா வாங்கி வரும்படி அனுப்பினார், மருதவாணம். பையன் கடையை விட்டுக் கீழே இறங்கிய போதே சோமசுந்தரத்துக்கு மூச்சு நின்று



விட்டது. ஒரு விநாடிக்குமேல் சிந்திக்கவில்லை மருதவாணம். அசல் வைரங்கள் வைக்கப்பட்டிருந்த பெட்டியைக் காலி செய்து அவற்றை ஒரு பொட்டணமாகக் கட்டி வேறொரு இடத்தில் பத்திரப்படுத்தி விட்டார். பிறகுதான் சோடாபுட்டியுடன் பையன் திரும்பினான்.

போலீஸ் விசாரணை, வைத்தியப் பரிசோதனை முதலிய சடங்குகள் நிறைவேறின. சோமசுந்தரத்துக்குச் செய்ய வேண்டிய சமக்கிரியைகள் முடிந்தவுடன் கணக்குப்படி கடையிலுள்ள சாமான்களை அவர் மனைவியிடம் ஒப்படைத்து விட்டார், மருதவாணம். அசல் வைரங்கள் கணக்கிலேயே சேராமலிருந்தபடியால், அவற்றைத் தம் உடைமையாக்கிக் கொள்ளுவதில் மருதவாணத்துக்குச் சிரமமே யிருக்கவில்லை.

வந்த விலைக்குக் கடையை விற்று விட்டு மகனுடன் ஊர் திரும்பிய சோமசுந்தரத்தின் மனைவி மருதவாணத்தின் உதவியைத் தான் நாடினாள். கடை விற்ற பணம் மூவாயிரத்துடன் முதலாளியின் மனைவியையும் மகனையும் கப்பலேற்றியனுப்பினார் மருதவாணம். பிறகு தம்மிட மிருந்த வைரங்களை நகைகளாகச் செய்து மனைவியின் கழுத்தில் அணிவித்து விட்டுத் தாமும் அடுத்த கப்பலில் புறப்பட்டுக் கும்பகோணம் வந்து சேர்ந்தார். மருதவாணம் லட்சாதிபதியான மர்மம் கடைசி வரையில் மர்மமாகவே இருந்து வந்தது.

* * *

'டக், டக்' என்ற பூட்ஸ் ஒலி கேட்டதும் மருதவாணம் திடுக்கிட்டார். எதிரில் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் இரு ஜவான்களும் கையில் விலங்குடன் நின்றிருந்தனர்.

"நீங்கள் தானே மருதவாணம் பிள்ளை! ரங்கூனில் சோமசுந்தரம் பிள்ளையின் கடையில் வேலை பார்த்தீரா!" என்று இன்ஸ்பெக்டர் மிரட்டினார், கட்டைத் தொண்டையில்.

மருதவாணம் பிள்ளைக்கு நடுக்கம் எடுத்தது. பேச இயலவில்லை. ஏதோ உளறினார்.

"கையை நீட்டும், இப்படி. சோமசுந்தரம் பிள்ளை ரகசியமாக வைத்திருந்த வைரங்களைத் திருடியதுடன் அதே காரணத்துக்காக அவரைக் கொலை செய்த குற்றமும் உம் மீது சுமத்தப்பட்டுள்ளது. உம்மைக் கைது செய்வதற்கான 'வாரண்ட்' இதோ இருக்கிறது!" என்று அதட்டிப் பேசினார் இன்ஸ்பெக்டர்.

"ஐயோ! நானில்லை! நான் நிரபராதி! வைரங்களை வேணுமானால் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்..." என்று அலறிப் பொத்தென்று படுக்கையிலிருந்து கீழே விழுந்தார் மருதவாணம். அந்தச் சப்தம் கேட்டு அடுத்த அறையிலிருந்த அவர் மனைவி மரகதமும் மாணிக்கமும் ஓடி வந்தனர். அவர் தங்கை ரங்கம்மாவும் பின்னால் நின்று கொண்டிருந்தாள். வாயிற்படிக்கு வெளியே சுமார் நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஒரு ஸ்திரீயும் அவளருகில் ஒரு அழகான யுவதியும் நின்று கொண்டிருந்தனர்.

மருதவாணம் கண்களை உருட்டி விழித்தார். "என்ன! மாணிக்கமா! நீ எப்போ வந்தே! ரங்கம்மா! வா!" என்று வரவேற்றார், கனவுலகிலிருந்து விடுபட்ட மருதவாணம்.

மாணிக்கம் தன் மாமாவின் அன்பான வரவேற்பைக் கண்டு திகைத்து நின்றான்.

ரங்கம்மா சொன்னாள்: "இதோ, இந்தப் பெண்தான் மாணிக்கத்துக்கு மாலையிடப்போகிறவள். பக்கத்திலிருப்பது அவள் அம்மா..."

மருதவாணம் இடைமறித்தார்:— "யாரு! சோமசுந்தரம் பிள்ளை மகளா! குழந்தையிலே பார்த்தது. நீங்கள் எல்லாம் இது வரைக்கும் எங்கே இருந்தீங்க! உங்களை யெல்லாம் பார்க்கணும்னு தான் எனக்கு ரொம்ப ஆவல். ஆனால் நீங்க இருக்கிற இடந்தான் தெரியல்லே. மாணிக்கத்துக்கு ஏற்ற பெண்தான்!"

"அதிருக்கட்டும், அண்ணா! சங்கதி பூராவும் கேளுங்க. மாணிக்கம் தொலைச்ச பணம் நேற்று சாயந்திரம் திரும்பக் கிடைச்சுடுத்து. மணிபர்ஸிலே மாணிக்கம் விலாசம் எழுதி வைத்திருந்தான். நல்ல காலம், அதைக் கண்டு பிடிச்ச புண்ணியவான் வீடு தேடிக் கொண்டு வந்து கொடுத்தார். நீங்கள் எங்களிடம் கோபமா யிருந்தாலும், நாங்களும் அப்படி யிருக்கலாமா! உங்களைக் கலந்துக் கிட்டுத்தான் முகூர்த்தம் வைக்கணும்னு நான் பிடிவாதமா மாணிக்கத்திடம் சொன்னேன். அவனும் சரின்னு சொன்னான். சுவாமிமலையிலே தான் கல்யாணம் நடக்கணும்னு இவங்ககிட்ட சொன்னேன். இவங்களும் எங்களோடு சேர்ந்தே வந்துடறதாகச் சொன்னாங்க. ரயிலிலே வருகிற போதுதான் உங்களைப் பற்றி இவங்க கிட்ட சொன்னேன். 'எங்கள் கடையிலேதானே இருந்தாரு! எங்களுக்கு நல்லாத் தெரியுமே! என் மகளை உங்க மகனுக்குக் கொடுக்கறதுன்னு அவரு ரொம்ப சந்தோஷப் படுவாரு'ன்னு சொன்னாங்க, இந்தம்மா. அழைச்சுகிட்டு வந்தேன். நீங்கதான் நடத்தி வைக்கணும், அண்ணா!" என்றாள் ரங்கம்மாள்.

"வருத்தப்படாதே, ரங்கம்மா! ஏதோ, போதாத காலம் நடுவிலே வந்து நம்மை ஆட்டி வைத்தது. இந்தச் சமயத்திலே எனக்கு சந்தோஷம்னு சாதாரணமாகச் சொன்னால் மட்டும் போதாது. கல்யாணச் செலவு முழுதும் நானே தான் செய்யப் போகிறேன். கல்யாணியின் கல்யாணத்தைவிட இன்னும் சிறப்பாக நடத்தி விடலாம்!" என்று மருதவாணம் பிள்ளை கூறியபோது, அவருடைய மனமாற்றத்தின் காரணம் சரியாக விளங்காமல் மாணிக்கம் திகைத்து நின்றான். தனக்கு வாழ்க்கைத் துணைவியாகப் போகிற சுந்தரியைக் கடைக்கண்ணால் நோக்கினான்.

ஒரு சிறு கனவு தன் கணவரின் மனத்தை அடியோடு மாற்றி விட்டதன் காரணம் புரியாமல் பிரமித்து நின்றாள் மருதவாணம் பிள்ளையின் மனைவி மரகதம்.

தம் சொத்து முழுவதையுமே மாணிக்கத்திடம் ஒப்படைத்து விடுவதாக அந்தக் கணமே மருதவாணம் தீர்மானித்தது யாருக்குமே அப்போது தெரியாது! சொத்துக்கு உடையவர்களை மாணிக்கமே தெய்வாதீனமாக அழைத்து வந்து தம் கண்முன் நிறுத்தி விட்ட பிறகும் இதைச் செய்யாவிட்டால் தம் மனத்தில் வீசிய புயல் என்றுமே அடங்காது என்பதை நன்றாகத் தெரிந்துகொண்டு விட்டார் மருதவாணம்.



மோஹறன் முன்னேற்றமடைவதில் ஆச்சரியமில்லை . . .




நீங்கள் ஏன் ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகளை உபயோகிக்க வேண்டும்

- அவைகள் மிகவும் கூர்மையானவை—சுலபமாகவும் மழு மழுப்பாகவும் க்ஷவரம் செய்கின்றன.
- ஒவ்வொரு ப்ளேடும் பல க்ஷவரங்களுக்கு வரும்—ஆதலால் ஸெவன் ஓ'க்ளாக் பணத்தை மிச்சமாக்குகிறது.
- ஸெவன் ஓ'க்ளாக் உங்களை சுத்தமாகவும் கவர்ச்சிகரமாகவும் இருக்கச் செய்கின்றன.

மட்டரக ப்ளேடுகளில் பணத்தை விரயமாக்காதீர்கள்—தினமும் ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகளால் க்ஷவரம் செய்து கொள்ளுங்கள்.

7 o'clock BLADES

ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகள்




ஊக்கம்
சக்திக்கு
வேலை செய்யும் இடத்தில்
விளையாட்டு மைதானத்தில்
OVALTINE
அருந்துங்கள் ருசிகரமான
ஓவல்டின்



கஸ்தூரிபா உயர்நிலைப் பள்ளியின் காலை மணி கணகணவென்று ஒலித்தது. தோட்டத்திலும் விளையாட்டு மைதானத்திலுமாகச் சிதறிக் கிடந்த சிறுமிகள் பரபரப்புடன் அவரவர் வகுப்புகளை நோக்கி விரைந்தனர். ஆசிரியர்கள் அறையில் அமர்ந்து ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த சுமதியும் அப்போதுதான் நினைவுக்கு வந்தவளாய் அவசரம் அவசரமாக ஆறாவது வகுப்பை நோக்கி நடந்தாள்.

உள்ளே நுழைந்த சுமதியை அறுபது இளங் குரல்கள் ஏககாலத்தில் வணக்கம் செலுத்தி வரவேற்றன. புன்னகையுடன் அந்த வணக்கத்தை ஏற்றுக் கொண்டு தன்னிருக்கையில் போய் அமர்ந்தாள் சுமதி. கையிலிருந்த புத்தகத்தை மேஜைமீது வைக்கும்போது அங்கேயிருந்த கடித உறை ஒன்று அவள் கண்களில் பட்டது. "என்ன இது!" என்று கேட்டுக் கொண்டே அதைக் கையிலெடுத்தாள்.

"சாருவுக்கு உடம்பு சரியில்லை, டீச்சர்! அதனாலே அவள் அப்பா லீவ் லெட்டர் கொடுத்தனுப்பியிருக்கார்!" என்றாள் முன் வரிசையிலிருந்த சுந்தரி.

சுமதியின் உள்ளம் ஒரு கணம் துணுக்குற்றது. "சாருவுக்கு உடம்பு சரியில்லையா! என்ன உடம்பு! வெள்ளிக்கிழமை வந்தபோது கூட நன்றாயிருந்தாளே!" என்றாள் வியப்புடன்.

"அதென்னவோ, நேத்தியிலேயிருந்து ஒரே ஜுரமாம்!" என்றாள் சுந்தரி.

சுந்தரி சொன்ன தகவல் சுமதியின் இதயத்திலே இனம் புரியாத ஒரு கலக்கத்தை ஏற்படுத்தியது. கலவரத்துடன் கவரைப் பிரித்துக் கடிதத்தில் கவனம் செலுத்தினாள். கடிதம் அழகாக டைப் அடிக்கப்பட்டிருந்தது. கடைசியில் கிறுக்கலான எழுத்தில் புரியாத விதமாகக் கையெழுத்திடப்பட்டிருந்தது.

உள்ளேயிருந்த விவரம் அவள் உள்ளத்தை ஒரு உலுக்கு உலுக்கியது. சாருவுக்கு 'டபின் நிமோனியா' கண்டிருப்பதாகக் கூறி விடுமுறை கோரியிருந்தார் அவள் தந்தை. "டபின் நிமோனியாவா! பொல்லாத வியாதியாயிற்றே அது!" என்று சுமதியின் இதழ்கள் இலேசாக முணுமுணுத்தன.

கஸ்தூரிபா உயர்நிலைப் பள்ளியில் அழகும் சுட்டித்தனமும் கொண்ட எத்தனையோ இளம் சிறுமிகள் இருக்கத்தான் செய்தனர். இருந்தாலும் சுமதிக்குச் சாருவின்மீது தனிப்பட்ட ஒரு வாஞ்சை. அதற்குக் காரணம் அவளது குறுகுறுப்பான கண்களா அல்லது சுறுசுறுப்பான சுபாவமா என்று சுமதிக்கு இன்னும் விளங்கவில்லை.

ஒரு நாள் சாருவைப் பார்க்காவிட்டால் கூடச் சுமதிக்கு ஒன்றும் ஓடாது. சாருவுக்கும் அப்படித்தான். இன்னதென்று தெரியாத ஒரு பாசம் இருவரையும் பிணைத்தது. ஆறு மாதங்களுக்கு முன் நடந்த சம்பவமொன்று அதை அதிகரிக்கச் செய்தது.

பள்ளியின் நாடக விழா தினம். நிகழ்ச்சி முடிந்து வீட்டுக்குப் போகும்போது சுமதி சாருவைச் சந்தித்தாள். அன்றைய நிகழ்ச்சியில்

அபாரமாக இருந்தது சாருவின் ஆட்டம். அதற்காக அவளைப் பாராட்டிவிட்டுப் பேச்சு வாக்கில், "உன் அம்மா வரவில்லையோ, சாரு!" என்று கேட்டாள் சுமதி.

சாருவின் மலர் முகம் சட்டென வாடியது. "எனக்கு அம்மா இல்லை, டீச்சர்" என்றாள் சோகத்துடன். ஏக்கம் தேங்கிய அவளது இளங் கண்களும் உலகத்தின் சோகமெல் லாம் ஒருங்கே குவிந்த அவள் மலர் முகமும் சுமதியின் உள்ளத்தை என்னவோ செய்தன. தான் அந்தக் கேள்வியைக் கேட்டதற்காகத் தன் னையே கடிந்து கொண்டாள்.

"என் கூடப் படிக்கிற எல்லா ருக்கும் அம்மா இருக்கா, டீச்சர்! எனக்கு மட்டும் ஏனோ அம்மா இல்லை!" என்று இதழ்கள் துடிக்க முறையிட்ட சாருவை வாரியணைத் துத் தேற்றினாள் சுமதி.

"அப்படிச் சொல்லாதே, சாரு! உலகத்திலே எல்லோருக்கும் அம்மா வாகக் கடவுள் ஒருத்தர் இல்லையா!" என்றாள் சுமதி.

கடவுள் தத்துவம் அந்த இளம் மனத்துக்கு எப்படி எட்டும்! "கடவுள் எனக்குத் தலைவாரிப் பின்னுவாரா, டீச்சர்! கையிலே சாதம் பிசைஞ்சு போடுவாரா! சுந்தரிக்கு அவள் அம்மா எல்லாம் செய்யறாளே!" என்றாள் சாரு.

சுமதிக்குக் கண்ணீரே வந்து விட்டது.

அன்புக்கும் ஆதரவுக்கும் அந்தப் பிஞ்சு உள்ளம் எப்படி ஏங்குகிறது என்று அறிந்து கொண்டாள் சுமதி. சாருவின் கன்னத்தைத் தன் இரு கரங்களாலும் நிமிர்த்தி, "எங்கே, சாரு, என்னைப் பார்! என்னை உனக்குப் பிடிச் சிருக்கா!" என்று கேட்டாள்.

"ஓ! ரொம்ப ரொம்பப் பிடிச்சிருக்கு!" என்றாள் சிறுமி உற்சாகத்துடன்.

"அப்படின்னா என்னைத்தான் அம்மாவாக நினைச்சுக்கோயேன்!"

வியப்புக் கலந்த மகிழ்ச்சி விழிகளிலே மிதக்க ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தாள் சாரு. "நிஜம்மாவா டீச்சர்! ஆனால் அம்மான்னா என் வீட்டிலேயே இருக்கணுமே! நீங்க அங்கே வருவீர்களா!"

சுமதிக்குச் சிரிப்பு வந்தது. "வீட்டிலே இருந்தால்தான் அம்மாவா! நான்தான் காலை யிலிருந்து சாயங்காலம் வரைக்கும் உன் பக்கத் திலேயே இருக்கேனே!" என்று அவளைச் சமாதானப்படுத்தும் தோரணையில் கூறினாள்.

மேலும் ஒரு வாரம் ஓடியது. சுமதிக்கு வகுப் புக்கே போகப் பிடிக்கவில்லை. ஆனாலும் கடமை ஒன்றிருக்கிறதே! அதற்குப் பணிந்து தானே ஆகவேண்டும்! ஏதோ யந்திரம்போல் சென்று வந்தாள். சுந்தரிமூலம் தகவல்கள் அவ்வப்போது கிடைத்து வந்தன. சாருவுக்குக் குணமாகி வருகிறது என்று கேட்டதும் சற்று அவள் மனம் நிம்மதி அடைந்தது.

அன்று மாலை. சுமதி அவசரமாகத் தன் சக ஆசிரியை சகுந்தலாவைச் சந்திக்க மாம்பலத் துக்குப் போகவேண்டியிருந்தது. அவளைப் பார்த்துவிட்டுத் திரும்பும்போது "டீச்சர்!" என்று ஒலித்தது ஒரு கீச்சுக்குரல். சுமதி திரும்பினாள். மூச்சு வாங்க ஓடிவந்து நின் றாள் சுந்தரி.



"நீ எங்கே வந்தே, சுந்தரி! இங்கேதான் இருக்கிறதா உன் வீடு!" என்று அவளிடம் விசாரித்தாள் சுமதி.

"ஆமாம், டீச்சர்! அடுத்த தெருவிலே இருக்கு எங்க வீடு. சாருவைப் பார்க்கறதுக் காகக் கிளம்பினேன்!" என்றாள் சுந்தரி.

சுமதி நடந்து கொண்டே அவளுடன் பேச் சுக் கொடுத்தாள். "அப்படியா! சாரு வீடு இங்கிருந்து ரொம்ப தூரமா!"

"இல்லை! இதோ இந்தச் சந்து திரும்பினால் முதல் வீடு!" என்றாள் சுந்தரி.

சாருவின் வீடு வந்து விட்டது. "இதோ இந்த வீடுதான், டீச்சர்! நீங்களும் வாங்க ளேன்! சாரு தினம் உங்களைப்பத்திக் கேட்டுக் கொண்டே இருக்கா!" என்றாள் சுந்தரி.

சுமதி ஒரு கணம் தயங்கினாள். 'முன்பின் தெரியாத இடம். இந்த நிலையில் தான் எப்படிச் செல்வது!' என்ற தயக்கம் அவள் கால்களை மடக்கியது. ஆனால் சாருவின் பாசம் அவளைக் கவர்ந்து இழுத்தது. இவ்வளவு தூரம் வந்து விட்டுப் பார்க்காமல் போவதா என்ற எண் ணம் தோன்றவே சுமதி தயங்கிய கால்களை இழுத்துக் கொண்டு சுந்தரியைத் தொடர்ந்து உள்ளே நுழைந்தாள்.

கட்டிலில் படுத்திருந்த சாரு, காலடியோசை கேட்டதும் திரும்பிப் பார்த்தாள். சுந்தரியைத் தொடர்ந்து உள்ளே நுழைந்த சுமதியைக் கண்டதும் வியப்பினால் அவள் விழிகள் அகல



விரிந்தன. "டீச்சர்!" என்று ஆச்சரியமும் ஆனந்தமும் பொங்கக் கூச்சலிட்டபடி அவசரமாக எழுந்திருக்க முயன்றான்.

"ஊஹூம்! அதெல்லாம் வேண்டாம்! அப்படியே படுத்துக்கோ!" என்றாள் சுமதி.

"டீச்சர்! உங்களைப் பார்க்காமல் எனக்குப் பொழுதே போகல்லே! இப்போ உங்களைப் பார்த்தது எனக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கு, தெரியுமா!" என்றான் சாரு.

"அப்படியா! எனக்கும் உன்னைப் பார்க்காதது என்னவோ மாதிரி இருந்தது! அதுதான் வந்தேன்!" என்றாள் சுமதி, சாருவின் கன்னத்தைக் கிள்ளியபடி.

"நீங்க வருவீங்கன்னு எனக்குத் தெரியும்!"

"எப்படி!"

"நேத்துதான் நீங்க வந்தமாதிரி சொப்பனம் கண்டேன்!" என்றான் சாரு.

சுமதி சிரித்துக் கொண்டு முன் நெற்றியில் சுருண்டு விழுந்திருந்த அவன் கூந்தலை மெல்லக் கோதிச் சரிப்படுத்தினாள். அரை மணி நேரம் அவனுடன் ஆனந்தமாகப் பொழுதைப் போக்கியபின் சுமதி எழுந்து நின்றாள். சாருவின் முகம் வாடியது.

"என்ன, டீச்சர்! இதற்குள்ளாகவா? இன்னும் கொஞ்ச நேரம் இருங்களேன்! அப்பாவும் வந்து விடுவார்" என்று அவள் கரங்களைப் பற்றிக் கொண்டு முரண்டினான்.

அவன் சொல்லி வாய் மூடுமுன் டக்டக் என்ற பூட்ஸின் சத்தம் அறை வாசலில் கேட்டது. "அப்பா வந்து விட்டார்போலிருக்கே!" என்று சொல்லிக் கொண்டே சாரு திரும்பிப் பார்த்தான். சுமதியும் சற்றுப் பரபரப்புடன் அவனைத் தொடர்ந்து திரும்பினாள்.

கையிலே மருந்துப் புட்டிகளுடன் புயல் போல் உள்ளே நுழைந்த அந்த மனிதனைக் கண்டதும் சுமதிக்குத் தூக்கிவாரிப் போட்டது. குபீரென்று ஒரு ஜுர வேகம் உடலெங்கும் பரவியது. உள்ளம் படபடக்க உடல் வெடவெடக்கச் செய்வது இன்னதென்று தெரியாமல் திகைத்து நின்றாள்.

வேகமாக நுழைந்த ரகுநாதனும் சுமதியைப் பார்த்ததும் திடுக்கிட்டு நின்றான்.

மறு கணம் பலவந்தமாகப் பார்வையைப் பறித்திழுத்துக் கொண்டு வேகமாக வெளியே போனாள் சுமதி.

கண் சிமிட்டும் நேரத்தில் எல்லாம் நடந்ததால் ரகுவுக்கு ஒன்றும் செய்யத் தோன்றவில்லை. சுமதி இப்படித் திடீரெனத் தன்னைத் திகைப்பில் ஆழ்த்தி விட்டு மறைவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

சாருவுக்கு ஒன்றுமே புரியவில்லை. "இதென்ன இது! டீச்சர் போறாங்களே! அப்பா! அப்பா! டீச்சரைக் கொஞ்சம் கூப்பிடுங்களேன்!" என்று தந்தையை நோக்கியபடியே தள்ளாடி எழுந்திருக்க முயன்றான்.

ரகுநாதன் சட்டென விழிப்படைந்தான். "பேசாமல் படுத்துக்கோ, சாரு! நான் இதோ போய் டீச்சரை அழைத்து வருகிறேன்!" என்று சமாதானப் படுத்தி விட்டு வாசலுக்கு விரைந்தான். அவன் போன போது சுமதி தெருத் திருப்பத்திலிருந்த ஆட்டோ ரிக்ஷாவில் ஏறி உட்கார்ந்து விட்டாள். ஆட்டோ ரிக்ஷா தெருப் புழுதியைக் கிளப்பிக் கொண்டு வெகு வேகமாகப் பறந்து சென்றது.


ரகு ஏமாற்றத்துடன் உள்ளே திரும்பினான். ஆவலுடன் காத்திருந்த சாரு அவனைப் பார்த்ததும் "எங்கேப்பா டீச்சர்! போயிட்டாங்களா!" என்று கேட்டான்.

"என்னவோ அவசர வேலை போலிருக்கு! இன்னொரு நாள் வருவதாகச் சொல்லி விட்டுப் போயிட்டாங்க!" என்று அவனைச் சமாதானப் படுத்துவதற்காகப் புளுகி வைத்தான் ரகு.

அன்றிரவு சாரு தானும் தூங்கவில்லை. தந்தையையும் தூங்கவிட வில்லை. ஏதேதோ கேள்விகளைத் தொடுத்தபடியிருந்தான். விடிய ஒரு நாழிகை யிருக்கும்போதுதான் அவன் விழிகள் குவிந்தன.

சாருவையும் ரகுவையும் தூங்க விடாமல் ஆக்கிய அன்றையச் சம்பவம் சுமதியின் உறக்கத்தையும் கெடுக்காது போகவில்லை. எண்ணச் சுமை இதயத்தை அழுத்த, கண்ணீரின் சுமை கண்ணிமைகளை அழுத்தப் படுக்கையில் புரண்டு பொழுதைப் போக்கினாள். களை பொருந்திய ரகுவின் முகம் அடிக்கடி அவள் மனக்கண் முன் தோன்றி அவளை வதைத்தது.

பழைய சம்பவங்களெல்லாம் சுமதியின் மனக் கண்முன் ஒன்றன்பின் ஒன்றாக உருவெடுத்தன. பத்து வயதிலேயே தந்தையைப் பறிகொடுத்து விட்டு நின்றாள் சுமதி. அவளை



சென்னை அடையாற்றில் 'பரதநாட்டிய வித்தியாலயம்' என்ற பெயரில் ஒரு நடனப் பள்ளிக்கூடம் டாக்டர் வி. ஆர். மூர்த்தியின் மேற்பார்வையில் ஆரம்பமாகியிருக்கிறது. சென்ற மாதம் 12-ல ஸ்ரீமதி மிருணளினி ஸாராபாயின் தலைமையில், நிதிமந்திரி திரு சி. சுப்பிரமண்யம் இவ் வித்தியாலயத்தைத் துவக்கி வைத்தார். சாருபாலா சகோதரிகளின் இனிய நடனம் நடைபெற்றது.

அழைத்துக் கொண்டு அண்ணன் வீட்டில் அடைக்கலம் புகுந்தாள் அவன் தாயார் பார்வதி. இத்தனைக்கும் அவள் வெறுங் கையுடன் போகவில்லை! கையிலே பத்தாயிர ரூபாய் ரொக்கத்துடன் தான் போனாள். அது கரையும் வரை அண்ணன் மனைவி அவர்களை நாளைக்கொரு அன்பும் வேளைக்கொரு பரிவுமாகத் தான் போஷித்தாள். கையிலிருந்த ரொக்கத்தை யெல்லாம் அண்ணனை நம்பிக் கொடுத்து விட்டாள் பார்வதி. மூன்று வருடங்கள் மூரணின்றி ஓடின. நாளாக ஆக, தன் சுபாவத்தைக் காட்ட ஆரம்பித்தாள் அவளது அண்ணன் மனைவி ருக்மிணி. வேண்டாத சுமையாக இருக்க விரும்பாமல் வீட்டு வேலைகளைத் தானே இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாள் பார்வதி. இருந்தும் அவளால் ருக்மிணியின் திருப்தியைச் சம்பாதிக்க முடியவில்லை.

காலம் ஓடியது. சுமதிக்குப் பதினாறு வயதானபோது பௌர்ணமிச் சந்திரனுக்கும் அவளது பசும்பொன் முகத்துக்கும் வித்தியாசமே தெரியவில்லை. அந்தப் பௌர்ணமி நிலவைப் பருக வந்து சேர்ந்தான் ரகுநாதன்.

ரகு வந்த மறு வாரம். மாலை நாலு மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்ட ரகு எங்கெல்லாமோ சுற்றிவிட்டு ஏழு மணிக்கு வீட்டுக்கு வந்து சேர்ந்தான். வீட்டிலே ஒருவருமில்லை. அவன் அம்மாவும் அத்தையும் கோயிலுக்குப் போயிருந்தார்கள். தனியே யிருந்த சுமதிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. வெகு நேரம் தயங்கி விட்டுப் பிறகு துணிந்து காப்பியை எடுத்துக்கொண்டு போனாள் அவள். போனபோது ரகு சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி கண்களை மூடிக்கொண்டிருந்தான்.

"அப்பாடா!" என்று ஒரு பெருமூச்செறிந்தவளாய், மேஜைமீது டம்ளரை வைத்துவிட்டுப் போகத் திரும்பினாள். பின்னால் திரும்பிய போது அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

குறும்புச் சிரிப்புடன் அவளையே பார்த்துக்கொண்டு நின்றான் ரகு.

சுமதியின் முகம் வர்ணச் செந்தாமரையெனச் சிவந்தது. வெட்கத்துடன் வேகமாய் அவ்விடத்தை விட்டு நழுவுவதற்குத் தொடங்கினாள்.

"சுமதி......!"

கண்ணிமைகளை இலேசாக உயர்த்தி அவனைப் பார்த்தாள் சுமதி.

"தாமரை எங்காவது தரையை நோக்கி மலருமா, சுமதி! அதுவும் சூரியன் எதிரில் இருக்கும் போது!" என்று கூறி ரகு தன் உள்ளக் காதலை அவளுக்குத் தெரியப்படுத்தினான். அவளைத் தவிர வேறு யாரையும் மணக்கப் போவதில்லை என்று உறுதி கூறினான்.

அவனது விழிகளும் மொழிகளும் விசித்திரமானதொரு வர்ணக் கலவையைக் குழைத்து அவள் முகத்தில் பூசின.

ரகுவின் பரீட்சை முடிவு தெரிந்தது. முதல் வகுப்பில் தேறியிருந்தான். மேற்படிப்புக்காக இங்கிலாந்து செல்ல வேண்டுமென்று அவனுக்கு ஆசை. அவன் தந்தையும் அனுமதி கொடுத்து விட்டார். அவன் தாயாரும் மறுக்கவில்லை. ஆனால் மேல் படிப்புக்குப் போகு முன் அவனுக்கொரு கால் கட்டைப் போட விரும்பினாள் அவன் தாயார்.

ரகு சுமதியின் பெயரைப் பிரஸ்தாபித்தது தான் தாமதம். பத்திரகாளியாக மாறினாள் அவன் தாயார். தாயாருக்கும் மகனுக்குமிடையில் காரசாரமான வாக்குவாதம் நடந்தது. ஆனால் ரகு ஒரே பிடிவாதமாக இருந்தான்.

ருக்மிணிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவளது ஆசைக் கோட்டைகளெல்லாம் ரகுவின் பிடிவாதத்தின் முன் தகர்ந்து போகவே, அதற்குக் காரணமான சுமதிமீது அவள் ஆத்திரமெல்லாம் பாய்ந்தது.

அயலூருக்குச் செல்லும் பிள்ளையுடன் பகைத்துக் கொள்ள விரும்பாமல் தன் ஆத்திரத்தை யெல்லாம் அவன் ஊருக்குப் போகும் வரை அடக்கிக் கொண்டாள் ருக்மிணி.

ரகு வெளிநாட்டுக்குப் பிரயாணமான மறு வாரமே ருக்மிணியின் கொடுமை தாங்க முடியாமல் சுமதியும் அவள் தாயாரும் வீட்டை விட்டுவெளியேற நேரிட்டது. அவள் எஸ். எஸ். எல். சி. வரை படித்திருந்தாள். அவள் தோழி சாந்தாவின் தந்தை சொன்ன யோசனையின்படி சுமதி ஆசிரியர் பயிற்சிக்குப் போனாள். பயிற்சி முடிந்த மறு வருடமே கஸ்தூரிபா பள்ளியில் அவளுக்கு உத்தியோகம் கிடைத்தது.

எட்டு வருடங்களுக்குப் பின் இன்று மீண்டும் ரகுவைப் பார்க்கும் வாய்ப்பு சுமதிக்குக் கிடைத்தது. என்றாவது ஒருநாள் அவனைப்

பார்க்க மாட்டோமா என்று ஏங்கிய அவள் கண்கள் அன்று ரகுவைப் பார்த்து விட்டன.

சுமதியின் உள்ளம் பொருமியது. கவர்ச்சி வலை வீசி அவள் கன்னி யுள்ளத்தைக் கவர்ந்த போது ரகு எவ்வளவோ சபதங்கள் செய்தான். உள்ளத்திலே அவளைத் தவிர ஒருவருக்கும் இடமில்லை என்று உறுதிமொழி கூறிய ரகு இன்று எப்படி ஆறு வயதுச் சாருவுக்குத் தந்தையானான்! துணையின்றித் தனித்து வாழ முடியாத பெண்ணே துணிந்து கன்னி வாழ்க்கையை மேற்கொண்டபோது ஆணுக்கு மட்டும் எப்படி அது அசாத்திய மாயிற்று!

பள்ளிக்குச் சென்றாவது தன் உள்ளக் கொதிப்பை மறக்கலாம் என்று புறப்பட்டாள் சுமதி. வெளியே செல்லத் தயாராய் உடையுடுத்திக் கொண்டு வந்தவள், "யாரு! நம்ப ரகுவா! அடடே ஆச்சரியமாயிருக்கே! ஏது! இத்தனை வருஷத்துக்கப்புறம் இப்போதான் வழி தெரிஞ்சுதா!" என்று தாயார் யாரையோ வரவேற்பதைக் கண்டு திடுக்கிட்டு நின்றாள். வெளியே ரகுவின் குரல் கேட்டதும் அவள் உடல் சிலிர்த்தது! உடனே அங்கிருந்து போய்விட வேண்டுமென்று அவள் உள்ளம் பதைத்தது! ஆனால் எப்படிப் போவது! வாசலில் அவன் நின்று பேசிக்கொண்டிருக்கிறானே!

வந்த சுவடு தெரியாமல் மீண்டும் மாடிக்கே ஓடினாள். கன்னத்திலே கை யூன்றிய வண்ணம் கல்லாய்ச் சமைந்து எத்தனை நேரம் உட்கார்ந்தாளோ! மாடிப் படியிலே கேட்ட காலடி ஓசை அவளைத் திடுக்குறச் செய்தது!

"என்னை அடையாளம் தெரியவில்லையா!" என்று புன்னகையுடன் கேட்டுக் கொண்டே அவளெதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தான் ரகு. சுமதி பதில் பேசவில்லை. அவனை வெறித்துப் பார்த்தாள். பிறகு, "பள்ளிக்கூடத்துக்கு நேரமாகி விட்டது!" என்று சொல்லிப் புறப்படத் திரும்பினாள் சுமதி.

"சுமதி! நீதான் பேசுகிறாயா! உன்னைப் பிரிந்திருந்த இந்த ஒன்பது வருஷ காலத்திலும் ஒரு விநாடி கூட உன்னை என் உள்ளம் மறக்க வில்லை!"

"போதும், நிறுத்துங்கள்!" என்று சீறினாள் சுமதி. அவளது இதழ்கள் துடித்தன. "சாருவின் அம்மா இன்று உயிரோடிருந்தால் இப்படி என்னிடம் பேசிக் கொண்டு நிற்பீர்களா!" என்று வெகு ஆத்திரத்துடன் கேட்டாள். ஆனால் மறு கணம் அவன் கூறியதைக் கேட்டதும் அவள் அப்படியே மலைத்துப் போனாள். சுமதியின் செவிகள் அவளையு மறியாது ரகுவின் பேச்சைக் கூர்ந்து கவனித்தன. கேட்கக் கேட்க அவளது முக பாவமும் விநாடிக்கு விநாடி மாறிக் கொண்டு வந்தது.

* * *

படிப்பை முடித்துக்கொண்டு ஊருக்குத் திரும்பிய ரகு, சுமதியும் அத்தையும் வீட்டை விட்டுப் போன விஷயம் கேட்டதும் பெரிதும் திகைத்துப் போனான். ருக்மிணி தன் குற்றத்தை மறைத்து அவர்கள்மீதே சாமர்த்திய மாகப் பழி சுமத்தினாள். என்றாலும் ரகுவின் மனம் அதை நம்ப மறுத்தது.

அத்தையும் சுமதியும் எங்கு போயிருக்கக் கூடும் என்று அவனால் கொஞ்சமும் ஊகிக்க முடியவில்லை. ரகுவின் மனத்திலே ஏக்கமும் ஏமாற்றமும் சூழ்ந்தன. சென்னையிலே பெரிய உத்தியோகமும் கை நிறையச் சம்பளமும் கிடைத்தும் அவன் மன நிம்மதி பெறவில்லை. இந்நிலையில் அவன் தந்தை இறந்தார்.

ரகுவுக்குத் திருமணம் செய்து பார்க்கத் துடியாய்த் துடித்தாள் ருக்மிணி. ஆனால் ரகு ஒரே பிடிவாதமாக மறுத்து விட்டான்.

ரகுவுக்கும் அவன் தாயாருக்கும் திடீரென்று பேரிடி ஒன்று விழுந்ததுபோலாயிற்று. முதல் பிரசவத்துக்கு வந்திருந்த ரகுவின் தங்கை மீனா, ஒரு பெண் குழந்தையைப் பெற்று விட்டுத் தனது கடமை முடிந்து விட்டதாகக் கருதி இவ்வுலகை விட்டு மறைந்து விட்டாள். ரகுவின் பிடிவாத குணத்தோடு இந்தத் துக்கமும் கலந்து கொள்ளவே ருக்மிணியும் இறந்து விட்டாள்.

தாயைப் பிரிந்து தவிக்கும் தன் தங்கையின் குழந்தை சாருவுக்கு ரகுவே தாயும் தந்தையுமாக விளங்கினான். சிறுமி சாருவை வளர்க்கும் பணியில் சுமதியைப் பிரிந்திருக்கும் துயரத்தை அவனால் தாங்க முடிந்தது.

ரகு தன் கதையைச் சொல்லி நிறுத்தினான். அதற்கப்புறம் அவன் என்ன சொன்னானோ அதெல்லாம் சுமதியின் செவிகளில் விழவில்லை. கண்களில் நீர் பிரவாகம் எடுத்தது.

"சுமதி!" என்று அழைத்துக் கொண்டே தன் கண்ணீரைத் துடைத்த ரகுவின் கையை இழுத்து நெஞ்சிலே பொருத்திக் கொண்டாள் சுமதி. ரகுவுக்கு மெய் சிலிர்த்தது. "இதென்ன, சுமதி!" என்று ஆச்சரியமும் ஆனந்தமும் பொங்க அவளைப் பார்த்தான்.

சுமதி பதில் சொல்லவில்லை. காவியம் பேசும் அவள் கருவிழிகள்தான் பேசின.

"ஓகோ!" என்று விஷமப் புன்னகையுடன் கூறிய ரகு அவள் நிலா முகத்தை நிமிர்த்தினான்.

"அடடா! நம் மகிழ்ச்சியிலும் பூரிப்பிலும் நம் பெண் சாருவை மறந்து விட்டோமே! அவளைப் போய்ப்பார்க்க வேண்டாமா! ஜுரம் எப்படி யிருக்கிறதோ!" என்றாள் சுமதி.

"ஐயையோ! 'நம்ம பெண்' என்று சொல்லாதே! எனக்குப் பயமாயிருக்கிறது! அன்றைக்கு வீட்டுக்கு வந்து விட்டு விர்ரென்று ஓடி விட்டதைப் போல் நீ இங்கிருந்து ஓடி விடாம லிருக்க வேண்டுமே! மருமகள் சாருவுக்கு என்று சொல்லு! சாருவுக்குத் தன் பச்சரே மாமியாக வந்து விட்டாள் என்று தெரிந்தால் ஜுரம் பஞ்சாய்ப் பறந்து விடும்" என்றான் ரகு.

அளவற்ற ஆனந்தத்தினால் பூரித்த அவள் முகம் இதைக் கேட்டு வெட்கத்தினால் தலை குனிந்தது.

"போதும்! உங்கள் கேலிப் பேச்சு! குழந்தை உள்ளத்தை மாமா, மாமி என்று சொல்லிப் புண்படுத்தி விடாதீர்கள். சாருவைப் பார்த்த உடனேயே எனக்குப் பிடித்து விட்டது. அன்றைக்கே அவளிடம் இனி அவளுக்கு அம்மாவாக இருப்பதாக வாக்கு அளித்து விட்டேன்!" என்று கூறினாள் சுமதி. ரகு அவளை வியப்புடன் பார்த்தான்.

சுமதி பச்சரே தனக்குத் தாயாராக வந்து விட்டாள் என்பதைச் சாரு அறிந்ததும் முன் போலவே ஜுரத்தையும் மறந்து குதித்துக் கும்மாள மடிக்கத் தொடங்கி விட்டாள்.

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras-10. Editor: Mi. Pa. Somasundaram.

ஹிமாலயா புக்கே உபயோகித்து அதன் அதிகப்படியான புதுப்பொலிவை உணருங்கள்

–நாள்முழுவதும்!



வதனத்திற்கு ஹிமாலயா
டாய்லெட் புக்கே
பவுடர் ஒரு சிறந்த தின
சரி அழகு சாதனம்—
மணமுள்ளது,
மிருதுவானது,
குளிர்ச்சியானது.



ஹிமாலயா புக்கே

டாய்லெட் அண்டு டால்கம் பவுடர்ஸ்

வெள்ளைக் கோடிட்ட ஹிமாலயா புக்கே
டாய்லெட் பவுடர் டின் ஒரு பவுடர்
பேடுடன் கூடியது.

HBP. 13A-50 TM இராஸ்மிக் லெய்மன் லிட. லண்டனுக்காக இந்தியாவில் செய்தது.

REGISTERED No. M. 4392
Registered as newspaper Ceylon

